**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 13-8-2012 Issued : 13-8-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, மார்ச் 30, 2012—தொகுதி 21—எண் 1**

**Friday the 30th March, 2012—Volume 21—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

# 30–3–2012

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-x |
| Governor and Council of Ministers | xi-xv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii-xx |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxxi |
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-42 |
| **2. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 43 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| காவிரி நீரைத் தமிழகத்திற்குத் தர கர்நாடக அரசு மறுப்பதுடன் மேகதாது என்ற இடத்தில் புதிய அணை கட்ட முயற்சிப்பது | 43-64 |
| திரு. ச. இராமச்சந்திரன் | 44-46 |
| முனைவர் கோவி. செழியன் | 47-49 |
| மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் | 49 |
| *திரு. க. பாலகிருஷ்ணன் | 50-52 |
| திரு. எம். ஆறுமுகம் | 52-53 |
| *முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 54-55 |

பக்கங்கள்

**3. சிறப்புக் கவன ஈர்ப்பு**—தொடர்ச்சி

காவிரி நீரைத் தமிழகத்திற்குத் தர கர்நாடக அரசு மறுப்பதுடன் மேகதாது என்ற இடத்தில் புதிய அணை கட்ட முயற்சிப்பது—தொடர்ச்சி

| | |
|---|---|
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 55-56 |
| திரு. உ. தனியரசு | 56-60 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 60-64 |

**4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 64-65 |

**5. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்—** 65-169

| | |
|---|---|
| *திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் | 65-69, 71-73, 75,77-81 |
| *மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 67,68,168 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 69,75,76, 85-86,115 |
| திரு. தங்கம் தென்னரசு | 69-70 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 70,71-72-73, 92,99,107,115, |
| மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 74,135-137, 155,157-158 |
| *மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 76,77,79-80, 154,157 |
| *திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி | 81-91 |
| *திரு. மு. திராவிடமணி | 92-98,100 |




பக்கங்கள்

**5. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்—** தொடர்ச்சி

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 98,128, 143-145, 153,169 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 99,150,155,156 |
| * திரு. கே.பி. நாகராஜன் | 100-109 |
| *திரு. க. பீம்ராவ் | 109-117 |
| *மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 116 |
| திரு. வி.சி. ஆறுக்குட்டி | 117-124 |
| *திரு. எஸ்.பி. முத்துக்குமரன் | 124-130,132, 139,140,142, |
| *மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி | 129,167-168 |
| *மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி | 130-134, 138-139 |
| செல்வி கே. பாலபாரதி | 132-133,136-137 |
| *மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 134-135,162-163 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 137-139 |
| மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி | 141-142 |
| திரு. மு. முருகன் | 142-148 |
| *திரு. க. பாண்டியராஜன் | 142,143 |
| திரு. என்.ஆர். ரெங்கராஜன் | 149-154,156-160 |
| திரு. எம். ஆறுமுகம் | 155 |
| மாண்புமிகு திரு. செ. தாமோதரன் | 160 |
| திரு. து. முருகேசன் | 160-162,165-167 |

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 169-170

## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – முனைவர் கே. ரோசய்யா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

   பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை

2. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

   நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள்

3. **வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன்:**

   வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு

4. **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:**

   மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

5. **நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:**

   நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**6. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**7. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

**9. வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு



**10. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**11. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**12. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**13. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

**14. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**15. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:**

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**16. ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் மற்றும் சத்துணவுத் திட்டம்

**17. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:**

*பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்*

**18. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:**

*கால்நடை பராமரிப்பு*

**19. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

*தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்*

**20. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:**

*கைத்தறி மற்றும் துணிநூல்*

**21. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:**

*கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்*

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:**

*சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு*



**24. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:**

*ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

**25. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:**

*போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்*

**26. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:**

*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*

**27. பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:**

*பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு*

**28. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:**

*தகவல் தொழில்நுட்பம்*

**29. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்*

**30. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

**31. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**32. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்ஃபு உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்

**33. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – Dr. K. ROSAIAH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home

**2. Minister for Finance** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Finance, Planning, Legislative Assembly, Elections and Passports

**3. Minister for Revenue** .. **The Hon. Thiru K.A. Sengottaiyan:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies

**4. Minister for Electricity & Prohibition and Excise** .. **The Hon. Thiru Natham R. Viswanathan:**

Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses

**5. Minister for Municipal Administration & Rural Development** .. **The Hon. Thiru K.P. Munusamy:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

6. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently abled and Social Reforms

8. **Minister for Higher Education** .. **The Hon. Thiru P. Palaniappan:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology

9. **Minister for Commercial Taxes & Registration, Law, Courts and Prisons** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Commercial Taxes & Registration and Stamp Act, Law, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption

10. **Minister for Agriculture** .. **The Hon. Thiru S. Damodaran:**

Agricultre, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development

11. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Sellur K. Raju:**

Co-operation, Statistics and Ex-Servicemen Welfare



12. **Minister for Forests** .. **The Hon. Thiru K.T. Patchaimal:**

Forests and Cinchona

13. **Minister for Highways & Minor Ports** .. **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**

Highways & Minor Ports

14. **Minister for Food** .. **The Hon. Thiru R. Kamaraj:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. **Minister for Milk and Dairy Development** .. **The Hon. Thiru V. Moorthy:**

Milk and Dairy Development

16. **Minister for Rural Industries and Nutritious Noon Meal** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Rural Industries including Cottage Industries and Small Industries and Nutritious Noon Meal

17. **Minister for Public Works** .. **The Hon. Thiru K.V. Ramalingam:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works

18. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru T.K.M. Chinnayya:**

Animal Husbandry

19. **Minister for Industries** .. **The Hon. Thiru P. Thangamani:**

Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives

20. **Minister for Handlooms & Textiles** .. **The Hon. Dr. S. Sundararaj:**

Handlooms & Textiles

| | |
|---|---|
| **21. Minister for Khadi and Village Industries ..** | **The Hon. Thiru P. Sendur Pandian:** Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan |
| **22. Minister for Tourism ..** | **The Hon. Tmt. S. Gokula Indira:** Tourism, Tourism Development Corporation |
| **23. Minister for Environment ..** | **The Hon. Thiru B.V. Ramanaa:** Environment and Pollution Control |
| **24. Minister for Adi Dravidar & Tribal Welfare ..** | **The Hon. Thiru N. Subramanian:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| **25. Minister for Transport ..** | **The Hon. Thiru V. Senthil Balaji:** Trnasport, Nationalised Transport, Motor Vehicles Act |
| **26. Minister for Fisheries ..** | **The Hon. Thiru K.A. Jayapal:** Fisheries and Fisheries Development Corporation |
| **27. Minister for School Education and Sports and Youth Welfare ..** | **The Hon. Thiru N.R. Sivapathi:** School Education and Archaeology, Sports and Youth Welfare, Tamil Official Language and Tamil Culture |
| **28. Minister for Information Technology ..** | **The Hon. Thiru N. Subramanian:** Information Technology |



| | |
|---|---|
| **29. Minister for Information and Special Programme Implementation ..** | **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto |
| **30. Minister for Labour ..** | **The Hon. Thiru S.T. Chellapandian:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment |
| **31. Minister for Health ..** | **The Hon. Dr. V.S. Vijay:** Health, Medical Education and Family Welfare |
| **32. Minister for Backward Classes and Minorities Welfare ..** | **The Hon. Thiru A. Mohammedjan:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf |
| **33. Minister for Hindu Religious and Charitable Endowments ..** | **The Hon. Thiru M.S.M. Anandan:** Hindu Religious and Charitable Endowments |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. ப. தனபால்*

## மாற்றுத் தலைவர்கள்[#]

*திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்*

*திரு. தங்க. தமிழ்ச்செல்வன்*

*திரு. கே.பி. அன்பழகன்*

*திரு. ஆர். சின்னசாமி*

*திரு. பி.ஜி. நாராயணன்*

*திரு. சு. குணசேகரன்*

## செயலாளர்

*திரு. அ.மு.பி. ஜமாலுதீன்*

---

*# 28-3-2012 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | |
|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ம. பன்னீர் செல்வம், எம்.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ல. பத்மாவதி, பி.எஸ்சி., எஸ்.ஓ.ஜி.இ. | .. குழு அலுவலர் |
| திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. சங்கர், பி.காம்., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி கோ.மு. வனஜா, எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. வே. ரவிசங்கர், பி.எஸ்சி., எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. கி. சீனிவாசன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.ஜி.எல்., சி.எல்.ஐ.எஸ். | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. ந. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ப. மனோகரன், எம்.ஏ., பி.எட்., | .. சார்புச் செயலாளர் |
| திருமதி க. செந்தாமரை, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி அ. ராஜலெட்சுமி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. இரா. விஜயகுமார், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ப. தேவபிரான், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| திரு. கு. தண்டபாணி, பி.காம். | .. | செயலாளரின் தனிச் செயலர் |
| திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. சுரேஷ் குமார், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திருமதி லிசு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. பா. சுப்பிரமணியன், பி.காம்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. | .. | கலசப்பாக்கம் |
| 2. | அசோக், திரு. எம்.கே. | .. | வேளச்சேரி |
| 3. | அண்ணாதுரை, திரு. இரா. | .. | மதுரை தெற்கு |
| 4. | அப்துல் ரஹீம், திரு. எஸ். | .. | ஆவடி |
| 5. | அரங்கநாதன், திரு. ஆ.க. | .. | கீழ்பெண்ணாத்தூர் |
| 6. | அருண் சுப்பிரமணியன், திரு. மு. | .. | திருத்தணி |
| 7. | அருண் பாண்டியன், திரு. செ. | .. | பேராவூரணி |
| 8. | அருள்செல்வன், திரு. ஆர். | .. | மயிலாடுதுறை |
| 9. | அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. | .. | சேலம் வடக்கு |
| 10. | அழகுவேலு, திருமதி க. | .. | கள்ளக்குறிச்சி (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. க. | .. | கும்பகோணம் |
| 13. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 14. | அன்பழகன், திரு. ஜெ. | .. | சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி |
| 15. | அஸ்லம் பாஷா, திரு. அ. | .. | ஆம்பூர் |
| 16. | ஆறுக்குட்டி, திரு. வி.சி. | .. | கவுண்டம்பாளையம் |
| 17. | ஆறுமுகம், திரு. எம். | .. | வால்பாறை (செ.வ.) |
| 18. | ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.. | .. | திருப்பூர் வடக்கு |
| 19. | இந்திராகாந்தி, திருமதி த. | .. | துறையூர் (செ.வ.) |

20. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்

21. இராமச்சந்திரன், திரு. ச. .. ஆலந்தூர்

22. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி

23. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு

24. இராஜி, திரு. வி.எஸ். .. செய்யூர் (செ.வ.)

25. இராஜேந்திரன், திரு. இரா. .. குறிஞ்சிப்பாடி

26. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்

27. உதயகுமார், திரு. ஆர்.பி. .. சாத்தூர்

28. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி(செ.வ.)

29. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. .. எடப்பாடி

30. கடம்பூர் ராஜூ, திரு. .. கோவில்பட்டி

31. கணிதா சம்பத், திருமதி எஸ். .. மதுராந்தகம் (செ.வ.)

32. கணேசன், திரு. பா. .. உத்திரமேரூர்

33. கணேஷ்குமார், திரு. அ. .. செஞ்சி

34. கதிரவன், திரு. பி.வி. .. உசிலம்பட்டி

35. கந்தன், திரு. கே.பி. .. சோழிங்கநல்லூர்

36. கருணாநிதி, திரு. மு. .. திருவாரூர்

37. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. .. அவினாசி (செ.வ.)

38. கருப்பையா, திரு. பழ. .. துறைமுகம்

39. கருப்பையா, திரு. மு.வீ. .. சோழவந்தான் (செ.வ.)

40. கலை அரசு, திரு. ம. .. அணைக்கட்டு

41. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்

42. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்



43. காமராஜ், திரு. என்.வி. .. வேதாரண்யம்

44. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

45. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி

46. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)

47. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.எ. .. பர்கூர்

48. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி

49. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்

50. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செ.வ.)

51. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை

52. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)

53. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்

54. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை

55. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்

56. கோகுல இந்திரா, திருமதி எஸ். .. அண்ணா நகர்

57. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்

58. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

59. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்

60. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செ.வ.)

61. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்

62. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்

63. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்

64. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு

65. சந்திரசேகர், திரு. ஆர். .. மணப்பாறை

66. சம்பத், திரு. எம்.சி. .. கடலூர்
67. சம்பத்குமார், திரு. கோவி. .. வாணியம்பாடி
68. சம்பத்குமார், திரு. ப. .. திருச்செங்கோடு
69. சரத்குமார், திரு. ரா. .. தென்காசி
70. சவுந்தரராசன், திரு. அ. .. பெரம்பூர்
71. சாந்தி, திருமதி ஆர். .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
72. சாமி, திரு. ஆர். .. மேலூர்
73. சிவக்கொழுந்து, திரு. ப. .. பண்ருட்டி
74. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
75. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். .. நெய்வேலி
76. சிவபதி, திரு. என்.ஆர். .. முசிறி
77. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்
78. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
79. சின்னையா, திரு. டி.கே.எம். .. தாம்பரம்
80. சீனிவாசன், திரு. ஆர். .. ஆற்காடு
81. சுந்தரம், திரு. பி.எல். .. பவானிசாகர் (செ.வ.)
82. சுந்தரராஜ், டாக்டர் ச. .. பரமக்குடி (செ.வ.)
83. சுந்தர்ராஜன், திரு. ஆர். .. மதுரை மத்தி
84. சுபா, திருமதி ர. .. கெங்கவல்லி (செ.வ.)
85. சுப்பிரமணியன், திரு. ந. .. செய்யாறு
86. சுப்பையா, திரு. இ. .. அம்பாசமுத்திரம்
87. சுப்ரமணியன், திரு. ந. .. கந்தர்வகோட்டை (செ.வ.)
88. சுரேஷ்குமார், திரு. டி .. செங்கம் (செ.வ.)



89. செங்குட்டுவன், திரு. டி. .. வேப்பனஹள்ளி
90. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
91. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
92. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்
93. செந்தில்பாலாஜி, திரு. வி. .. கரூர்
94. செந்தூர் பாண்டியன், திரு. பூ. .. கடையநல்லூர்
95. செல்லப்பாண்டியன், திரு. சி.த. .. தூத்துக்குடி
96. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு
97. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
98. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு
99. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி
100. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)
101. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி
102. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்
103. சோழன் சித. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி
104. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
105. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
106. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
107. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
108. தங்கவேலன், திரு. சுப. .. திருவாடனை
109. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு
110. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு
111. தமிழரசன், முனைவர் செ.கு. .. கீழ்வைத்திணான்குப்பம் (செ.வ.)

112. தமிழழகன், திரு. க. .. திட்டக்குடி (செ.வ.)

113. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செ.வ.)

114. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி

115. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செ.வ.)

116. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்

117. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்

118. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு

119. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)

120. தினகரன், திரு. க. .. சூலூர்

121. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்

122. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு

123. துரைமுருகன், திரு. .. காட்பாடி

124. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

125. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்

126. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. காங்கேயம்

127. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்

128. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி

129. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செ.வ.)

130. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்

131. நாகைமாலி, திரு. வீ.பி. .. கீழ்வேளூர் (செ.வ.)

132. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்

133. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி



134. நாராயணன், திரு. பி.ஜி. .. பவானி

135. நீலகண்டன், திரு. வ. .. திரு.வி.க. நகர் (செ.வ.)

136. பச்சைமால், திரு. கே.டி. .. கன்னியாகுமரி

137. பரஞ்ஜோதி, திரு. மு. .. திருச்சிராப்பள்ளி மேற்கு

138. பரமசிவம், திரு. கே.பி. .. பல்லடம்

139. பவுன்ராஜ், திரு. சு. .. பூம்புகார்

140. பழனிசாமி, திரு. கே.சி. .. அரவக்குறிச்சி

141. பழனிச்சாமி, திரு. ச. .. வேடசந்தூர்

142. பழனியப்பன், திரு. பி. .. பாப்பிரெட்டிப்பட்டி

143. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்

144. பாண்டியராஜன், திரு. க. .. விருதுநகர்

145. பாபு முருகவேல், திரு. ர.ம. .. ஆரணி

146. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை

147. பார்த்தசாரதி, திரு. ப. .. விருகம்பாக்கம்

148. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். .. மேட்டூர்

149. பாலகிருஷ்ணன், திரு. க. .. சிதம்பரம்

150. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்

151. பாஸ்கர், திரு. அ. .. தருமபுரி

152. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்

153. பிரபாகர், திரு. ஜே.சி.டி. .. வில்லிவாக்கம்

154. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்

155. பீம்ராவ், திரு. க. .. மதுரவாயல்

156. புத்திசந்திரன், திரு. .. உதகமண்டலம்

157. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்

158. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்

159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

161. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

162. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ஆ.வா.)

163. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை

164. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)

165. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)

166. போஸ், திரு. ஏ.கே. .. மதுரை வடக்கு

167. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)

168. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்

169. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு

170. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

171. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்

172. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்

173. மனோரஞ்சிதம், திருமதி .. ஊத்தங்கரை (செ.வ.)

174. மாதேஸ்வரன், திரு. சு. .. ஆத்தூர் (செ.வ.)

175. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்

176. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி

177. முத்துக்குமரன், திரு. எஸ்.பி. .. புதுக்கோட்டை



178. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்

179. முத்துசெல்வி, திருமதி ச. .. சங்கரன்கோவில் (செவ)

180 முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

181. முருகன், திரு. மு. .. முதுகுளத்தூர்

182. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

183 முருகேசன், திரு. து. .. செங்கல்பட்டு

184. முனுசாமி, திரு. கே.பி. .. கிருஷ்ணகிரி

185. முஹம்மத்ஜான், திரு. அ. .. இராணிப்பேட்டை

186. மூர்த்தி, திரு. வி. .. மாதவரம்

187. மைக்கேல் ராயப்பன், திரு. சி. .. ராதாபுரம்

188. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

189. மோகன், திரு. ப. .. சங்கராபுரம்

190. ரமணா, திரு. பி.வி. .. திருவள்ளூர்

191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. அந்தியூர்

192. ரமேஷ், திரு. கா.கோ. .. திருப்பத்தூர்

193. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

194. ராமசாமி, திரு. ஆ. .. நிலக்கோட்டை (செ.வ.)

195. ராமச்சந்திரன், திரு. கா. .. குன்னூர்

196. ராமமூர்த்தி, திரு. ஆர். .. விக்கிரவாண்டி

197. ராஜநாயகம், திரு. மு. .. அறந்தாங்கி

198. ராஜலட்சுமி, திருமதி ஆர். .. மயிலாப்பூர்

199. ராஜா, திரு. ஏ.கே.டி. .. திருப்பரங்குன்றம்

200.. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

201. ராஜா, திரு. பொன். .. பொன்னேரி (செ.வ.)

202. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

203. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்

204. ரெங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

205. ரெத்தினசாமி, திரு. மு. .. திருவையாறு

206. லாசர், திரு. ஏ. .. பெரியகுளம் (செ.வ.)

207. லிங்கமுத்து, திரு. கு. .. குடியாத்தம் (செ.வ.)

208. வளர்மதி, திருமதி பா. .. ஆயிரம் விளக்கு

209. விஜயகாந்த், திரு. .. ரிஷிவந்தியம்

210. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

211. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

212. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. .. சங்கரி

213.. விஜய், டாக்டர் வி.எஸ். .. வேலூர்

214. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

215. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

216. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

217. வெங்கடேசன், திரு. எல். .. திருக்கோவிலூர்

218. வெற்றிவேல், திரு. பு. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

219. வேணுகோபாலு, திரு. கேஎஸ்.என். .. பழனி

220. வேதாச்சலம், திரு. எஸ். .. அம்பத்தூர்



221. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்

223. வைகைச்செல்வன், டாக்டர் .. அருப்புக்கோட்டை

224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

225. வைரமுத்து, திரு. பி.கே. .. திருமயம்

226. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. இராமநாதபுரம்

227. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்

228. ஜானகிராமன், திரு. ஐ. .. வானூர் (செ.வ.)

229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

230. ஜெயசுதா, திருமதி எல். .. போளூர்

231. ஜெயபால், திரு. கே.ஏ. .. நாகப்பட்டினம்

232. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஸ்ரீரங்கம்

233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

234. ஹரிதாஸ், டாக்டர் த. .. திண்டிவனம் (செ.வ.)

235. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஏ. நவநீதகிருஷ்ணன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043, பங்குனி 17

## 2012 மார்ச் 30, வெள்ளிக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறையென்று வைக்கப் படும்."*

*நீதி நெறிமுறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை மக்கள் ஒப்பற்ற தெய்வம் என்று மதித்துப் போற்றுவார்கள்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். *வினா எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**21—**

### வீட்டுமனைப் பட்டா

***7130—திரு. இரா. துரைக்கண்ணு:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பாபநாசம் தொகுதியில் சொந்த வீட்டுமனை இல்லாத ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், சொந்தமாக வீட்டு மனை*

[2012 மார்ச் 30

இல்லாத 128 பேர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றி வாழ்வளித்துவரும் ஏழை எளிய மக்களின் கண்கண்ட தெய்வம், கேட்காமலேயே வாரி வழங்கும் வள்ளலின் வாரிசு, மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தைத் தன்னிகரில்லா மாநிலமாக, முன்மாதிரி மாநிலமாக உருவாக்கி வரும் அரசியல் மாமேதை, இந்திய நாட்டின் வளர்ச்சிக்கும், இந்திய மக்களின் நல்வாழ்விற்கும் நல்லாட்சி அமைய இந்தியப் பேரரசுக்குத் தலைமை ஏற்க இருக்கும் தமிழகத்தின் ஈடு இணையற்ற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதம் வணங்குகின்றேன். அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அனைத்து நலத் திட்டங்களையும் வாரி வழங்கிவரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், பாபநாசம் தொகுதியிலுள்ள வீட்டுமனை இல்லாத பலருக்கும் வீட்டுமனை வழங்கி வருகின்றார்கள். விடுபட்ட, சொந்த வீட்டுமனை இல்லாத அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இலவச வீட்டுமனை வழங்கி, அவர்களுக்கு அம்மா அவர்களின் ஆட்சியில் வாழ்வளிக்க வேண்டுமாய் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள்மூலமாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பற்ற தலைவியாக இருக்கிற, மனித நேயத்தோடு ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, அவர்களுக்கு இருக்க இடம் வேண்டுமென்ற அடிப்படையில் ஓராண்டுக்கு ஒரு இலட்சம் இலக்கு என்ற முறையில் ஒரு இலட்சத்து 18 ஆயிரம் பேர்களுக்குப் பட்டாக்கள் வழங்குகிற வரலாற்றை அம்மா அவர்கள் உருவாக்கிக் காட்டவிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தஞ்சை மாவட்டத்திலே தஞ்சாவூர்–463 பேர்கள்; திருவையாறு–497 பேர்கள்; ஒரத்தநாடு–461 பேர்கள்; கும்பகோணம்–586 பேர்கள்;



2012 மார்ச் 30]

திருவிடைமருதூர்–422 பேர்கள்; பாபநாசம்–366 பேர்கள்; பட்டுக்கோட்டை–640 பேர்கள்; பேராவூரணி–603 பேர்கள். என ஏறத்தாழ இந்த 6 மாத காலத்தில் மட்டும் 4,318 பேர்களுக்கு தஞ்சை மாவட்டத்திலே வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய பாபநாசம் பகுதியில் ஏழை எளிய மக்களுடைய நலன் கருதி, அவர்களுக்குக் கூடுதலாக பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று ஒரு வேண்டுகோளை இங்கே வைத்திருக்கிறார்கள். மனித நேயமிக்க தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி ஆட்சியில் அதை நிறைவேற்றுவோம் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, தருமபுரி நகரத்தில் அண்ணா நகர், எம்.ஜி.ஆர். நகர், செங்கோடிபுரம், நரசியர்குளம் ஆகிய இந்த 4 ஊர்களிலும் சுமார் 1,020 வீடுகளில் மக்கள் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்குவார்களா எனத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய விதிமுறைக்கு ஏற்ப இருக்குமேயானால் அங்கே பட்டாக்கள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் நெடுஞ்சாலைப் புறம்போக்கு என்று

[2012 மார்ச் 30

சொல்லக்கூடிய பகுதிகளில் 40 ஆண்டுக் காலம், 50 ஆண்டுக் காலம் குடியிருக்கக்கூடிய மக்களை வெளியேற்றுவதற்கு அரசு முயற்சிக்கிறது. நேற்றையதினம்கூட என்னுடைய தொகுதியில், கோட்டப்பட்டி, தீர்த்தமலையிலே அவ்வாறு முயற்சிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஒரு மாற்று இடத்தை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, நீங்கள் ஒரு Senior member. பல முறை சொல்லியிருக்கிறேன், கேள்வி வடிவத்தில் கேளுங்கள் என்று. ஆரம்பத்திலேயே கட்டுரை வடிவத்திற்குப் போகாதீர்கள்.

முற்பகல் 10–05

**திரு. ப. டில்லி பாபு:** மாற்று இடத்தை வழங்கி, அதற்குப் பிறகு வெளியேற்றுவது என்பது உண்மையிலேயே பாதுகாப்பான அம்சமாக இருக்கும். தருமபுரி நகராட்சிக்குட்பட்ட செங்கொடிபுரம் பகுதியில் வெள்ளையர் காலத்திலிருந்து, குறிப்பாக 60, 70, 80 ஆண்டுக் காலம் என 56 சென்ட் நிலத்திலே 54 குடும்பத்தினர் வாழ்ந்து வருகிறார்கள். நாங்களும் பல ஆண்டுக் காலமாக அதற்காக நீண்ட நெடிய போராட்டங்கள் நடத்தியதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மற்றும் உயர் கல்வித் துறை அமைச்சர் ஆகியோர் நன்கு அறிவார்கள். துப்புரவுத் தொழிலாளர்கள் வாழக்கூடிய பகுதி. நகராட்சிக்குத் தேவை என்ற ஒரு காரணத்திற்காக பட்டா வழங்க மறுத்திருக்கிறார்கள். நகராட்சியிலே குடியிருக்கக்கூடிய இப்படிப்பட்ட மக்களுக்கும், அதேபோல சாலை ஓரங்களில் 50 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருக்கும் மக்களுக்கும் பட்டா வழங்க அரசு சிறப்பாக ஏதாவது உத்தரவிடுமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாக, எப்படி கேள்வி கேட்க வேண்டுமென்று உங்களுக்கு வகுப்பு எடுக்க வேண்டும். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நெடுஞ்சாலைத் துறைக்குட்பட்ட பகுதியிலே குடியிருக்கிற ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுகிறபோது, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலே இடத்தை ஒதுக்கி, அதற்குப்பிறகு



2012 மார்ச் 30]

ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையிலும், நிதி ஒதுக்கீடு செய்தவுடனேயே அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. விரைந்து அந்தப் பணிகளை மேற்கொள்கின்றபோ—நீங்களே கேட்கிறீர்கள், நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கிற சாலைகள் நெரிசலாக இருக்கிறது, விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்கிறீர்கள். ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்று நீங்கள் கேட்கிறீர்கள். நீங்கள் வருகிறபோது காலதாமதம் ஏற்படுவதற்கு நெரிசல்தான் காரணம் என்றும் சொல்கிறீர்கள். இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டுதான் ஆக்கிரமிப்பாளர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அதை மனதிலே கொண்டு, இடமே இல்லாதவர்களுக்கு வேறு மாற்று இடம் தருவதற்கு அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது காரைக்குடி தொகுதியில் அண்ணா நகர், ஜீவா நகர், சேர்வார்ஊரணி, பாரதி நகர், வைரபுரம் போன்ற பகுதிகளில் நூறு ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் குடியிருந்து வருகிறார்கள். சென்ற ஆட்சியாளர்கள் அப்பகுதிகளுக்குப் பட்டா வழங்குவதாகச் சொல்லி, அண்ணா நகர் பகுதிக்கு ஜீவா நகர்ப் பகுதியிலேயுள்ள சர்வே எண்ணையும், ஜீவா நகர் பகுதியிலே உள்ளவர்களுக்கு அண்ணா நகர் பகுதியிலுள்ள சர்வே எண்ணையும் மாற்றி பட்டா வழங்கிவிட்டார்கள். அப்படி இருக்கக்கூடிய இடங்களுக்கு அரசு நிர்ணயித்த தொகையையும் அவர்கள் வழங்கிவிட்டார்கள். இப்போது அந்த மக்களுடைய கதி மிகவும் மோசமாக இருக்கின்றது. ஆகவே, இதற்கெல்லாம் தீர்வு தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்களுடைய பெயரைச் சொல்லிக் கொண்டிருப்பவர்களே அண்ணா பெயருள்ள

இடத்திற்குப் பட்டா தரவில்லை என்று உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அரசு இதனை மனதிலே கொண்டு, அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அண்ணாவினுடைய பெயரைத் தாங்கிக் கொண்டிருக்கிற இயக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. அண்ணாவைக் கொடியில் பொருத்திக் கொண்டிருக்கிற இந்த இயக்கத்தில் அந்தக் குறைபாடுகள் இருக்காது. அதுபோன்ற குறைபாடுகளை எங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவீர்களேயானால் உடனடியாக அது நிறைவேற்றித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில் வாடகைகூட கொடுக்க முடியாத ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவை இப்பொழுது அரசு வழங்கி வருகிறது. அது தொடர்ந்து வழங்கப்பட வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். அடுத்தபடியாக, பல ஆண்டுகள் குடியிருக்கக்கூடிய குடிசை வீடுகளுக்கான பட்டா வழங்க வேண்டும். One time அரசாணையின் ஆயுள்காலம் முடிந்துவிட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். எனவே, அந்த அரசாணையை நீங்கள் மீண்டும் போட்டால்தான் இருக்கின்ற வீடுகளுக்குப் பட்டா கொடுக்க முடியும். ஆகவே, அதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு சென்று, அரசாணை பிறப்பித்து பட்டா வழங்க முன்வருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரசாணையின் காலவரையறை முடிந்த காரணத்தினால் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.





**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், மாப்பிள்ளையூரணி ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் மொத்தம் 40 குடியிருப்புகளில், 20 குடியிருப்புகளுக்கு, நிலம் ஒப்புடைப்பு செய்தும்கூட ஏறக்குறைய 20,000-க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு இன்றுவரையிலும் பட்டா வழங்கப்படவில்லை. எனவே, அந்தப் பட்டாவை விரைவாக வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கேள்வியையே நான் மனுவாக ஏற்றுக்கொண்டு, உடனடியாக அந்தத் துறையின் வட்டாட்சியர், கோட்டாட்சியர்மூலமாகப் பரிசீலனை செய்து, நியாயம் இருப்பின் அது நிறைவேற்றித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள்.

**திரு. செ. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ஏற்காடு மலைப் பகுதியில், பல பகுதிகளில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாமல் இருக்கின்றது. அது மலைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் ஏற்கெனவே கொடுத்துக் கொண்டிருந்த பட்டாக்கள் இப்போது வழங்கப்படாத நிலை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த மக்கள் குடியிருக்கும் பகுதிகளுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, மலைப் பகுதியாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மலையோரங்களில் வாழ்கின்ற

[2012 *மார்ச்* 30

*மக்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது. அது நத்தம் புறம்போக்காக இருந்தால் பட்டா வழங்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

**திரு. சு. ரவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் நகராட்சியில், சத்தியவாணிமுத்து நகரில் இரயில்வே துறைக்குச் சொந்தமான இடத்தில் சுமார் 80 ஆதி திராவிட மற்றும் அருந்ததிய இனத்தவர்கள் சுமார் 70 ஆண்டுக் காலமாக இரயில்வே துறைக்கு சொந்தமான இடத்தில் வீடு கட்டி வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் குடியிருக்கும் வீடுகளை காலி செய்ய வேண்டும் என்று இரயில்வே நிருவாகம் பல நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றது. அவர்களுக்குச் சொந்தமாக வீட்டு மனைகள் எதுவும் இல்லாமல் மிகவும் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த ஏழை மக்கள் 80 பேர்களுக்கு இலவசமாக வீட்டு மனைப் பட்டா வழங்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் நத்தம் புறம்போக்கு நிலங்கள் இருக்குமேயானால், அது உடனடியாகப் பரிசீலிக்கப்படும். இல்லையென்று சொன்னால், தனியார் இடங்கள் 1½ மடங்கு அளவிற்கு, அரசு மதிப்பீட்டிலிருந்து 1½ மடங்கு அளவிற்குக் கிடைக்குமேயானால் அதை உடனடியாகப் பரிசீலனை செய்து, அவர்களுக்குப் பட்டாக்கள் கொடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.*

**திரு. ஏ.ஏ. கருப்பசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி சட்டமன்றத் தொகுதி, கோவை மாவட்டத்தில் இணைந்துள்ளது. அதேபோல, முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அவினாசி தொகுதி இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, திருப்பூர் மாவட்டத்திற்கு 33 கிராம ஊராட்சிகள், அதேபோன்று கோவை மாவட்டத்திற்கு, அன்னூர் உட்பட 22 கிராம ஊராட்சிகள் இணைக்கப்பட்டு, அவினாசி தாலுகா திருப்பூர் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டது.*



2012 *மார்ச்* 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, உங்களுக்கு என்ன வேண்டும்? அதைச் சொல்லுங்கள்.*

**திரு. ஏ.ஏ. கருப்பசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னூர் தாலுகா மக்கள், கிட்டத்தட்ட ஐம்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோவை மாவட்டத்திற்குச் செல்ல வேண்டிய காரணத்தினால்,* Community Certificate, Income Certificate *போன்ற எந்த ஒரு சான்றிதழையும் அவர்கள் பெற இயலாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே, தனித் தாலுகா அமைத்துத் தருவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தத் தொகுதி மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி இது தாலுகா அமைப்பது குறித்த கேள்வியல்ல. இது பட்டா வழங்குவது குறித்த கேள்வி. எனவே தனிக் கேள்வி போடவும். இதுகுறித்து மாண்புமிகு அமைச்சரை நேரில் சென்று சந்தியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

**திரு. அ. கணேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதிக்குட்பட்ட, செஞ்சி ஒன்றியம் என்.ஆர். பேட்டை, நரசிங்கராயன்பேட்டை பகுதிகளில் கிட்டத்தட்ட 1,500–க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றார்கள். பல ஆண்டுகளாக அவர்கள் நிலப் பட்டாவிற்கு விண்ணப்பம் செய்தும், அந்தப் பகுதி, நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் விசாரணையில் உள்ளதாக அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த விசாரணையைத் துரிதப்படுத்தி அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு நிலப்பட்டா வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

[2012 மார்ச் 30

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையில் வழக்குகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத் துரிதப்படுத்தி, விரைந்து அவர்களுக்குப் பட்டாக்கள் வழங்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நகரப் பகுதியில் பல ஆண்டுக் காலமாக வாழும் மக்களுக்குப் பட்டா கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அந்தக் குறைபாடுகளை நீக்கி, அவர்களுக்குப் பட்டா கிடைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், மேட்டூர் நகரப் பகுதியில் வாழ்கின்ற மக்களிலே 30 சதவிகிதம் பேருக்குப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 70 சதவிகிதம் மக்களுக்குப் பட்டாக்கள் கிடைப்பதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளையெல்லாம் நீக்கி, அந்த மக்களுக்குப் பட்டா கிடைக்கும் நடவடிக்கையை அமைச்சர் எடுப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நகராட்சியைப் பொறுத்தவரையில், மேட்டூர் அணை இருக்கின்ற காரணத்தினால், சில பகுதிகளில் பட்டாக்கள் வழங்குவதில் தடைகள் இருக்கின்றன. அதை அரசு பரிசீலனை செய்து, நியாயம் இருப்பின், எந்தெந்த இடங்களில் பட்டாக்கள் வழங்கலாம் என்பதைப் பரிசீலித்து அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம் அவர்கள்.

**திரு. எஸ்.கே. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் விவசாயிகளுக்கு இலவசமாக இரண்டு ஏக்கர் பட்டா வழங்குவதில் பல்வேறு முறைகேடுகள்



2012 மார்ச் 30]

நடந்துள்ளன. அந்த இலவச பட்டா வழங்கும் திட்டத்தை மீண்டும் அரசு பரிசீலித்து, அதை இரத்து செய்து, ஏழைகளுக்கு அந்தப் பட்டா நிலங்களை வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்குக் கொடுத்த பட்டாவை மாற்றி, அரசே எடுத்துக் கொடுப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. கொடுத்தவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றுவிடுவார்கள். முந்தைய அரசைப்போல நம்முடைய அரசு அப்படிப்பட்ட இலக்கைச் செய்யவில்லை. 50 இலட்சம் ஏக்கர் இருக்கிறது, 25 இலட்சம் பேருக்கு தலா 2 ஏக்கர் தருவோம் என்ற வாக்குறுதியைத் தருகிற அரசு அல்ல. கொடுக்கின்ற வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற மனித நேயமிக்க தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு இலட்சம் பட்டாக்கள் என்பதை ஒரு இலட்சத்து 18 ஆயிரமாகத் தந்து இந்த ஆண்டு உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், அரசுப் புறம்போக்கு இடங்களில் வசிக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான மக்கள் வீட்டுமனை கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக, அரசினுடைய அதிரடி நடவடிக்கையால் வாய்க்கால் ஓரங்களில் இருந்தவர்களுடைய வீடுகள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பதோடு, பசுமை வீடுகள் திட்டத்தில் நமது அரசு அவர்களுக்கும் வீடு கட்டுவதற்குரிய வாய்ப்பு கொடுத்தால் மிகவும் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் வட்டப் பகுதிகளிலே வீட்டுமனை கிடைக்காத மக்களுக்கு, வீட்டுமனைப் பட்டா கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2012 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். நிலத்தினுடைய மதிப்பீடு என்பது வெளி மார்க்கெட்டிலே ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது பல மடங்காக இருக்கிறது. அரசு நிர்ணயிக்கிற விலையையும், அதையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது 10 மடங்கு உயர்ந்து இருக்கிறது. ஆகவே, அரசைப் பொறுத்தவரையில், அரசு நிர்ணயிக்கிற விலையிலிருந்து ஒரு மடங்கு, ஒன்றரை மடங்கு வழங்கலாம் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த நீர்வழிப் பகுதிகளிலே இருக்கிற மக்களை அப்புறப்படுத்துகிறார்களோ, அதற்கு அருகில் நத்தம் புறம்போக்கு இருக்குமேயானால், நீங்கள் அதைச் சுட்டிக்காட்டுவீர்களேயானால் உடனடியாக பட்டாக்கள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு, கடந்த வருடம் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பட்டாக்களை வழங்கி சாதனை புரிந்திருக்கிறது, வாழ்த்துக்கள்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு தேர்தல் நேரத்தில் நிலமில்லாதவர்களுக்கு 2 ஏக்கர் நிலம் தருவதாக உண்மைக்கு மாறாகச் சொல்லி வாக்கு கேட்டார்கள். அப்படிச் சொல்லி நிலம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மையான ஏழைகளுக்கு அந்த நிலம் பட்டுவாடா செய்யப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட நபர்களுக்கு, 100 ஏக்கர், 50 ஏக்கர் என்று பல்வேறு பெயர்களில் பதிவு செய்யப்பட்டு தவறான முறையில் அந்த பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அரசு கண்டுபிடித்து, அவர்கள் உண்மையான நபர்களா, போலியான நபர்களா என்பதைப் ஆராய்ந்து, உண்மையான ஏழைகளுக்கு அந்த இலவசப் பட்டா கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைப் பேரவைத் தலைவர்மூலமாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)



2012 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் என்ன சொல்கிறார் என்றால், போலியான பட்டா கொடுத்ததை இரத்து செய்ய வேண்டும் என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்) போலியான பட்டா கொடுத்ததை இரத்து செய்ய வேண்டும் என்று சொல்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அந்தப் போலியான பட்டா... (குறுக்கீடுகள்) முந்தைய ஆட்சி, உங்களுடைய ஆட்சிதானே? (குறுக்கீடுகள்) 2006–2011–இல் ஆட்சியில் இருந்தது யார்? அந்த ஆட்சியில் நடந்ததைத்தான் அவர் சொல்கிறார். (குறுக்கீடுகள்) அதை எப்படிக் குற்றச்சாட்டு என்று சொல்ல முடியும்?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) ஒரே நிமிடம், நான் பதில் சொல்லிவிடுகிறேன், please. (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதாவது முந்தைய ஆட்சியில் போலி பட்டாக்கள் வழங்கப்பட்டதை இரத்து செய்ய வேண்டும் என்பதுதான் அவருடைய கேள்வி. மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. அந்தப் பட்டாவை இரத்து செய்ய வேண்டும் என்று சொல்கிறபோது, எந்த ஆட்சியின் போது அது நடந்தது என்பதைச் சொல்ல வேண்டும் அல்லவா? (குறுக்கீடுகள்) அந்தப் பட்டா எந்த ஆட்சியில் கொடுக்கப்பட்டது என்பதைச் சொல்ல வேண்டும் அல்லவா? (குறுக்கீடுகள்) எந்த ஆட்சியில் கொடுக்கப்பட்டது என்று சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது அல்லவா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சட்டமன்றத்தில் நாங்கள் பேசுகிறபோது, முதலில் நீங்கள் 25 இலட்சம் பேருக்கு தலா 2 ஏக்கர் வழங்கப்படும் என்று குறிப்பீட்டீர்களே என்று கேட்டோம்; நாங்கள் எல்லாம் எதிர்க்கட்சியில் இருந்தபோது. அதற்குச் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் பதில் அளித்தபோது, அரை சென்ட்டும் கொடுத்தோம், கால் சென்ட்டும் கொடுத்தோம் என்று சொன்னார்கள்; கையளவுகூட கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் அப்போது சட்டமன்றத்தில் எழுந்து, கையளவு கொடுத்தால், ஒற்றைக் காலிலே நின்று டான்ஸ் ஆடுவதா

[2012 மார்ச் 30

என்றுகூட கேட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அப்படிப்பட்ட நிலைகூட அந்த அரசிலே இருந்திருக்கிறது. இதையெல்லாம் மனதிலேகொண்டு முறைப்படி எங்கெங்கே வழங்கப்பட்டிருக்கிறது; முறையற்ற செயலில் எங்கெங்கே வழங்கப்பட்டிருக்கிறது என்பதை எங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவீர்களேயானால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மணிமாறன் அவர்கள்.

முற்பகல் 10–20

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம் நித்தம் நான் வணங்கும் தெய்வம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, சென்னேரிக்குப்பம், நத்தம்பேடு, காக்கலூர் ஆகிய பகுதிகளில் கடந்த 30, 35 வருடங்களாகக் குடியிருந்து வருகின்ற மக்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே கொண்டு சென்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார், மாற்று இடம் இருந்தால் தருகிறோம்; இங்கே பட்டா தரமுடியாது என்று. ஏனென்றால் அது நீர்ப்பிடிப் புறம்போக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணிமாறன், கேள்விக்கு வாருங்கள். (குறுக்கீடு) சத்தமாகப் பேசுங்கள்.

**திரு. இரா. மணிமாறன்:** ** என்றும் சொல்கிறார். ஏனென்றால், அது நீர்பிடிப் புறம்போக்கு என்று சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் ** என்று சொன்ன அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உங்களுக்குப் பட்டா வேண்டும் அவ்வளவுதானே? மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது அப்பகுதி நீர்வழிப் புறம்போக்காக இருப்பதால்தான் பட்டா வழங்க இயலவில்லை என்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 மார்ச் 30]

சொன்னார்கள். நீர்வழிப் புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கைப் பொறுத்தவரையில் பட்டா வழங்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்தின் தடையாணை ஒன்று உள்ளது. ஆகவேதான் பட்டா வழங்க இயலவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் உள்ள நத்தம் புறம்போக்கு அல்லது தனியார் நிலத்தை அரசு மதிப்பீட்டின் அடிப்படையில், ஒன்றரை மடங்கு அளவிற்கு அவர்கள் தருவதற்குத் தயாராக இருந்தால் அவர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குடந்தை தொகுதியில் திருப்புரம்பியம், இன்னம்பூர், வாளாவரம், ஏராகரம், அகராத்தூர், சோழபுரம் ஆகிய பகுதிகளில் ஆதி திராவிடர்கள் அதிகம் வாழ்கிறார்கள். அவர்கள் ஒரே வீட்டில் அப்பாவும், பிள்ளைகளும் குடும்பத்துடன் வாழ்கின்ற நிலை உள்ளது. எனவே, அவர்களுக்குத் தனியாகப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைபாடுகளை நீங்கள் எழுத்துமூலமாகக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ராதாபுரம் தொகுதி, கஸ்தூரிரங்காபுரம் ஊராட்சி, முடவன்குளம் கிராமம், சர்வே எண் 293/5–இல் உள்ள 2.5 ஏக்கர் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் சத்தமாகப் பேசுங்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** அரசுப் புறம்போக்கு நிலத்தில் வீடில்லாத ஏழையெளிய மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2012 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியையே மனுவாக ஏற்றுக்கொண்டு, உடனடியாக அப்பகுதி மக்களுக்குப் பட்டா வழங்க வட்டாட்சியருக்குப் பரிந்துரை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**22—**

**மின் வசதி**

*__6984—திரு. சு. மாதேஸ்வரன்:__

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, பெரிய கல்வராயன்மலை, மேல்நாடு ஊராட்சி, கீழ்நாடு ஊராட்சி, மண்ணூர், ஆவாரை ஆகிய பகுதிகளுக்கு மின் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆத்தூர் தொகுதி, பெரிய கல்வராயன்மலை, மேல்நாடு ஊராட்சி, கீழ்நாடு ஊராட்சி, மண்ணூர், ஆவாரை ஆகிய குக்கிராமங்கள் முழுவதும் வனப் பகுதியில் அமைந்துள்ளதால் உரிய கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, வனத் துறையினரிடம் தடையில்லா சான்று பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தடையில்லா சான்று வனத் துறையிடமிருந்து



2012 மார்ச் 30]

பெறப்பட்டவுடன் மின்சார வசதி அளிக்க அரசு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்ற மகாகவி பாரதி படைத்த, இலட்சியப் பெண்ணாக, புதுமைப் பெண்ணாக, எங்களின் புரட்சித் தலைவியாக, மக்களால் மணிமகுடம் சூட்டப்பட்ட மாதரசியாக விளங்கும் அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட பெரிய கல்வராயன்மலை, சின்ன கல்வராயன் மலைப் பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கு மின் வசதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி தொகுதி, பச்சைமலை ஊராட்சி, வெங்கமுடி, மாயம்பாடி, சின்னநாகூர், பெரியநாகூர், மேல்வஞ்சாரை, கீழ்வஞ்சாரை ஆகிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு மின் வசதி செய்துதர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மலைப் பகுதி கிராமமா?

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மலைப் பகுதி கிராமங்களிலே

[2012 மார்ச் 30

*மின் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று சொன்னால், வனத் துறையின் அனுமதி பெறவேண்டியது கட்டாயம்.*

*முற்பகல் 10–25*

*வனத் துறையின் அனுமதி பெறுவதிலே, அரசு தேவையான இடங்களிலே முயற்சிகள் எடுத்துவருகிறது. அதற்கு முன்பாக அந்தப் பகுதியினுடைய சம்பந்தப்பட்ட ஊராட்சியினுடைய கிராம சபைக் கூட்டத்தைக் கூட்டி, கிராம சபையில் தீர்மானம் நிறைவேற்றி, அதற்குப் பின்பு அந்த ஊராட்சிமன்றத் தீர்மானத்தோடு, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தினுடைய தீர்மானத்தையும் இணைத்து இங்கே அனுப்பினால் வனத் துறையின் அனுமதியைப் பெற்று, அதற்கு அடுத்தபடியாகத்தான் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

*தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 100 சதவீத கிராமங்களும் மின் இணைப்பு பெறவேண்டுமென்று சென்ற ஆட்சிக் காலத்திலேயே முடிவு செய்யப்பட்டு, ஏறத்தாழ ஓரிரு மலைப் பகுதி கிராமங்களைத் தவிர, ஒருசில மலைப் பகுதி கிராமங்களைத் தவிர அனைத்து கிராமங்களுக்கும் மின் வசதி செய்துதரப்பட்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த மலைக் கிராமங்களுக்கு உரிய மின் வசதி வழங்குவதற்கு அரசு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தொகுதியிலே, தங்கச்சிமடம் ஊராட்சிக்கு உட்பட்ட அந்தோணியார்புரம் கிராமத்திற்கு மின் வசதி செய்துதர அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Very good. *சுருக்கமாகக் கேள்வியைக் கேட்டுவிட்டீர்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*



2012 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இதுவரை ஒருசில கிராமங்களைத் தவிர, சில இயற்கை இடர்ப்பாடுகள் அல்லது சூழ்நிலையின் காரணமாக ஓரிரு கிராமங்களில் மட்டும் மின் வசதி செய்யப்படாமல் இருக்கின்றதே தவிர, 99 சதவீத கிராமங்களுக்கு மின் வசதி செய்யப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் கிராமத்திற்கும் உடனடியாக மின்சாரம் வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**23—**

### கொள்முதல் விலை

*5416—செல்வி கே. பாலபாரதி:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மக்காச்சோளத்திற்குக் கொள்முதல் விலை நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) நம்முடைய தமிழக அரசு, மக்காச்சோளம் உட்பட்ட வேளாண்மை விளைபொருட்களுக்கு மத்திய அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையையே அடிப்படைக் கொள்முதல் விலையாக நிர்ணயிக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

[2012 மார்ச் 30

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம் மற்றும் அதற்கு அருகில் இருக்கக்கூடிய தேனி, திருப்பூர், சிவகங்கை போன்ற இன்னும் பல்வேறு மாவட்டங்களில் மக்காச்சோளம் கடந்த 15 ஆண்டுக் காலமாக விவசாயிகளால் பயிர் செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இந்த மக்காச்சோளத்தினுடைய விதை பாக்கெட், 300 ரூபாயிலிருந்து 900 ரூபாய் வரை; பாக்கெட்டிலேயே விலை இருக்கும். அந்த விவசாயி, மக்காச்சோளம் பயிரிடும்போது 2,000 ரூபாய்க்கு மூட்டை விலை போகும் என்பார்கள்; ஆனால், அவன் அதை அறுத்துக்கொண்டு போனால், 200 ரூபாய்க்குக்கூட போகாது. அதாவது விதை பாக்கெட்டில் இருக்கக்கூடிய விலை, விவசாயி உற்பத்தி செய்து மூட்டையாகக் கொண்டுபோகின்றபோது இல்லை. ஆகவே, மத்திய அரசு எவ்வளவு விலை நிர்ணயம் செய்திருக்கிறது; மத்திய அரசினுடைய விலையை நம்முடைய தமிழக விவசாயிகள் ஏற்றுக்கொள்கிறார்களா; தங்களது வேளாண்மைத் துறையினர் இதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வருடமும் மாநில அரசு மக்காச்சோளம் உட்பட அனைத்து வேளாண் விளைபொருட்களுக்கும் பயிர் சாகுபடி செலவு, சந்தை விலை, விவசாயிகளின் கோரிக்கை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட வேளாண் விலை நிர்ணயக் குழுமத்திடம் குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயம் செய்யுமாறு பரிந்துரை செய்கின்றது. மேலும், இக்குழுமம் மாநில வாரியாகப் புள்ளிவிவரங்களைப் பெற்று அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்துமாறு குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்கின்றது. மத்திய அரசு அந்த விலையினைப் பரிசீலனை செய்து, குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயம் செய்திருக்கிறது. கடந்த 2011–2012 ஆம் ஆண்டு kharif பருவத்திற்குக் குறைந்தபட்ச ஆதரவு விலையாக ஒரு குவிண்டாலுக்கு 980 ரூபாயாக நிர்ணயம் செய்திருக்கிறது. இருந்தாலும், இன்றைய மார்க்கெட் விலை 1,100 ரூபாயிலிருந்து 1,140 ரூபாய் வரை குவிண்டாலுக்கு விற்பனை ஆகிறது. தமிழக அரசைப் பொறுத்தவரையில் இந்த 2012–2013 ஆம் ஆண்டில் kharif பருவத்திற்கு மக்காச்சோளத்திற்கு ஒரு குவிண்டாலுக்கு 1,400 ரூபாய் வீதம் விலை நிர்ணயம் செய்யுமாறு வேளாண் விலை நிர்ணயக் குழுமத்திடம் பரிந்துரை செய்திருக்கிறது.



2012 மார்ச் 30]

கடந்த 2012–2013 ஆம் ஆண்டு kharif பருவத்திற்கு வேளாண் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்வது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டத்தில் வேளாண்மை ஆணையரக வேளாண்மை துணை இயக்குநர் மற்றும் இரண்டு முன்னோடி விவசாயிகள் கலந்துகொண்டு இருக்கிறார்கள். இதற்கான இறுதி ஆணை மத்திய அரசிடமிருந்து எதிர்நோக்கப்படுகிறது.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இந்த நல்ல பதிலுக்கு விவசாயிகள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு குவிண்டாலுக்கு கிட்டத்தட்ட ரூபாய் 1,500 லிருந்து 1,750 ரூபாயாக மத்திய அரசுக்கு நமது மாநில அரசு பரிந்துரை செய்து, அந்த விலையைப் பெற்றுத் தரும்படி கேட்டுக்கொள்வதோடு நெல், கரும்பு போன்றவற்றின் கொள்முதல் விலையைப் போன்று, மக்காச்சோளத்தையும் கொள்முதல் செய்வதற்கான ஒரு நிலையத்தை நமது வேளாண்மைத் துறையின்மூலம் அமைப்பதற்கும், அதேபோன்று, வாகரையில் வேளாண்மை பல்கலைக்கழகத்தின்மூலமாக இருக்கக்கூடிய hybrid விதைகள் பரிசோதனை நிலையத்தின்மூலமாக, மானிய விலையில் விதைகள் விற்பனை செய்வதற்கும் நமது துறை முயற்சித்தால் ஏழு மாவட்டங்களில் விவசாயிகளுக்கு இது பயனுள்ளதாக இருக்கும். இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 மார்ச் 30

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடிக் கொள்முதல் நிலையங்கள்மூலம் நெல் மட்டுமே தனியாகக் கொள்முதல் செய்யப்பட்டு பொது விநியோகத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், மக்காச்சோளம் பெரும்பாலும், கோழி மற்றும் கால்நடைத் தீவனத்திற்காக அதிகம் பயன்படுவதனால், மக்கள் உணவுத் தேவைக்கு அதிகமாகப் பயன்படாத காரணத்தால், தனியாக நேரடிக் கொள்முதல் செய்யப்படுவதில்லை. விதையைப் பொறுத்தவரையில், உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை வருகின்ற காலக்கட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு நல்ல தரமான விதை, குறைந்த விலையில் கொடுக்கப்படுவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரவள்ளிக் கிழங்கிற்கான விலை திடீரென்று வீழ்ச்சி அடைகின்றது. எனவே, அதற்கும் விலை நிர்ணயம் செய்யப்படுமா என...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி மக்காச்சோளத்தைப் பற்றியது. மரவள்ளிக் கிழங்கிற்குத் தனிக் கேள்வி போடவும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**24—**

## உயிரிழப்புகளைத் தடுத்தல்

*__5000—திரு. கா. ராமச்சந்திரன்:__

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், பர்லியார், கொலக்கம்பை, குஞ்சப்பனை, பந்தலூர் மற்றும் கூடலூர் பகுதிகளில் யானைகளினால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2012 மார்ச் 30]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், பர்லியார், கொலக்கம்பை, குஞ்சப்பனை, பந்தலூர் மற்றும் கூடலூர் பகுதிகளில் யானைகளினால் உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதிக்குட்பட்ட பகுதியிலும், குன்னூர் தொகுதிக்குட்பட்ட பகுதியிலும் யானைகளால் தாக்கப்பட்டு, கிட்டத்தட்ட கூடலூர் பகுதியில் 10 பேரும், குன்னூர் பகுதியில் 10–க்கு மேற்பட்டவர்களும் ஒட்டுமொத்தமாக நூற்றுக்கணக்கானவர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். யானைகளால் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. மேலும், அதனுடைய தாக்கத்தால் மக்கள் பீதியுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அதைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அகழிகள் வெட்டவேண்டும். அதைப்போல் வன விலங்குகள் அதிகம் உண்ணக்கூடிய உணவை அங்கு வளர்ப்பதாகச் சொன்னீர்கள். அது இதுவரைக்கும் நடந்ததாகத் தெரியவில்லை. அங்குள்ள மக்களின் வாழ்க்கைக்கு உத்தரவாதம் வேண்டும். ஏனென்றால் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒரே கேட்ச்மென்ட் ஏரியா நீலகிரிதான். அதுவும் கூடலூர் பகுதிதான். எனவே, அங்குள்ள மக்களைப் பாதுகாக்கவேண்டும். வனத்தையும் பாதுகாக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கேள்வியும் நானே, பதிலும் நானே என்கிற மாதிரி நீங்களே அகழியும் வெட்டவேண்டுமென்று பதிலும் சொல்லிவிட்டீர்கள். Proceed பண்ணுங்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு என்ன நடவடிக்கை எடுப்பார்கள் என்று அறிய விழைகின்றேன்.

[2012 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், பர்லியார், கொலக்கம்பை, குஞ்சப்பனை, பந்தலூர் மற்றும் கூடலூர் பகுதிகளில் யானைகளினால் உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தடுக்க, அரசு வனப் பாதுகாப்புமூலம் 23 வேட்டைத் தடுப்புக் காவலர்கள் கொண்ட சிறப்புக் குழு அமைத்து ஆண்டு முழுவதும் ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்குத் தொந்தரவு செய்யும் யானைகளை வனத்திற்குள்ளே திருப்பி அனுப்ப கும்கி யானைகள் வரவழைக்கப்பட்டு காட்டு யானைகளை வனத்துக்குள் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. யானைகள் விரும்பி உண்ணும் பயிர்களைப் பயிரிடாமல் தவிர்க்குமாறு அருகிலுள்ள அனைத்துக் கிராம மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அந்தப் பகுதிகளில் இதுவரை 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு யானைத் தடுப்பு அகழி கடந்த ஓராண்டில் வெட்டப்பட்டுள்ளது. மேலும் கடந்த ஆண்டு வரை 26 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் வன விலங்குகளால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண தமிழகம் முழுவதும் யானைத் தடுப்பு அகழிகள் போன்ற இடர்களைவு பணிகளுக்கு 2011–2012 ஆம் ஆண்டில் 11.7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வன விலங்குகள் மனிதர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வராமல் தடுக்கும்வகையில், வனப் பகுதிகளிலே போதிய தீவனப் பயிர்களை வளர்க்க 20.8 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, மேலும் வன விலங்குகளால் ஏற்படும் உயிரிழப்பு, பயிர்ச் சேதம் ஆகியவற்றிற்கு அளிக்கப்படும் இழப்பீட்டையும் இந்த அரசு உயர்த்தியுள்ளது. இழப்பீடு வழங்குவதில் தாமதம் ஏற்படாமல் இருக்க 2.5 கோடி ரூபாயில் சுழல் நிதி ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. யானைத் தடுப்பு அகழிகள் போன்ற தடுப்பு அரண்களை அமைப்பதற்கான கூடுதல் பணிகள் 2012–2013 ஆம் ஆண்டிலும் மேற்கொள்வதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்த ஆண்டு



2012 மார்ச் 30]

வரவு–செலவுத் திட்டத்தில் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் ஆணையிடப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்றி, யானைகள் மற்றும் வன விலங்குகளால் ஏற்படும் உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதங்களுக்கு ஒரு நிரந்தர தீர்வு காணப்படும் என்று இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். அவர் வால்பாறையில் உள்ள வன விலங்குகளால் நிரம்ப பாதிக்கப்பட்டவர்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், வால்பாறை பகுதி மட்டுமல்ல; துடியலூர், பெரிய நாயக்கன்பாளையம், தொண்டாமுத்தூர் போன்ற பகுதிகளிலும் யானைகள் ஊருக்குள்ளே வரக்கூடிய அபாய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அம்மாவினுடைய ஆட்சியில் தொண்டாமுத்தூரில் அமைந்துள்ள பகுதிகளில் அகழிகள் வெட்டுவதற்கான நிதிகள் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதைப்போல, வால்பாறை பகுதியிலும் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அதற்கான வேலைகள் தொடங்கப்படவுள்ளதாக பத்திரிகையிலே செய்தியைப் பார்க்க முடிந்தது. என்னுடைய கேள்வி என்னவென்றால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் . . .(குறுக்கீடு)

**திரு. எம். ஆறுமுகம்:** கேள்வியைக் கேட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களிடம் கேள்வியை முடிக்கச் சொல்லவில்லை. நேற்றையதினம் நீங்கள், கரடியால் பாதிக்கப்பட்டது குறித்து என்னிடம் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதையும் சேர்த்து இப்போதே சொல்லிவிடுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** யானைகள் தொந்தரவு மட்டுமல்ல; மூன்று நாட்களுக்கு முன்னர்கூட, வால்பாறை பகுதியிலிருக்கக்கூடிய பன்னிமேடு எஸ்டேட் என்ற பகுதியில் திரு. நல்லதம்பி என்ற தோட்டத் தொழிலாளி காலையில் 6½ மணிக்கு வேலைக்குச் சென்றபோது கரடியால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டு உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்.

[2012 மார்ச் 30

ஒட்டுமொத்தமாகவே வால்பாறை பகுதியில் மிருகங்களிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தினை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வருடத்திற்கு, சுமார் 62 கிலோ மீட்டர் தூரத்திற்குத்தான் யானைகள் புகா அகழி வெட்டப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2011–2012 ஆம் ஆண்டில் 316 கிலோ மீட்டர் தூரத்திற்கு அகழிகள் வெட்டுகின்ற பணி நடைபெற்று வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் வால்பாறை பகுதிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, 222.28 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்து அந்தப் பணிகள் தொடங்குவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதைப்போல், மானாம்பள்ளி வனச் சரகத்திற்குட்பட்ட தனியார் காடுகள், தோட்டம், டாடா காபி லிமிடெட், பன்னிமேடு எஸ்டேட் பங்களா jurisdiction–இல் வசித்து வரும் திரு. நல்லதம்பி, சுமார் வயது 46 என்பவர், 27–3–2012 அன்று காலை சுமார் 7 மணியளவில் அவரது குடியிருப்புக்கு அருகில் சென்று கொண்டிருந்தபொழுது தேயிலைத் தோட்டப் பகுதிகளில் பதுங்கியிருந்த கரடி ஒன்று எதிர்பாராதவிதமாகத் தாக்கியதில் அவரது வலது காலில் இரண்டு பற்கள் பதிந்துள்ளன. உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மானாம்பள்ளி வனச் சரக அலுவலர் மற்றும் களப் பணியாளர்கள் மற்றும் அருகிலிருந்த பொதுமக்கள் உதவியுடன் பன்னிமேடு எஸ்டேட் பகுதியிலுள்ள தோட்டத் தொழிலாளர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மனித வன உயிரினம் மோதல் தடுப்புக் குழுவினர்மூலம் அப்பகுதியில் கரடியின் நடமாட்டம் கண்காணித்து வரப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணத் தொகை வழங்கும்பொருட்டு



2012 மார்ச் 30]

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

முற்பகல் 10–40

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வேளாண் துறைக்கு ரூ.3,804.96 கோடி நிதியை ஒதுக்கியும், வரும் நிதி ஆண்டில் உணவு தானிய உற்பத்தியை 1.20 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உற்பத்தி இலக்கினைக் கொண்டு, விவசாயிகளுடைய வேந்தராக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், எனது ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதிக்குட்பட்ட சென்னிமலை ஒன்றியத்தில், வரப்பாளையம் ஊராட்சியில் கோடைக் காலமாக இருக்கின்ற காரணத்தினாலே சமீபகாலமாக மலைப் பகுதியிலே இருந்து வரக்கூடிய மான்கள் தண்ணீர் தேடி விளைநிலப் பகுதிகளுக்கு வருகின்ற காரணத்தினாலே, அங்கேயே தங்கிவிடுகின்ற காரணத்தினாலே, அங்கிருக்கின்ற விவசாயப் பெருமக்கள், விளைநிலங்களை மான்கள் சேதப்படுத்துவதாக வருத்தம் தெரிவித்திருக்கின்றார்கள். ஊர்வன, நடப்பன, பறப்பன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் வாழ்வளித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் விவசாயிகளைப் பாதுகாக்கின்ற வகையிலும், மான்களைப் பாதுகாக்கின்ற வகையிலும், மான்களை மீண்டும் வனத் துறையிலே கொண்டு பாதுகாப்பாக விடக்கூடிய சூழ்நிலையை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கோடைக் காலங்களிலே வன விலங்குகள் வனத்தை விட்டு வெளியே வராமல் இருப்பதற்கு குடிநீர்த் தேக்கங்களை அமைத்து,

[2012 மார்ச் 30

அந்த வசதியை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அதையும் மீறி வருகின்ற மான்கள் போன்றவற்றை காப்புக் காட்டுக்குள் திருப்பி அனுப்புவதற்கு அறிவியல் வல்லுனர்களைக் கலந்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, வன விலங்குகளால் பயிர்கள் பாதிக்கப்படுவதை உணர்ந்து, கடந்த காலங்களில் ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை உயர்த்தி ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு ஆணையிட்டுள்ளது. பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வனத் துறையினரிடம் முறையாக விண்ணப்பித்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி அவர்கள்.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் மல்லிகைப் பூ தோட்டங்கள் அதிக அளவிலே உள்ளன. அந்த மல்லிகைப் பூ தோட்டங்களில் பாம்புகளுடைய நடமாட்டம் அதிக எண்ணிக்கையிலே உள்ளது. மல்லிகைப் பூ தோட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே வரக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் விடியற்காலை 4–00 மணிக்கு அந்தத் தோட்டத்திற்கு வந்து பூக்களைப் பறிக்கக்கூடிய தொழிலிலே ஈடுபடுகிறார்கள். அந்த நேரத்தில் பாம்புகளால் தீண்டப்பட்டு மருத்துவமனையில் இருக்கக்கூடிய நோயாளிகளின் எண்ணிக்கையைப் பார்க்கிறபொழுது, மல்லிகைப் பூ தோட்டத்திலே பணியாற்றிய அந்தத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கைதான் அதிக அளவிலே இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வனத் துறையின்மூலமாக மல்லிகைப் பூ தோட்டங்களிலே பாம்புகளைப் பிடிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்தப் பகுதியிலே அதிகமாக பாம்புகள் நடமாடுகின்றன என்பதைக் குறிப்பிட்டுக் கூறுவாரேயானால், வனத் துறைமூலம் அந்தப் பாம்புகளை அப்புறப்படுத்தி, காப்புக் காட்டிற்குள்ளே விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**25—**

### நீர்த்தேக்கம்

***6941—திரு. இரா. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, விசுவக்குடி கல்லாற்று நீர்த்தேக்கத் திட்டத்தைத் தொடங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இல்லை என்று சொல்லாமல் எதையும் பொதுப் பணித் துறை மூலமாகச் செய்ய வேண்டும், நீரைச் சேமிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதன்படி பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தொண்டமான்துறை கிராமத்தில் விசுவக்குடி அருகிலே கல்லாற்று ஓடையின் குறுக்கே நபார்டு வங்கி நிதி உதவியுடன் ஒரு புதிய ஏரி அமைக்க அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது, ஒப்புதலும் வழங்கப்பட்டுவிட்டது. இப்பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டது. ஆனால், யாரும் கோரப்படாததால் ஒப்பந்தப்புள்ளி மாற்றுத் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி முடிந்தபின் பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே உங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. இரா. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைக்கும் தொண்டர்களுக்கு உதவிகள் செய்து, உண்மை தொண்டர்களுக்கு பதவிகள் நல்கி, புதிய சகாப்தம் படைக்கும் எங்கள் புறநானூற்றுத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா! கடைக்கோடியில் இருந்த இந்த மாணவனைக் கண்டெடுத்து, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினராக்கிய தங்கள் மலர்ப் பாதங்களில் கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

முற்பகல் 10–45

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, வேப்பன்தட்டை வட்டத்தின் அருகே பச்சை மலையையும், செம்மலையையும் இணைக்கின்ற விசுவக்குடி கல்லாற்று நீர்த்தேக்கத் திட்டம், மாண்புமிகு பொற்காலத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடையஆட்சியிலே 21–7–2005 அன்று 50 ஆண்டுக் கால அப்பகுதி விவசாயிகளினுடைய கோரிக்கையினை நிறைவேற்றுகின்ற முகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம், கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசாங்கத்தில், அம்மா கொண்டு வந்த திட்டம் என்கிற காரணத்தினாலே, அதைக் கிடப்பிலே போட்டார்கள். ஆனால், விவசாயிகளினுடைய நலனிலே அக்கறையுள்ள, வேளாண்மைத் துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்துகின்ற எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தத் திட்டத்தை தூசி தட்டி எழுப்பி மீண்டும் அந்தத் திட்டத்திற்கு புத்துயிர் ஊட்டுகின்ற வகையில், 19 கோடி ரூபாய் நிதியை வல்லமையோடு வாரி வழங்கிய வான்மேகம் கொண்ட எங்கள் புரட்சித் தலைவி அம்மாவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி விவசாயிகளின் சார்பாகக் கோடானு கோடி நன்றி மலர்களை நன்றியோடு காணிக்கையாக்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.



2012 மார்ச் 30]

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறண்ட பகுதிகளில், நீர் ஆதாரத்தைப் பெருக்குகின்ற வகையில், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமாக காட்டாற்று வெள்ளம் போல் ஓடிக்கொண்டிருக்கின்ற என்னுடைய திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குண்டாறு, கவுண்டநதி போன்ற பகுதிகளில் விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய ஒரு நீர்த்தேக்கத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நதியிலே போதிய நீர்வரத்து இருப்பின், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அந்தப் பணி நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, ஒக்கூர் ஊராட்சிக்குட்பட்ட விளாம்பாக்கம் என்கிற கிராமத்தில், வெட்டாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்ட மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நதியிலே போதிய நீர் வரத்து இருப்பின், அது பரிசீலனை செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**26—**

**சுற்றுலாத் தலம்**

***7082—திரு. க. கோபால்சாமி:**

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ராஜபாளையம் தொகுதி, அய்யனார்கோயில் நீர்வீழ்ச்சிப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் தொகுதியில், அய்யனார்கோயில் நீர்வீழ்ச்சிப் பகுதியில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருவதாக இதுவரை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு பெறப்படவில்லை. அப்படி கருத்துரு பெறக்கூடிய சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கிணங்க அடிப்படை வசதிகள் செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், கடந்த நிதியாண்டில் மாவட்ட ஆட்சியரிடம் கருத்துரு பெறப்பட்டு, விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் பகுதியில், பக்தர்கள் ஓய்வு மண்டபம், கழிவறை வசதி, குடிநீர் வசதிகள் அமைப்பதற்காக 20 இலட்சம் ரூபாயும், திருத்தங்கல் அருள்மிகு நின்ற நாராயணபெருமாள் கோயில் பகுதியில் பக்தர்கள் ஓய்வு மண்டபம், அடிப்படை வசதிகள் செய்வதற்காக 20 இலட்சம் ரூபாயும், ரமண மகரிஷி பிறந்த திருச்சுழி கிராமத்தில், அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காக 24.78 இலட்சம் ரூபாயும், அதைப்போல ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியில் உள்ள திருவண்ணாமலை திருக்கோயில், தென்திருப்பதி



2012 மார்ச் 30]

என்று அழைக்கக்கூடிய அந்தப் பகுதியில் கிரிவலப் பாதையை அமைப்பதற்காக 3 கி.மீ. வரையிலே சாலையை மேம்படுத்துவதற்காக, ஒரு கோடியே அறுபது இலட்சம் ரூபாயும் இதுவரை கடந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும், அந்தப் பணிகள் துவக்கப்படவுள்ள சூழ்நிலை உள்ளது என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.*

*முற்பகல் 10–50*

**திரு. க. கோபால்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டம், நல்லமநாய்க்கன்பட்டி என்ற குக்கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, கிளைக் கழகச் செயலாளராகவும், மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளராகவும், மாவட்ட இலக்கிய அணிச் செயலாளராகவும் கழகப் பணியாற்றிட வாய்ப்பளித்து, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் ராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்த மாண்புமிகு இதய தெய்வம், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

ராஜபாளையம் தொகுதியிலுள்ள அய்யனார்கோயில் நீர்வீழ்ச்சி என்பது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. இது மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. பல உயிர் காக்கும் மூலிகைகள் இந்த மலையினுடைய அடிவாரத்தில் உள்ளன. சிறப்புமிக்க மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலுள்ள கொடிமரம் இந்த அய்யனார்கோயில் பகுதியிலிருந்துதான் எடுத்துச் செல்லப்பட்டது என்பது வரலாறு. இந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ள இடம், சாம்பல் நிற அணிலின் சரணாலயமாக உள்ளது. இந்தப் பகுதியில் அரிய வகை விலங்கினங்கள் உள்ளன. ராஜபாளையம் மற்றும் விருதுநகர் மாவட்டத்திலிருந்து தினந்தோறும் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் இந்த இடத்திற்கு வந்து செல்கின்றார்கள். வார இறுதி நாட்களிலும், குற்றால சீசன்,

[2012 மார்ச் 30

ஐயப்பன்கோயில் சீசன் போன்ற காலங்களில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இந்த நீர்வீழ்ச்சிக்கு வருகிறார்கள். எந்தவித அடிப்படை வசதியும் இல்லாததால் மிகவும் சிரமப்படுகிறார்கள். எதைக் கேட்டாலும் கொடுக்கக்கூடிய அட்சயபாத்திரமாக விளங்கும், அள்ளித் தருகின்ற மாண்புமிகு அம்மாவின் அரசு, ராஜபாளையம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அய்யனார்கோயில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கிணங்க, நேரடியாகச் சென்று ஆய்வு செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக இந்த நிதியாண்டில் அம்மா அவர்களுடைய அனுமதியோடு அடிப்படை வசதிகளும், சுற்றுலாப் பயணிகளாக வரக்கூடியவர்களுக்கான வசதியும் செய்து தரப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**27—**

## ஓட்டுநர்கள்

*4620—திரு. அ. சவுந்தரராசன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீண்ட தூர பேருந்துகளில் இரண்டு ஓட்டுநர்களை பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2012 மார்ச் 30]

(அ) மற்றும் (ஆ) நீண்ட தூரம் செல்லக்கூடிய அரசுப் பேருந்துகளில் இரண்டு ஓட்டுநர்கள் அதாவது ஓட்டுநருடன் இணைந்த நடத்துனர் நியமிக்கும் முறை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 1994 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான உயிர் தொடர்பான ஒரு பிரச்சினை குறித்து சில கேள்விகளை நான் எழுப்ப விரும்புகிறேன். இரண்டு ஓட்டுனர்கள், ஒரு நடத்துனர் என்று தொலைதூரப் பேருந்துகளில் 5 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. அதற்குப் பிறகு படிப்படியாக, இப்போது ஒரு ஓட்டுனர், ஒரு நடத்துனர், 2 ஓட்டுனர், ஒரு நடத்துனர், Driver–cum–Conductor என ஒருவர்தான் வண்டியிலேயே இருப்பார்; நடத்துனரே இருக்கமாட்டார். அதற்குப் பிறகு ஒரு Driver, இன்னொருவர் Driver–cum– Conductor. நீண்ட தூரங்களிலே ஒரு Driver, இன்னொருவர் Driver–cum–Conductor என்ற வகையிலேதான் இப்பொழுது அதிகம் செயல்படுத்தப்படுகிறது. இதன் விளைவாக 714 கிலோ மீட்டருக்குத் தொடர்ச்சியாக அவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஒரு Driver, ஒரு Conductor இருக்கிற இடத்திலேயும் 700 கிலோ மீட்டருக்கு ஒருவர் போய்க்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள். அதையெல்லாம் மானியக் கோரிக்கையின்போது பேசிக் கொள்ளலாம்.

**திரு. அ. சவுந்தரராசன்:** கேள்வி என்னவென்றால், 2 Driver, ஒரு Conductor என்ற முறையில் இப்பொழுது S.E.T.C.–இல் பெரும்பாலான வழித்தடங்களில் இல்லை. அதை சீர்செய்யாமல் விபத்துகளைக் குறைக்க முடியாது. அமைச்சர் இரண்டு Driver–கள், ஒரு Conductor என்பதைச் செயல்படுத்த வேண்டும் என்பதும், ஒரு Driver, ஒரு Conductor என்ற முறையில் ஓட்டுகின்றபோது 9 மணி நேர இடைவெளிக்குப் பிறகுதான் அடுத்த duty கொடுக்கப்பட வேண்டும் என்பதும் மீறப்படுகிறது. சட்ட விரோதமாக நம்முடைய நிருவாகங்கள் செயல்படுவதைத் தடுக்க வேண்டும் என்பதும்தான் எனது வேண்டுகோள்.

[2012 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட தூரம் செல்லக்கூடிய பேருந்துகள், உதாரணத்திற்கு நாகர்கோவிலிலிருந்து சென்னை செல்லக்கூடிய பேருந்துகள், நாகர்கோவிலிலேயே முழுக்க, முழுக்க அந்தப் பேருந்துகளில் பயணிகள் பயணம் செய்யக்கூடிய இருக்கைகள் நிரப்பட்டுவிடுகின்றன. வருகின்ற வழிகளில் குறிப்பாக திருச்சி, விழுப்புரம், போன்ற வழித்தடங்களில் மட்டுமே பயணிகள் ஏறக்கூடிய அளவிற்கு, சில நிறுத்தங்களில் மட்டும் செல்லக்கூடிய பேருந்துகள் விரைவுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகள். அந்தப் பேருந்துகளில் இரண்டு ஓட்டுநர்கள் பணி செய்கிறார்கள். இரண்டு ஓட்டுநர்கள் பணி செய்கின்றபோது ஒருவர் நடத்துனர் பணியைச் சேர்த்து கவனிக்கின்றார். மற்ற நேரங்களில் அவர் ஓய்வு எடுக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த நடைமுறை என்பது அரசினுடைய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. குறிப்பாக, மோட்டார் வாகனத் தொழிலாளர் சட்டம் 1961–இன்படி வரையறுக்கப்பட்டு, இரண்டு ஓட்டுநர்கள் பணியாற்றக்கூடிய வாய்ப்பு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவின்படி 1994 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு அது நடைமுறையில் உள்ளது. தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களில் 1,477 பேர் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களாகப் பணி செய்து, சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** இப்போதும் அதிகமான பேருந்து வழித் தடங்களில் இரண்டு ஓட்டுநர், ஒரு நடத்துனர் இல்லாத நிலை இருக்கிறது என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். தயவுசெய்து நடவடிக்கை எடுக்குமாறு தங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.



2012 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டநெடிய தூரம் செல்லக்கூடிய பேருந்துகளில் ஏதேனும் சில வழித் தடங்களில் அவ்வாறு இருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுத்துமூலமாகக் கொடுக்கின்றபட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**28—**

## விபத்துக் காப்பீடு

***6708—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ், பதிவு பெற்ற கல் உடைக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் கல் உடைக்கும் தொழிலாளிகளுக்கு விபத்து ஏற்பட்டால் 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் மாநில ஈட்டுறுதிச் சட்டத்தின்படி காப்பீட்டு வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் மாநில ஈட்டுறுதிச் சட்டத்தின்கீழ் வராத தொழிற்சாலைகளில் பணிபுரியும் கல் உடைக்கும் தொழிலாளிகளுக்கு விபத்து ஏற்பட்டால் 1923 ஆம் வருட பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் இழப்பீடு பெற இயலும். தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் வராத இடங்களில்

[2012 மார்ச் 30

பணிபுரியும் கல் உடைக்கும் தொழிலாளர்கள் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்திருந்தால் அந்த வாரியத்தின்மூலம் விபத்தின் தன்மைக்கு ஏற்ப உதவித் தொகை வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.

**திரு. டி. சுரேஷ்குமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல் உடைக்கும் தொழிலாளிக்குக் காப்பீட்டுத் திட்டம் வழங்குவோம் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**29—**

## அவசர ஊர்தி

***1118—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சிக்கெனத் தனியாக 108 அவசர ஊர்தி வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

108 அவசர கால ஊர்திகளைப் பொறுத்தவரையில், அந்தந்த மாவட்டங்களினுடைய அவசரத் தன்மை, பிரசவ காலத் தேவைகள், சாலை வசதி, சென்றடைய வேண்டிய தூரம் மற்றும் அதற்கான நேரம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, வாகனங்கள் நிறுத்தும் இடங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்போது 14 அவசரகால ஊர்திகள் செயல்படுகின்றன. பட்டுக்கோட்டையில் உள்ள 108 அவசரகால



2012 மார்ச் 30]

ஊர்தி அதனைச் சுற்றியுள்ள 20 கிலோ மீட்டர் சுற்றளவில் ஏற்படும் அனைத்து அவசரகாலத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சராசரியாக 20 நிமிடங்களுக்குள் அவசரகாலத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள, பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சி, பட்டுக்கோட்டையிலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. ஆகவே, பட்டுக்கோட்டையில் நிறுத்தப்பட்டுள்ள 108 அவசரகால ஊர்தியின்மூலமாக அப்பகுதி மக்களுக்குத் தற்போது சேவை தாமதமின்றி வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பட்டுக்கோட்டை நகரிலிருந்தும், மதுக்கூர் பேரூராட்சியிலிருந்தும் இரண்டு வாகனங்கள், 108 ஆம்புலன்ஸ்கள் இயக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதிராம்பட்டினத்தைப் பொறுத்தவரையிலே, அந்தப் பகுதி 30 ஆயிரம் ஜனத்தொகை இருக்கக்கூடிய ஒரு பகுதி. இரண்டாவதாக, மீனவர்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதி. மேலும், கிழக்குக் கடற்கரை சாலையிலிருந்து அதிகமான வாகனங்கள் மிக வேகமாகச் செல்லக்கூடிய ஒரு பகுதியாக அதிராம்பட்டினம் அமைந்திருக்கின்றது. இதைச் சுற்றி 20 குக்கிராமங்களும் அமைந்திருக்கின்றன. அதிராம்பட்டினம் பகுதியிலே தீ விபத்துகள் சகஜமாக நடந்துகொண்டிருக்கின்றன. ஏனென்று சொன்னால், இப்போது அங்கு குடிசைப் பகுதிகள் அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினாலே வருடத்திற்கு 3 அல்லது 4 தீ விபத்துகள் அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேபோன்று கிழக்குக் கடற்கரைச் சாலையிலே கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளிலே அதிக வேகமாக வாகனங்கள் வரக்கூடிய காரணத்தினாலே அதிகமான விபத்துகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கு இருக்கக்கூடிய அரசு மருத்துவமனையிலும் இரவு நேரங்களில் மருத்துவர்கள் ‘Doctor on call’ என்ற முறையில்தான் இருக்கின்றார்கள். இரவு நேரத்தில் அப்பகுதியில் கூப்பிட்டால் அவர்கள் வந்து சிகிச்சை கொடுக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கக்கூடிய காரணத்தினாலே, மேலும் ஒரு வாகனத்தை,

*ஏற்கெனவே அங்கு இருக்கக்கூடிய வாகனங்கள் இயங்கிக்கொண்டிருந்தாலுங்கூட, இரண்டு வாகனங்கள் engaged ஆக இருக்கும்பொழுது, மூன்றாவதாக அவர்கள் கேட்கும்பொழுது, அவர்களால் வாகனம் கொடுக்க இயலவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ரெங்கராஜன், கேள்விக்கு வாருங்கள்.*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *எனவே, மூன்றாவதாக அதிராம்பட்டினத்திற்கு மிக அவசியமான 108 ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்றைக் கொடுக்க வேண்டுமென்பதை என்னுடைய கோரிக்கையாக நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 108 அவசரகால ஊர்திகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலே 200 புதிய ஊர்திகளை வாங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இவற்றைப் பகிர்ந்தளிக்கும்போது, அதிராம்பட்டினம் பேரூராட்சிக்கான தேவையினையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கருத்தில் கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**30—**

## திருக்கோயில் புனரமைப்பு

*__*5062—திரு. கு.வ. மார்க்கண்டேயன்:__*

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) விளாத்திகுளம் தொகுதியிலுள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் நகர், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம், செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்குக் கடந்த 26–10–1996 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் கடந்த நிலையில் திருப்பணி செய்ய திட்டமிட்டு, இத்திருக்கோயிலில் ரூ.46.60 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அனைத்துப் பணிகளும் முடிவுற்று 30–06–2012–க்குள் குடமுழுக்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.*

**திரு. கு.வ. மார்க்கண்டேயன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை கோடி கழக உறுப்பினர்களின் இரத்தத்தோடும், இரத்தத்தின் சுழற்சியோடும், எங்கள் உணர்வுகளோடும் ஒன்றாகக் கலந்திருக்கிற, நாங்கள் நித்தம் வணங்குகிற எங்கள் காவல் தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) விளாத்திகுளம் தொகுதியில் 400 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட இந்த விளாத்திகுளம், மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில், மீனாட்சி அம்மன் இருக்கக்கூடிய ஆலயமும், சுந்தரேஸ்வரர் இருக்கக்கூடிய மூலஸ்தானமும் சிதிலமடைந்திருக்கின்றன. சுற்றியிருக்கக்கூடிய 4 பக்க மாடச்*

சுவர்கள் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய விளாத்திகுளத்தில் இருக்கக்கூடிய பெரியோர்கள், அறநிலையக் குழுவினர் சேர்ந்து புதிதாகக் கட்டுவதற்கு 5 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள் நூற்றுக்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளிலிருந்து வரும் மக்கள், மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில்தான் திருமணங்களை நடத்துகிறார்கள். அந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக வழிபாடு செய்வதற்கு, விளாத்திகுளம் சுற்று வட்டாரப் பகுதி மக்கள் நன்கொடைகள்மூலமும், அரசின் உதவியோடும் இந்தத் திருக்கோயிலை அனைத்து சமூக மக்களும் பயன்பெறும் வகையில், திருக்கோயில்கள் மற்றும் ஆலயங்களையெல்லாம் சிறப்பாகப் புனரமைத்துக் கொடுக்கிற தமிழகத்தின் ஏழு கோடி மக்களினுடைய ஆராதனைக்குரிய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி), புதிதாக, சிறப்பாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்து சமய அறநிலையத் துறையின் சார்பிலே இருக்கின்ற கோயில்களுக்கெல்லாம் நிதி ஒதுக்கப்பட்டு, சிறப்பாகப் புனரமைக்கப்பட்டு, குடமுழுக்குகள் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று வருங்காலத்தில் அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக் கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் திருச்சியில் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்று அதை எடுக்க முடியாது. நீங்கள் காலையில்தான் அறிவிக்கை கொடுத்திருக்கிறீர்கள்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### காவிரி நீரைத் தமிழகத்திற்குத் தர கர்நாடக அரசு மறுப்பதுடன் மேகதாது என்ற இடத்தில் புதிய அணை கட்ட முயற்சிப்பது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி காவிரியிலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிட, கர்நாடக அரசு மறுப்பதுடன், காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில், புதிய அணை கட்ட முடிவு செய்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து தே.மு.தி.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் ஆகியோர் சட்டப் பேரவை விதி 55—இன் கீழும், தி.மு.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் கோவி. செழியன், திரு. க. அன்பழகன், திரு. அ. சௌந்தரபாண்டியன் ஆகியோர் சட்டப் பேரவை விதி 56—இன் கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் சட்டப் பேரவை விதி 55—இன் கீழும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. எஸ்.பி. முத்துக்குமரன், திரு. பி.எல். சுந்தரம், திரு. கு. லிங்கமுத்து ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 56—இன் கீழும், மனிதநேய மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு ஆகியோரும் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.

*முற்பகல் 11–05*

இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். தே.மு.தி.க. கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) யார் பேசப் போகிறீர்கள்? (குறுக்கீடு) இன்றைக்குத்தான் கொடுத்துள்ளீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். தே.மு.தி.க. கட்சியின் சார்பாகப் பேசவில்லையா நீங்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)*

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றுப் பிரச்சினை நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற ஒன்று. அதோடுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே மிக முக்கியமான ஒன்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பிரச்சினையை நன்கு அறிவார்கள். ஆனால், இன்றைய தினம் கர்நாடக அரசியல் தலைவர்களின் போக்கு தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராக அமைந்துள்ளது என்பது மிகவும் கவலை தரக்கூடிய ஒன்றாகும். ஒரு சொட்டு தண்ணீர்கூட தமிழ்நாட்டுக்குத் தரமாட்டோம் என்று முழக்கமிடுகிறார்கள். நாம் ஏதோ அவர்களை ஒரு சொட்டு தண்ணீர் கேட்டதுபோலவும், அவர்கள் ஒரு சொட்டு தண்ணீர்கூட தரமாட்டோம் என்று சொல்கிறார்கள். உண்மையிலேயே கேட்பதற்கும், தருவதற்கும் அவர்களுக்கு மட்டுமே உரிமை என்று நினைப்பது தவறான போக்காகும். பொதுவாக நதிநீர்ப் பகிர்வு என்பது அந்தப் படுகையிலே உள்ள அத்தனை மக்களுக்கும் உரிமையுடையது. காவிரி ஆற்றுப் படுகை என்று சொல்கிறபோது, அதிலே வருகின்ற நீரைப் பகிர்ந்துகொள்கின்ற உரிமை காவிரி ஆற்றுப் படுகையிலுள்ள அத்தனை பேருக்கும் உண்டு. அந்த அடிப்படையில் கர்நாடகத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால் அவர்கள் ஒரு சொட்டு தண்ணீர்கூட தரமாட்டோம் என்று சொல்லி மக்களிடத்திலே பிரச்சினையை வளர்ப்பதன்மூலம் ஓர் உணர்ச்சியை தூண்டிவிடுகிறார்களோ என்கின்ற அச்சம் ஏற்படுகிறது.





நாடுகளுக்கிடையே ஓடுகிற ஆறுகளை நதிநீர்ப் பகிர்வு என்ற அடிப்படையில் பகிர்ந்துகொள்கிறார்கள். மாநிலங்களுக்கிடையே ஓடுகின்ற ஆற்று நீரைப் பகிர்ந்துகொள்வதில் எந்தச் சிரமமும் இருக்கத் தேவையில்லை. ஓர் ஆற்றின் எல்லை என்பது இயற்கையானது. ஆனால் ஒரு மாநிலத்தின் எல்லையோ அல்லது நாட்டின் எல்லையோ மனிதர்களாகிய நாம் வகுத்துக்கொள்வது. ஆகையினாலேதான், ஆற்று நீரைப் பகிர்வு செய்துகொள்வதற்கு இயற்கை நியதியின்படி, சர்வதேச நெறிமுறைகளை வகுத்திருக்கின்றார்கள். காவிரி ஆற்றைப் பொறுத்தவரையில், தொன்றுதொட்டு காவிரி ஆற்று நீரைப் பகிர்ந்துகொள்வதற்கென்று ஒரு ஃபார்முலா—sharing arrangement—ஏற்கெனவே உள்ளது. அண்மையிலே காவிரி நடுவர் மன்றமும்கூட அதைப்பற்றி ஆராய்ந்து ஏற்கெனவே வாரத்திற்கு ஒரு முறை நீரைப் பகிர்ந்துகொள்ளலாம் என்ற நிலையை மாற்றி, 15 நாட்களுக்கு ஒரு முறை நீரைப் பகிர்ந்துகொள்வதற்கு வழிவகை செய்திருக்கின்றது. ஆக, மழை பெய்கிறபோது—இப்பொழுது கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் உச்ச நீதிமன்றத்திலேகூட பல தடவை சொல்லியிருக்கிறார்கள். “தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தருவதற்கு எங்களாலே எப்படி உத்தரவாதம் தரமுடியும்? மழை பெய்தால்தானே தண்ணீர் கிடைக்கும்? ஆகவே, இவ்வளவு தண்ணீர் தருவோம் என்பதற்கு எங்களாலே உத்தரவாதம் தரமுடியாது” என்பது கர்நாடகத்தினுடைய வாதம். ஆனால் ஏற்கெனவே இருந்த 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தமாயினும், அதற்குப் பிறகு காவிரி நடுவர் மன்றத்தினுடைய பரிந்துரையாயினும், அவற்றைப் பார்க்கிறபோது, அவ்வப்போது மழை பெய்கிறபொழுது அந்த நீரைப் பகிர்ந்துகொள்வதற்கு அட்டவணை இருக்கிறது. ஆகவே, பெய்கிற மழையைப் பகிர்ந்துகொள்கின்ற அட்டவணையை கர்நாடக அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுதான் நியதி, அதுதான் சர்வதேச நியதியும்கூட. ஆகையினாலே, அதை வற்புறுத்துகின்ற வகையிலேதான் இன்றைக்குத் தமிழக அரசின் சார்பிலே உச்ச நீதிமன்றத்திலேயும் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த நியாயத்தை உணரவேண்டும். அங்கே இருக்கின்ற மக்களைத் தூண்டிவிட்டு, தமிழ்நாட்டிற்கு எதிராகவோ அல்லது தமிழர்களுக்கு எதிராகவோ எத்தகைய பிரச்சினையையும் உருவாக்கக்கூடாது என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [2012 மார்ச் 30

முற்பகல் 11–10

'மேகதாது திட்டம்' என்று மற்ற திட்டங்களையெல்லாம் அவர்கள் போடுகிறார்கள் என்றால், கர்நாடகம் காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, தங்களுக்குப் போக தண்ணீர் மிச்சம் இருந்தால்தான் தமிழ்நாட்டிற்கு. அதை ஆங்கிலத்திலே சொல்வதானால், Theory of Sovereignty என்று சொல்வார்கள். அதெல்லாம் கடந்த காலம். ஒரு காலத்தில் Natural flow. காவிரி ஆற்றில் இயற்கையாக வருகிற தண்ணீர் என்கிறபோது, நமக்கு ஒரு Theory of Sovereignty என்றால், எனக்குப் போகத்தான் மற்றவர்களுக்கு என்று. ஆனால், இன்றைக்கு சர்வதேச நியதி அப்படியல்ல Natural flow–உம் கிடையாது, Theory of Sovereignty–யும் கிடையாது. Equitable Apportionment Theory; அதாவது சமமாகப் பங்கிட்டுக்கொள்வது. அந்த அடிப்படையிலேதான், இன்றைக்குத் தமிழ்நாடு தனக்குரிய நீர்ப் பங்கினை வற்புறுத்துகின்றது. அந்த நியாயத்தை ஏற்றுக்கொள்வதற்கு நம்முடைய தமிழக அரசு எடுக்கின்ற அத்தனை நடவடிக்கைகளுக்கும் நாங்கள் உறுதுணையாக இருப்போம். இன்னும் சொல்லப்போனால், நியாயங்களே வெற்றி பெற்றுவிடுவது இல்லை. நியாயங்களுக்கு வலிவு சேருகிறபோதுதான் வெற்றி கிடைக்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த அத்துணை மக்களும், அத்துணை அரசியல் கட்சியினரும் நிச்சயமாக இந்தக் காவிரி ஆற்றுப் பிரச்சினையில், தமிழக அரசோடு ஒன்றுபட்டு இருக்கின்றார்கள்; இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்போடு இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த நிலையைப்பற்றி அரசு என்ன கருதுகிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

'உணவெனப் படுவது நிலத்தொடு நீரே' என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே புறநானூற்றில் அழகாக எழுதியிருக்கிறார்கள். உணவு என்பது நிலமும், நீரும் சேர்ந்ததுதான். நீர் இல்லையென்றால் தமிழ்நாட்டிலே உணவு எப்படி உற்பத்தியாகும்? இத்தகைய மிகப் பெரிய ஓர் ஆபத்து எதிர்நோக்கி இருக்கிறது. ஆகவே, இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விழைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.



2012 மார்ச் 30]

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி எண் 56–இன்கீழ் தமிழ்நாட்டு மக்களுடைய ஜீவாதாரப் பிரச்சினையாகக் கருதக்கூடிய காவிரி நீர்ப் பிரச்சினையை மையப்படுத்தி, வரலாற்றுப் புகழுடைய இந்த மாமன்றத்தில் நான் கலந்துகொண்டு கருத்துகளை எடுத்துச்சொல்வதற்கு அரிய வாய்ப்பினை வழங்கிய, திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர், தமிழகத்தின் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எங்கள் சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர், வரலாற்றுப் புகழுடைய சிறப்புமிக்கப் பட்டமாக கருதுகிற வாழ்நாள் மாண்புமிகு என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிற 'Kentucky Colonel' டாக்டர் தளபதி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், திரு. பரமேஸ்வர ராவ் அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினையை மையப்படுத்தி, தமிழகத்திற்கு ஒரு சொட்டு தண்ணீர்கூட தர மாட்டோம் என்ற கருத்தை வலியுறுத்தி, கர்நாடக மாநில முதலமைச்சர், மரியாதைக்குரிய மாண்புமிகு சதானந்தகவுடா அவர்கள் அதே கருத்தை ஏற்றுக்கொண்டு அறிவித்திருக்கிறார். காவிரி நீர்ப் பிரச்சினை என்பது, ஏதோ ஒரு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துகள் மட்டுமல்ல; சட்டமன்றப் பேரவையினுடைய எதிர்கட்சித் துணைத் தலைவர் குறிப்பிட்டதைப்போல, தமிழகத்தில் இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு, குரல் கொடுக்க வேண்டிய பிரச்சினை, இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினை. நடுவர் மன்றத் தீர்ப்பை கர்நாடக அரசு ஏற்க மறுக்கிறது என்பது எல்லா அரசியல் கட்சிகளும் தொடர்ந்து கண்டிப்பது வாடிக்கை.

1989 ஆம் ஆண்டு தமிழகத்தின் முதல்வராக டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றிருந்த நேரம், சமூக நீதிக் காவலர், முன்னாள் பாரதப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களிடம் வலியுறுத்தி, காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய நடுவர் மன்றத்தை அமைத்தார்கள். அதையொட்டி, 1991 ஆம் ஆண்டு, இடைக்காலத் தீர்ப்பாக 205 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டுமென முடிவெடுத்து, அதையும் முறைப்படி கர்நாடக அரசு வழங்காமல், 2007 ஆம் ஆண்டு இறுதித் தீர்ப்பாக 419 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டுமென்பதையும் மறுத்து, காவிரி நீர்ப் பிரச்சினையில் விவசாயிகள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள்.

[திரு. கோவி. செழியன்] [2012 மார்ச் 30

முற்பகல் 11–15

'சோழநாடு சோறுடைத்து' என்று பெருமையாகப் பேசுகிறோம். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்ற நிலையை மாற்றி சேலம், கரூர், திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நாகை போன்ற டெல்டா மாவட்டங்களில் வாழக்கூடிய விவசாயிகளின் 16,86,000 எக்டேர் விவசாய நிலம் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையிலும், ஜீவாதாரப் பிரச்சினையான குடிநீர்ப் பிரச்சினைக்கே தண்ணீர் இல்லை என்ற நிலையும் இருக்கின்ற இந்த நேரத்தில், கர்நாடக மாநில அரசினுடைய அறிவிப்பு 'வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதைப்போல்' அமைந்திருக்கிறது.

எப்படி இனப் பிரச்சினை என்றால் அல்லது மொழிப் பிரச்சினை என்றால் தமிழகத்தில் அரசியல் கட்சியினர் அனைத்தும் ஒன்று திரண்டு குரல் கொடுக்க எண்ணுகிறோமோ, அதைப்போல 'ஒரு சொட்டுத் தண்ணீர்' என்ற வார்த்தைதான் தமிழக விவசாயிகளை மிகவும் பாதிப்படைய வைத்திருக்கிறது. கர்நாடக மாநிலத்தில் அரசியல் கட்சிகள் வேறுபாடுகளைக் கடந்து எல்லா கட்சிகளும் ஒன்று திரண்டு தன் மண்ணின் பிரச்சினைக்கு உயிர்நாடியாகத் துடிப்பதைப்போல் சட்டப் பேரவையில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் இந்தக் கருத்தை வலியுறுத்த விரும்புகிறார்கள்; கருதுகிறார்கள்.

219 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டுமென்று சொன்னபோதுகூட, கர்நாடக அரசு 171 டி.எம்.சி. தண்ணீரைத்தான் தந்து கொண்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். ஜுன் மாதம் 12 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட வேண்டும். அப்போதுதான் குறுவை விவசாயம் பாதிக்கப்படாமல் நடந்து கொண்டிருக்கும். ஆனால், ஜுன் மாதம் 12 ஆம் தேதி முறைப்படி அந்த மேட்டூர் அணை திறக்கப்படாத அவல நிலையையும் விவசாயிகள் அறிவார்கள். எனவே, கர்நாடக மாநில அரசினுடைய இந்தப் போக்கைக் கண்டிக்கக்கூடிய வகையில், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் தமிழக அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, ஒரு முடிவு எடுத்ததைப்போல தமிழ்நாடு அரசு (குறுக்கீடு) இறுதிக் கோரிக்கைக்கு வந்து விட்டேன். பேரவைத் தலைவர் அவர்களே, இறுதிச் செய்தியாக, அரசியல் கட்சிகள் பாகுபாடு பார்க்காமல்...



2012 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் காவிரியிலிருந்து முல்லைப் பெரியாறுக்குப் போக வேண்டாம். காவிரியைப்பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சரித்திரத்திலேயே இந்த ஆண்டு ஜுன் மாதம் 6 ஆம் தேதி தண்ணீர் திறந்து விடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கத்திலே நான் குறிப்பிட்டது, நம்முடைய ஒட்டுமொத்த நோக்கம் கர்நாடக அரசை நோக்கி இருக்க வேண்டும் என்பதுதான். 12 ஆம் தேதி திறக்கப்படுவது 6 ஆம் தேதி திறந்தால், ஒட்டுமொத்த டெல்டா மாவட்ட மக்கள் அதை வரவேற்பார்கள்; இந்த அரசைப் பாராட்டுவார்கள்; அது வேறு விஷயம்.

நாங்கள் மையக் கருத்தாகச் சொல்ல விரும்புவது, கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ், கம்யூனிஸ்டு, பிற கட்சிகள் அல்லது கன்னட அமைப்பைச் சார்ந்த வட்டாள் நாகராஜ் போன்றவர்கள் ஒன்று திரண்டு அந்த மாநிலத்தின் குரலை எழுப்புவதுபோல, முல்லைப் பெரியாறு பிரச்சினையில் இந்த அரசு எப்படி ஒட்டுமொத்தமாக அனைத்துக் கட்சிகளுடைய ஆதரவைப் பெற்றதுபோல, 'ஒரு சொட்டுத் தண்ணீர்கூட தரமாட்டோம்' என்று சொல்லுகிற அந்தக் கர்நாடக அரசை கண்டிக்கக்கூடிய வகையில், அனைத்துக் கட்சிகளும் ஒன்றுகூடி அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை உடனே கூட்டி, அவர்கள் சொல்லுகிற கருத்தை ஏற்று, மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்தி, என் கவன ஈர்ப்புத் திர்மானத்தை ஏற்று மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி பிரச்சினையில் தொடர்ந்து கர்நாடக அரசினுடைய அணுகுமுறையால் தமிழகம் வஞ்சிக்கப்பட்டு வருவதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். நடுவர் மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பு 1991 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பிறகும், அதைக் கர்நாடக அரசு ஏற்று அமலாக்கவில்லை. 16 ஆண்டுகளுக்குப் பிறகு, நடுவர்மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு 2007 ஆம் ஆண்டு வந்த பிறகும், அதை ஏற்று அமலாக்காமல், உச்ச நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்தார்கள். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு உள்ளிட்ட புதுவை, கேரள அரசுகளும் உச்ச நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்து, அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

காவிரி நடுவர்மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு, உத்தரவிலே ஒன்றை அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அதாவது அமலாகிற இந்த காலத்தில், மேல் மட்டத்திலே இருக்கின்ற மாநிலங்கள் கீழ்மட்டத்திலே இருக்கின்ற மாநிலங்களுக்கு, அதாவது தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கு பாசனத்திற்கு எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு இடையிலே எந்த பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடாது என்பதும் அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இவற்றையெல்லாம் மீறி கர்நாடக அரசு ஒவ்வோர் ஆண்டும் கோடைக் காலத்திலே பாசனம் செய்வதற்கு அவர்களுக்கு உரிமையில்லாத காலத்தில், காவிரி நீர்த்தேக்கத்திலே இருக்கிற தண்ணீரையெல்லாம் எடுத்து முழுமையாகப் பயன்படுத்தி, அந்தத் நீர்த் தேக்கங்களையெல்லாம் காலி செய்து விடுகிறார்கள். அதனாலே, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் மழை பெய்கிறபோது, கர்நாடக மாநிலத்திலுள்ள அணைகள் நிரம்பி தமிழகத்திற்குத் தண்ணீர் கிடைப்பதில் காலதாமதம் ஆகிறது. இதனால் கிட்டத்தட்ட கடந்த ஆண்டுகளில் பலமுறை மேட்டூர் அணையை நாம் ஜூன் 12 ஆம் தேதி திறப்பது தள்ளிப்போய், அதனாலே தமிழகத்திலே டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்வதில் பாதிப்பு ஏற்படுவதை நாம் நெடுங்காலமாக அனுபவித்து வந்திருக்கிறோம்.





முற்பகல் 11–20

இந்த நேரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பில், கர்நாடக அரசினுடைய இந்தப் போக்கு கோடைக்காலத்திலே கர்நாடக அரசு அங்குள்ள அணைகளிலே இருக்கிற நீரை எடுத்துப் பயன்படுத்த தடை விதிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்திலே தொடுத்திருக்கிற மனு நிச்சயமாக நியாயமானது. நம்முடைய உரிமையை வற்புறுத்துகிற அடிப்படையிலே அமைந்திருக்கிற மனு என்கிற முறையில் அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உச்ச நீதிமன்றம் இது சம்பந்தமாக விவாதித்து முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலையில், கர்நாடக அரசு, கர்நாடக சட்டமன்றத்தில் அங்கே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர், கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் உட்பட, இதைக் காரணம் காட்டி தமிழக அரசாங்கத்தையும், முதலமைச்சர் அவர்களையும் விமர்சிப்பது மட்டுமல்லாமல், ஒரு சொட்டுத் தண்ணீர்கூட தமிழகத்திற்குக் கொடுக்கக்கூடாது என்று அவர்கள் பேசியிருக்கிற அந்தப் பேச்சு, தமிழகத்திலே இருக்கிற பல இலட்சக்கணக்கான விவசாயிகளை ஆழ்ந்த கவலையிலே ஆழ்த்தியிருக்கிறது.

எனவே, இந்தச் சூழ்நிலையில், தமிழகத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகளும், நாம் அனைவரும், ஒத்த கருத்தோடு இந்தக் காவிரி நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை அமலாக்குவதை உருவாக்கக்கூடிய அதேநேரத்தில், இந்தக் கோடைக் காலத்திலே தண்ணீர் எடுக்காமல் அந்த அணையிலே இருக்கிற தண்ணீரைப் பாதுகாத்து ஜூன் 12 ஆம் தேதி தமிழகத்திற்குத் தண்ணீரைத் திறந்துவிடுகிற அந்த உரிமையைப் பெறுவதற்கு, நாம் ஒன்றுபட்டு குரல் எழுப்ப வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். எனவே, கர்நாடக அரசாங்கத்தின் சார்பில், அந்த முதலமைச்சர் அதை ஒரு அரசியல் பிரச்சினையாக்கி தமிழகத்திற்கும், கர்நாடகத்திற்கும் இடையிலே மோதல் போக்கைக் கடைபிடிப்பது எந்தவிதத்திலும் சரியான அணுகுமுறை அல்ல. அது இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க உதவி செய்யாது

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2012 மார்ச் 30

என்பதைச் சுட்டிக்காட்டுகிற இந்த நேரத்தில், தமிழகத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகளும் ஒன்று திரண்டு, தமிழக அரசுடன் இணைந்து இந்த உரிமையை நிலைநாட்டுவதற்கு நாம் ஒன்றுபட்டு செயல்படவேண்டும். அதனைத் தொடர்ந்து, இந்தச் சட்டமன்றத்தின்மூலமாக நாம் வலியுறுத்தவேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்குக் கிடைக்கவேண்டிய நியாமான தண்ணீரை, கர்நாடக அரசு வழங்க மறுப்பதும், தமிழகத்திற்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வழங்கக்கூடாது என்று மூன்று நாட்களுக்கு முன்பாக நடைபெற்ற கர்நாடக மாநில சட்டமன்றப் பேரவையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரும் இணைந்து தமிழகத்திற்குக் கிடைக்கவேண்டிய நியாயமான, காவிரி நடுவர் மன்றத்தால் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய தண்ணீரைக் கொடுக்கக்கூடாது என்று சட்டமன்றத்திலேயே எடுத்துச் சொல்லியிருப்பது என்பதும், தமிழகத்தினுடைய நலன்களை மறுப்பது மட்டுமல்ல; காவிரி டெல்டா பகுதியில் இருக்கக்கூடிய தமிழகத்தினுடைய விவசாயிகள் ஒட்டுமொத்தமாக பாதிக்கக்கூடிய அளவிற்கு அவர்களுடைய நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. கர்நாடக மாநிலத்தினுடைய நடவடிக்கை என்பது தமிழகத்திற்கும், கர்நாடகத்திற்கும் இடையே இருக்கக்கூடிய உறவுகளைப் பாதிக்கக்கூடிய முறையில், இந்தப் பிரச்சினையை வைத்துக்கொண்டு எடுக்கக்கூடிய நடவடிக்கை என்பது மாநிலத்திற்கு மாநிலம் ஏற்படக்கூடிய வேறுபாடுகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கையாக நான் கருதுகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு கட்டங்களில், பல்வேறு நடவடிக்கைகளை, ஒட்டுமொத்தமாக தமிழகத்தினுடைய நலன்களைப் பாதுகாப்பதற்கான முறையில், இந்தத் தமிழகத்தினுடைய சட்டமன்றத்திலேயே பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த மக்களினுடைய நலன்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.



2012 மார்ச் 30] [திரு. எம். ஆறுமுகம்]

இன்றைய தினம்கூட, பத்திரிக்கையிலே ஒரு செய்தியைப் பார்த்தபோது அதிர்ச்சியாகவே இருந்தது. நம்முடைய பாரதத்தினுடைய பிரதமர் அவர்கள், பாகிஸ்தான் அமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தி, 5,000 மெகாவாட் மின்சாரம் பாகிஸ்தானுக்குக் கொடுப்பது என்றும், அதேபோல இந்தியாவினுடைய மின்சார அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு ஷிண்டே அவர்கள் தமிழகத்திற்கு ஒரு யூனிட் மின்சாரம்கூட நான் வழங்கமாட்டேன் என்று சொல்லியிருக்கக்கூடிய செய்தி என்பது தமிழகத்தை ஒட்டுமொத்தமாகவே புறக்கணிப்பது என்கிற சூழல் உருவாகியிருப்பது என்பது நமக்கெல்லாம் கவலையளிக்கக்கூடிய செய்தியாகவே இருந்து கொண்டிருக்கிறது.

எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தமான நலன்களைப் பாதுகாக்கக்கூடிய முறையில் நமக்கு நடுவர்மன்றம் கொடுத்திருக்கக்கூடிய அந்தத் தீர்ப்பினை முழுமையாக அமல்படுத்தி, டெல்டா பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய நலன்களைப் பாதுகாக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் தமிழகத்திற்கும் கர்நாடகத்திற்கும் இடையே இருக்கக்கூடிய உறவுகளைப் பாதிக்கக்கூடிய முறையில் அது எந்த அமைப்பாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, கர்நாடகத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழகத்திற்கு வஞ்சகம் செய்யக்கூடிய ஒரு நடவடிக்கையைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–25

தமிழகத்தினுடைய சட்டமன்றத்தில் மட்டுமல்ல; உச்ச நீதிமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடுத்திருக்கக்கூடிய வழக்கு நியாயமான வழக்கு என்பதால், நாம் அவர்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும். தமிழகத்தினுடைய நலனைப் பாதுகாப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுதியாக இருக்கும் என்ற அடிப்படையிலே, விதி 56–இன்கீழ் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தப் பிரச்சினையை நான் உங்கள் மத்தியிலே எடுத்துரைத்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நடுவர்மன்றம் பிப்ரவரி, 2007 ஆம் ஆண்டிலே வழங்கிய இறுதி உத்தரவுக்கு முற்றிலும் புறம்பாக, கோடைக் காலத்திலே காவிரி நீரைப் பயன்படுத்திக்கொள்ள கர்நாடக அரசு எடுத்துவரக்கூடிய முயற்சிகளை நன்கு உணர்ந்து, அதை முறியடிக்கக்கூடிய வகையிலே உச்ச நீதிமன்றத்தை நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நாடியிருப்பதை, தொடக்கத்திலேயே நான் வரவேற்கிறேன்.

மேட்டூர் அணை மூடப்படும் ஜனவரி மாதம் 28 ஆம் தேதிக்குப் பிறகு, தமிழ்நாடு மற்றும் கர்நாடகம் ஆகிய இரண்டு மாநிலங்களும் காவிரி தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தக்கூடாது என்று நடுவர்மன்றத் தீர்ப்பாணையம் தெளிவாகக் கூறியது. இந்த உத்தரவிற்குப் புறம்பாகத்தான் கோடைக் காலத்திலே தனது அணைகளில் மிஞ்சக்கூடிய தண்ணீரையெல்லாம் பயன்படுத்திவிட்டு, தென்மேற்குப் பருவமழை பொழியும் காலத்தில் தனது அணைகளைக் காலியாக வைக்கும் தந்திரத்தை, மோசமான தந்திரத்தை, மனித நேயமற்ற தந்திரத்தை கர்நாடக அரசு மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாக கர்நாடகத்திலுள்ள அணைகளிலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுவது காலதாமதமாவதோடு மட்டுமல்லாமல், தென்மேற்குப் பருவமழை காலமான ஜூன் முதல் வாரத்திலே மழை பொழியாவிட்டால், மேட்டூர் அணையை உரிய நேரத்திலே திறக்க இயலாது. இதன் காரணமாகத் தமிழகத்திலே சுமார் 7 இலட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி பாதிக்கப்படக்கூடிய நிலையை கர்நாடக அரசு ஏற்படுத்தி இருக்கின்றது.

கர்நாடக சட்டமன்றத்திலே உள்ள கட்சித் தலைவர்கள் அனைவரும் தமிழகத்திற்கு எதிராக ஒட்டுமொத்தமாகக் குரல் கொடுத்திருக்கின்றார்கள். சட்டமன்றத்திற்கு வெளியிலே, தமிழகத்திலே அ.தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் காவிரிப் பிரச்சினையை அரசியலாக்குகிறார்கள் என்று மிக மோசமான விமர்சனங்களையெல்லாம் செய்திருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உருவ பொம்மையை





எரிக்கக்கூடிய அளவிற்கு அங்கே தமிழர்களுக்கு எதிரான வெறியாட்டம் நடைபெற்று வரக்கூடிய சூழல் இருக்கிறது. இந்தப் பிரச்சினையிலே இரும்பு, எஃகு—வைப் போன்று தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து நமது உரிமைகளை நிலைநாட்டுவதற்கு முன்வர வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை இந்தத் தீர்மானம் வாயிலாக தெரிவித்து விடைபெறுகின்றேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதிய தமிழகம் கட்சியின் சார்பாக டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஜீவாதாரமாக விளங்கக்கூடிய காவிரிப் பிரச்சினையில் காவிரி நடுவர்மன்றத் தீர்ப்பிற்குப் பிறகு ஒரு முடிவு வந்ததாக எண்ணிக் கொண்டிருக்கக்கூடிய வேளையில், இப்பொழுது கர்நாடகம் மீண்டும் தன்னுடைய பழைய நிலையை மேற்கொள்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. குறிப்பாக, புதிய அணைகள் கட்டுவது அல்லது ஜனவரி மாதத்தின் இறுதியிலிருந்து மே மாதம் வரையிலும் கர்நாடகத்தில் இருக்கக்கூடிய அணைகளிலிருந்து எந்தக் காரணத்தைக் கொண்டும் விவசாயத்திற்கு நீரைப் பயன்படுத்தக்கூடாது என்ற தீர்ப்பு இருந்தாலும்கூட, அதையும் மீறி, கர்நாடகத்தில் இருக்கக்கூடிய அணைகளிலிருந்து கோடைக் கால விவசாயத்திற்காக நீரைப் பயன்படுத்துவதற்கு கர்நாடகம் முயற்சி செய்வதும், அதையொட்டி தேவையில்லாமல் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெயரைச் சுட்டிக்காட்டி, எப்பொழுதெல்லாம் இவர்கள் ஆட்சிக்கு வருகிறார்களோ அப்பொழுதெல்லாம் காவிரிப் பிரச்சினை என்று தேவையில்லாமல் சொல்வதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

ஒரு மருத்துவரைப் பொறுத்தமட்டில், நோய் வந்த பிறகு சிகிச்சை அளிப்பதைக் காட்டிலும், அதற்கு முன்கூட்டியே சிகிச்சை அளிப்பதுதான், தடுப்பதுதான் சிறந்தது. அந்த வகையிலே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுடைய நலனைக் காக்கக்கூடிய வகையிலே நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். அதை நான் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2012 மார்ச் 30

முற்பகல் 11–30

இப்போது நம்முடைய ஆதங்கம் எல்லாம், இரண்டு விஷயங்களை நாம் இப்போது தடுத்தாக வேண்டும். ஒன்று, கர்நாடகத்திலே புதிய அணை கட்டுவது; அதாவது, மேகதாது என்ற இடத்திலே அணை கட்டுவது. இரண்டாவது, கோடைக் காலத்திலே இந்த நீரைப் பயன்படுத்துவது. எனவே, இந்த இரண்டு விஷயங்களிலேயும் நாம் உறுதியான நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அந்த வகையில், இந்த மாமன்றத்திலே நாம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். தேவைப்பட்டால், தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தையும் கூட்டி, அவர்களுடைய ஆலோசனைகளையும் பெற்று—அனைவருடைய கருத்துகளையும் எப்படி மற்ற எல்லா விஷயங்களிலும் ஒருங்கிணைக்கின்றோமோ, அதைப்போல, இந்த நிகழ்ச்சியிலேயும் ஒருங்கிணைத்து, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த குரலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சருடைய பின்னாலே இருக்கிறது என்பதை உறுதி செய்ய வேண்டும். அதற்குப் புதிய தமிழகம் கட்சி, மாண்புமிகு தமிழக முதல்வருடைய நடவடிக்கைக்கு என்றைக்கும் உறுதுணையாக இருக்கும் என்பதைக் கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வற்றாத ஜீவ நதியான காவிரி ஆற்றின் சட்டபூர்வ உரிமையில், சட்ட விரோதமாக கர்நாடக அரசு புதிதாக அணைகளைக் கட்டியும், பாசன விளைநிலங்களின் பரப்பை விரிவுபடுத்தியும், குறிப்பாக, மேகதாது என்னும் அணைக்கட்டு திட்டத்தைத் தீர்மானித்து, அதனைக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டும் வருகிறது. ஏற்கெனவே, நடுவர்மன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்க மறுத்து வருகிற கர்நாடக அரசு; கர்நாடக அரசை நடுவர்மன்றத்தின் தீர்ப்பை அமல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்த மறுக்கிற மத்திய அரசு; இதுபோன்று தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்து, நமக்கான தண்ணீரைத் தர மறுக்கும் கர்நாடகம். இந்த நிலையில், கடந்த வாரம் கர்நாடக சட்டமன்றத்தில் தமிழக அரசை ஆணவப் போக்கோடு விமர்சித்துள்ளார்கள்.



2012 மார்ச் 30] [திரு. உ. தனியரசு]

குறிப்பாக, கர்நாடக நீர்ப்பாசனத் துறை அமைச்சரே விமர்சித்திருக்கிறார். தமிழக அரசின் நீதிமன்ற வழக்கு முறையீட்டை சட்ட விரோதம் என்று பேசியிருக்கிறார்கள். கர்நாடகத்தின் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சித்தராமையா அவர்களே, "தமிழகத்திற்கு ஒரு சொட்டுத் தண்ணீரையும் தரக்கூடாது" என்று அழுத்தமாக வலியுறுத்தியிருக்கிறார். சட்டமன்றத்திலேயும் அனைத்துக் கட்சிகளும் அதை ஆமோதித்திருக்கின்றன. குறிப்பாக, ஆளும் பாரதிய ஜனதா கட்சி, மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சி உள்ளிட்ட தேசிய உணர்வுள்ள கட்சிகளே அதை ஆதரித்திருக்கின்றன; அதை ஆமோதித்திருக்கின்றன.

இதுபோன்ற செயல்களால், ஜனநாயகத்திற்கும், சட்டத்திற்கும் மதிப்பு தராமல், குறுகிய உள்ளூர் அரசியல் ஆதாயத்திற்காக தேசிய கட்சிகளான பிரதான கட்சிகளே, இப்படித் தொடர்ந்து தமிழகத்தையும், தமிழர்களையும் வஞ்சித்து வருகின்றன. தமிழக மக்களுக்கு விரோதமாக, தேச ஒற்றுமைக்கு விரோதமாகச் செயல்படுவதைக் கண்டிக்கிறேன். நம்முடைய தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய சட்டபூர்வமான தண்ணீரைப் பெறுவதற்கு நாம் உறுதியாக இருக்க வேண்டும். தேசியக் கட்சிகள் அப்படி கர்நாடக சட்டமன்றத்திலே பேசி வருவதால், தமிழகத்திலே வாழக்கூடிய 7 கோடி தமிழ் மக்களும், விவசாயத்திற்கான நீரைப் பயன்படுத்துவதிலே, குடிநீருக்கான நீரைப் பயன்படுத்துவதிலே நமக்கு ஏதேனும் பாதிப்பு வந்துவிடுமோ என்கின்ற ஓர் அச்சத்தில் இருக்கிறார்கள்.

இந்த நிலையில், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, காவிரி ஆற்றின் நீரில் நமக்கான தண்ணீரைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். "ஒரு சொட்டு நீரையும் நாங்கள் தமிழகத்திற்குத் தரமாட்டோம்" என்று திரு. சித்தராமையா சொன்னாலும், தமிழகத்தினுடைய, தாய்த் தமிழ் மண்ணினுடைய, 7 கோடி மக்களுடைய ஆட்சித் தலைவராக இருக்கிற எம் முதல்வர், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரின் அளவில் ஒரு சொட்டுத் தண்ணீரைக்கூட, பிறர் எவரொருவருக்கும் விட்டுத் தராமல், தமிழகத்தினுடைய உரிமையை மீட்டுத் தருவார்கள் (மேசையைத்

தட்டும் ஒலி) என்கின்ற நம்பிக்கையினை இன்று இந்தச் சட்டமன்றத்திலே நம்முடைய அனைத்துக் கட்சிகளும் வெளிப்படுத்தியிருக்கின்றன.

முற்பகல் 11–35

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால், கர்நாடகத்திலே இருக்கிற அரசியல் கட்சிகள் நமக்குச் சேரவேண்டிய, சட்டபூர்வமாகச் சேரவேண்டிய தண்ணீரை, அரசியல் ஆதாயத்திற்காகத் தராமல் தடுப்பது, இரு மாநில மக்களிடத்திலே ஒரு பதற்றத்தை, உணர்வலைகளை, மொழி, இனப் பாகுபாட்டை வளர்ப்பது என்பது அறிவுசார்ந்த, நவீன மானுட அரசியல் சமூகத்திற்கு எதிரானது என்பதைத் தெரிந்தே கர்நாடக அரசியல் கட்சிகள், குறிப்பாக, தேசிய கட்சிகள்—ஒற்றுமை உணர்வை வளர்க்க வேண்டிய கட்சிகள், தேச ஒற்றுமையை வளர்த்தெடுக்க வேண்டிய கட்சிகளேகூட—தேச ஒற்றுமைக்கு விரோதமாகச் செயல்படுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றன.

அது கேரளாவில் இருக்கிற அரசியல் கட்சியானாலும், கர்நாடகத்திலே இருக்கிற அரசியல் கட்சியானாலும் இதே நிலையைத் தொடர்ந்து செய்து வருகின்றன. ஆனால், தமிழகத்திலேதான், பிராந்தியக் கட்சிகள் இன, மொழி, உணர்வுள்ள மக்கள் என்று கருதுகின்ற நம்முடைய மக்கள்தான் ‘யாதும் ஊரே; யாவரும் கேளிர்’ என்கின்ற உன்னத வரிகளைப் பின்பற்றுகின்றன என்பதை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் உலகத்திற்கே நிலைநிறுத்துகிறார். இன்னமும் தமிழர்களாகிய நாம், அந்த மூதுரையின் வடிவமாய், பொருளாய் இருந்து, அண்டை மாநிலங்களின், எந்த இனத்தையும், எந்த மொழி பேசுகின்ற மக்களையும் குறைத்தோ, விமர்சித்தோ, பகைமை பாராட்டாமல் இருக்கிற ஒரே நாடு, உலகத்திலேயே இந்தத் தாய் தமிழ்த் திருநாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட மதிப்புமிக்க இந்தத் தாய்த் தமிழ் மண்ணில் வாழுகிற 7 கோடி பேர்களுக்கு மேற்பட்டு இருக்கின்ற, மூத்த சமூகமாக இருக்கிற தமிழ்ச் சமூகத்தை எவர் வஞ்சித்தாலும்—மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இல்லாத இடைப்பட்ட காலக்கட்டத்திலே தமிழர்களின் உரிமை பறிபோய்





இருக்கலாம்; அது நில உரிமையோ, ஆற்று நீர் உரிமையோ, கச்சத்தீவு உரிமையோ, ஈழத் தமிழர்களுடைய வாழ்வுரிமையோ பறிபோய் இருக்கலாம்— (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற, ஆட்சித் துறை தலைவர் பொறுப்பிலே இருக்கின்ற ஒரு நொடியில்கூட தமிழர்களுடைய முடியளவு தன்மானம், சுயமரியாதை, கௌரவம் போன்ற உரிமைகள் மறுக்கப்பட்டதாக வரலாறுகள் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

காவிரி நீரை மீட்டுத் தந்த உரிமைத் தாய், காவிரித் தாய் (மேசையைத் தட்டும் ஒலி) என்று காவிரியின் உரிமையை மீட்டுத் தந்துள்ளவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோன்று, எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் முடியளவும் தமிழகத்திற்கான உரிமையில் சமரசம் செய்துகொள்ள மறுப்பவர், கர்நாடக, கேரளா ஆட்சியாளர்களோடு, அரசியல் கட்சிகளோடு, ஏதாவது கள்ள உறவு அல்லது ஆதாய உறவை வைத்துக் கொள்ளாதவர் நம் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழர்களுக்கான உரிமையில் இவர் சமரசம் செய்துகொள்ள மாட்டார் என்பதற்காகவே கர்நாடக சட்டமன்றத்திலே தேவையில்லாமல்—உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது, நடுவர் நீதிமன்றத்திலே இருக்கிறது, அறிவுசார்ந்த நீதிபதிகள் அதுகுறித்துப் பரிசீலித்து வருகிறார்கள். ஆனால், மக்களுக்கு மொழி உணர்வை அல்லது பிராந்திய உணர்வை ஊட்டி, குறுகிய அரசியல் ஆதாயத்திற்காக தேசிய அரசியல் கட்சிகள், குறிப்பாக காங்கிரஸ், பாரதிய ஜனதா, மதச்சார்பற்ற ஜனதா தளம் போன்ற கட்சிகள் இந்த உணர்வைத் திட்டமிட்டே, தற்காலிகமாக இந்தப் பதற்றத்தை உருவாக்கி, நமக்கான ஆற்று நீர் உரிமையில் அவர்கள் தலையிட முயற்சிக்கிறார்கள். அவர்களுடைய முயற்சியைத் தடுத்து நிறுத்தி, நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தாய் அம்மா அவர்கள் நம்முடைய தமிழர்களுக்கான ஆற்று நீர் உரிமையை, குறிப்பாக, காவிர் ஆற்று நீர் உரிமையை, ஒரு சொட்டு நீரையும் பிறர் எவர் ஒருவரும், எந்தச் சூழ்நிலையிலும், எந்த வழியிலும் தடுத்து நிறுத்திவிட அனுமதிக்க மாட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத் தமிழ்நாடு சட்டமன்றமும், தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த மானுட சமூகமும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பின்பற்றி வழிநடக்கும்.

[திரு உ. தனியரசு] [2012 மார்ச் 30

இப்பிரச்சினையில் தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய கவனத்தை ஈர்த்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பங்கேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் காவிரியிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய உரிய பங்கு பெறப்பட வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்திப் பேசியுள்ளார்கள்.

காவிரி நடுவர் மன்றம் 5–2–2007 அன்று, தனது இறுதித் தீர்ப்பினை வழங்கியது. இந்த இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழில் பிரசுரிக்கப்பட்டு இருக்க வேண்டும். அவ்வாறு, உடனே பிரசுரிக்கப்பட்டு இருந்தால், இந்த இறுதி ஆணை செயல் வடிவம் பெற்றிருக்கும். ஆனால், காவிரித் தாவாவில் தொடர்புடைய அனைத்து மாநிலங்கள், அதாவது, தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்கள் மற்றும் மத்திய அரசு இதுதொடர்பாக விளக்கங்கள் கேட்டு, காவிரி நடுவர்மன்றத்தை அணுகின. இதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் கேரள மாநிலங்களின் சார்பில் உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மேல்முறையீட்டு மனுவில் மத்திய அரசும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

முற்பகல் 11–40

இந்தச் சூழ்நிலையில், 2011 ஆம் ஆண்டு மே மாதம் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, 14–6–2011 அன்று மாண்புமிகு பாரதப் பிரமமரை புது டெல்லியில் சந்தித்தபோது, காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடுவது; காவிரி மேலாண்மை வாரியத்தை அமைப்பது உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்தேன்.

காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடவும், காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்கவும், மத்திய நீர்வள அமைச்சகத்திற்கு அறிவுரை வழங்குமாறு



2012 மார்ச் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

17–10–2011 அன்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு மீண்டும் கடிதம் மூலம் வலியுறுத்தினேன். ஆனால் இக்கோரிக்கை மத்திய அரசால் இதுநாள்வரை நிறைவேற்றப்படவில்லை. இதுகுறித்து, தமிழக அரசு மத்திய அரசைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்படும் வரை, அதன் 25–6–1991 நாளிட்ட இடைக்கால ஆணை அமலில் இருக்கும் என்பது தமிழ்நாடு அரசின் நிலைப்பாடு. 16–10–2008 அன்று நடைபெற்ற காவிரிக் கண்காணிப்புக் குழுவின் 23ஆவது கூட்டத்தில் அதன் தலைவரும் இதே கருத்தை உறுதி செய்துள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள இடைக்கால ஆணையின்படி, நீரை விடுவிப்பதற்கான பாசன ஆண்டு என்பது ஜூன் மாதம் முதல் அடுத்த ஆண்டின் மே மாதம் வரை ஆகும். இம்முறையே காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையிலும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. மேலும், நடுவர்மன்ற இறுதி ஆணையில், பாசன காலம் என்பது “ஜூன் 1ஆம் தேதி முதல் அடுத்த ஆண்டு ஜனவரி 31ஆம் நாள் வரை” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காவிரி நதிநீர்த் தாவாவினைக் காவிரி நடுவர்மன்றம் முடிவுக்குக் கொண்டுவந்த நிலையில், அதன் 25–6–1991ஆம் நாளிட்ட இடைக்கால ஆணை காலாவதி ஆகிவிட்டது என்றும், நடுவர்மன்றத்தின் இறுதி ஆணை இன்னமும் நடைமுறைக்கு வராத நிலையில், இடர்ப்பாடு காலத்தில் நீரைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் கர்நாடகாவில் பாசனம் மேற்கொள்ளுதல் உள்ளடக்கிய அனைத்து அம்சங்களுக்கும் இந்த இறுதி ஆணை ஒரு தற்காலிக ஏற்பாடாகவே இருக்கும்; அதாவது, Protem Governing Regime–ஆக இருக்கும் எனவும் கர்நாடக அரசு கருத்து தெரிவித்து வருகிறது.

கர்நாடக அரசு இக்கருத்தைக் கூறிய போதிலும், நடுவர்மன்றத்தின் இடைக்கால ஆணைப்படியோ அல்லது இறுதி ஆணைப்படியோ தமிழ்நாட்டுக்கு நீர் வழங்குவதில்லை. கர்நாடக அரசு தன்னுடைய நீர்த்தேக்கங்களில் எல்லா நீர்வரத்தையும் தேக்கி உபரி நீரை மட்டுமே தமிழ்நாட்டிற்கு வழங்கி வருகிறது.

*கர்நாடக அரசு நேர்மையற்ற வகையில், பிப்ரவரி முதல் மே மாதம் வரையில் தனது கோடைக்காலப் பாசனத்திற்காக அதன் நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறது. கர்நாடகத்தின் கருத்துப்படி, தற்காலிக ஏற்பாடாக இருக்கும் காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையை பின்பற்றினால் கோடைகாலப் பயிர்ப் பாசனத்திற்கு நீர் பயன்படுத்தக் கூடாது. ஆனால், கடந்த 2007–2008 முதல் 2010–2011 ஆம் ஆண்டு வரையில், கர்நாடகாவின் 4 பெரிய நீர்த்தேக்கங்களிலிருந்து அதாவது ஹேரங்கி, ஹேமாவதி, கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி அணைகளிலிருந்து, கோடைகாலப் பாசனத்திற்காக பிப்ரவரி முதல் மே வரையில் 42 டி.ம்.சி. அடி முதல் 73 டி.எம்.சி. அடி வரை நீரினைப் பயன்படுத்தியுள்ளது.*

*இவ்வாறு கோடைக்காலப் பாசனத்திற்காக நீரைப் பயன்படுத்தாமல், அடுத்த பாசனப் பருவகால உபயோகத்திற்கு கர்நாடக அரசு நீரைத் தேக்கி வைத்திருக்க வேண்டும்.*

*இதைத் தவிர, காவிரி நடுவர்மன்றம் அதன் இறுதி ஆணையில் கர்நாடக அரசு அதன் நான்கு பெரிய நீர்த்தேக்கங்களிலிருந்தும் பாசன காலத்தில் நீரைப் பயன்படுத்திக்கொள்ள ஆண்டொன்றிற்கு மொத்தமாக ஒதுக்கீடு செய்துள்ள 103.240 டி.எம்.சி. அடிக்கு பதிலாக 203 டி.எம்.சி. அடி வரை நீரினைப் பயன்படுத்தியுள்ளது.*

*மேலும், தமிழகத்திற்கு குறுவை சாகுபடிக்குத் தண்ணீர் அவசியம் தேவையான ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் காவிரி நடுவர்மன்ற ஆணையின்படி தண்ணீரை வழங்குவதில்லை.*

*கர்நாடக அரசு கோடைக்காலப் பாசனத்திற்கு நீரைப் பயன்படுத்துவதால் பருவமழை தொடங்கியவுடன் எல்லா நீர்வரத்தையும் தன் நீர்த்தேக்கங்களில் தேக்கி அவை நிரம்பிய பின்னரே தமிழகத்திற்கு நீர் வழங்குகிறது. இதனால் மேட்டூர் அணைக்கு நியாயப்படி வந்து சேர வேண்டிய தண்ணீர் பெறப்படுவதில்லை.*

*எனவேதான், தமிழகத்தின் உரிமையைப் பாதுகாக்கவும், விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டும், கர்நாடக அரசு பிப்ரவரி முதல் மே மாதம் வரையில் கோடைக்காலப் பாசனத்திற்கு அதன் 4 நீர்தேக்கங்களிலிருந்து நீரைப் பயன்படுத்தக்*





*கூடாது என உத்தரவு வழங்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் ஓர் இடைக்கால மனுவினை 21–3–2012 அன்று எனது தலைமையிலான தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–45*

*காவிரி நீரில் தமிழகத்திற்கு உரிய பங்கைப் பெறுவதில், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவதில் நானும், எனது அரசும் உறுதியுடன் செயல்படுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசும்போது மேகதாதுவில் கர்நாடக அரசு புதிய அணை கட்டுவதாகக் குறிப்பிட்டார்கள். காவிரி நதியில், கிருஷ்ணராஜசாகர் மற்றும் மேட்டூர் அணைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் சிவசமுத்திரம், மேகதாது, ராசிமணல் மற்றும் ஒகேனக்கல் எனும் இடங்களில் புனல் மின் திட்டங்களைச் செயல்படுத்த தேசிய நீர் மின் கழகம் கருதியது. இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஓர் ஒப்பந்தத்தை சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு மத்திய மின் அமைச்சகம் 1999–இல் அனுப்பி வைத்தது.*

*தமிழ்நாடு அரசு, 2004 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில், முதல் நிலையாக, சிவசமுத்திரம் மற்றும் ஒகேனக்கல் நீர் மின் திட்டங்களுக்கான அனுமதியைப் பெற்ற பின்னர் ஒரே சமயத்தில் இதற்கான பணிகள் தொடங்கப்பட வேண்டும்; இரண்டாவது நிலையாக, இதே அடிப்படையில் மேகதாது மற்றும் ராசிமணல் நீர்மின் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்; இந்த 4 புனல் மின் திட்டங்களை தேசிய நீர் மின் கழகம் செயல்படுத்த வேண்டும் ஆகிய நிபந்தனைகளை விதித்து, மேற்படி ஒப்பந்தத்திற்கு இசைவு அளித்தது.*

*கர்நாடக அரசு ஜனவரி 2001–இல் இதற்கு இசைவு அளித்த போதிலும், பின்னர் சிவசமுத்திரம் மற்றும் மேகதாது புனல் மின் நிலையங்கள் அம்மாநில எல்லைக்குள் இருப்பதால் அவைகளை அவ்வரசே செயல்படுத்த உத்தேசித்துள்ளதாகத் தெரிவித்தது. தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் பன்மாநில நதியான காவிரி ஆற்றின் குறுக்கே எந்தவொரு திட்டத்தையும் கர்நாடக அரசு தன்னிச்சையாக மேற்கொள்ள இயலாது என்று அவ்வரசிற்குத் தமிழக அரசால் தெரிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 மார்ச் 30

மேலும், இதுகுறித்து தமிழ்நாடு அரசு நவம்பர் 2008–இல் உச்ச நீதிமன்றத்தில் ஓர் இடைக்கால மனுவினைத் தாக்கல் செய்துள்ளது. இதில் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் காவிரி நடுவர்மன்றத்தின் முன் நிலுவையிலுள்ள விளக்கம் கோரும் மனுக்கள் ஆகியன முடிவுக்கு வரும்வரையில், கர்நாடக அரசு சிவசமுத்திரம் மற்றும் மேகதாது புனல் மின் திட்டங்களைச் செயல்படுத்தக்கூடாது என்றும்; தேசிய நீர் மின் கழகமோ அல்லது மத்திய அரசின் மற்ற தகுந்த மின் உற்பத்தி நிறுவனமோ இந்த 4 புனல் மின் திட்டங்களையும் செயல்படுத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு கோரிக்கை வைத்துள்ளது. இவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் கர்நாடகத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் கர்நாடக அரசு தமிழ்நாட்டின் இசைவைப் பெறாமல் புதிய அணையைக் கட்ட இயலாது. அவ்வாறு கர்நாடக அரசு முயற்சிக்குமேயானால் தமிழகம் அதனை எந்தச் சூழ்நிலையிலும் அனுமதிக்காது என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2012 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

***திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் நான் பங்கேற்க அனுமதி அளித்த எங்கள் தலைவர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களை நன்றியோடு வணங்கி, என்னுடைய விவாதத்தினை இந்த அவையில் தொடங்குகின்றேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பித்து அதன் கடைசி பக்கத்திலே மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வருகின்ற மேலான கருத்துகளையும், ஆக்கப்பூர்வமான விமர்சனங்களையும், சமமாகவே எடுத்துக்கொள்வோம் என்று உறுதிபடத் தெரிவித்ததற்கிணங்க, தே.மு.தி.க. உறுப்பினர் என்ற முறையில் நிதிநிலை அறிக்கையில் உள்ள குறைகளையும், மக்களின் தேவைகளையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடலூர், விழுப்புரம் மாவட்டத்தில் ‘தானே புயல்’ நடத்திய கோரத் தாண்டவத்திற்கு இந்த அரசு அறிவித்த நிவாரண உதவிகள் போதுமானதாக இல்லை. பாதிக்கப்பட்ட மக்கள் இந்த

[திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்] [2012 மார்ச் 30

நிவாரணத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கையில் மீண்டு வருவார்களா என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது. அந்த மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்ட முந்திரி, பலா, தென்னை போன்ற நிலைப் பயிர்களை மீண்டும் விளைவிக்க, மீண்டும் எத்தனை வருடங்கள் ஆகும்? அதற்கு நிரந்தரத் தீர்வு என்ன என்பதை இந்த அரசு எண்ணிப் பார்த்து அதற்கு முழுமையான நிவாரணம் வழங்க வேண்டும்.

சென்ற 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் 18 ஆம் பக்கம் 29 ஆம் பத்தியில் தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் ஏற்கெனவே உள்ள 8 இலட்சம் விவசாயிகள் நடப்பாண்டில் இருமடங்காக உயர்த்தப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 8.8 இலட்சமாக இருந்த பயிர்க் காப்பீடு 8.48 இலட்சமாக உயர்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2011–2012 நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு பயிர்க் காப்பீட்டு விவசாயிகளின் எண்ணிக்கையை இரு மடங்காக உயர்த்தியிருந்தால் 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஓரளவாவது இழப்பீடு கிடைக்க வாய்ப்பிருந்திருக்கும். இந்நிலையில் 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் காப்பீட்டுத் திட்டத்தில் பயனாளிகளின் எண்ணிக்கை 10 இலட்சமாக உயர்த்தப்படும் என்று தெரிவித்திருப்பது கடந்த நிதிநிலை அறிக்கையின் மீதான நம்பகத் தன்மையினைக் குறைத்துவிட்டது.

2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் 23 ஆம் பக்கம் 30 ஆம் பத்தியில் ஆழ்கடலில் மீன் பிடித்தலை ஊக்குவிக்கவும், ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் வாங்க 25 சதவீதம் மானியத்தில் 5 இலட்சம் வரை கடன் வழங்க 25 கோடி ரூபாயும், ஆழ்கடலில் மீன் பதப்படுத்தும் அலகு ஏற்படுத்த தனியார் ஒத்துழைப்புடன் மீன்பிடிக் கப்பல் ஒன்று நடுக்கடலில் நிறுத்தி சோதனை முறையில் செயல்படுத்தப்படும் என்று சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. இந்த நிதிநிலை அறிக்கையிலும் 28 ஆம் பக்கம் 43 ஆம் பத்தியில் தற்போதுதான் துவக்கியுள்ளதாகவும், இத்திட்டம் ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தினமும் தங்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லாமல் அன்றாட வாழ்விற்காக உயிரைப் பணயம் வைத்து வாழ்க்கை நடத்தும் மீனவர்களுக்கு அடுத்த நிதியாண்டிற்குள்ளாவது இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



2012 மார்ச் 30] [திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்]

மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் கடலோர மாவட்டங்களான தஞ்சை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினரால் நடத்தப்படும் தொடர் துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதலிலிருந்து மீனவர்களைக் காப்பாற்ற தமிழக அரசின் கடலோரக் காவல்படைமூலமாக உடனடியாக ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

தமிழகத்திலே தொழில் துறையினை மேம்படுத்த தொலைநோக்குத் திட்டத்தோடு தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் "Fortune 500" நிறுவனங்கள் தனது உற்பத்தித் தளங்களை அமைக்க உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்தெந்த "Fortune" நிறுவனங்கள், நமது தமிழகத்தில் உற்பத்தித் தளங்களை அமைக்கின்றன என்ற விவரத்தை நிதிநிலை அறிக்கையில் தெரிவித்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். எனவே, அதுகுறித்த விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் நிதிநிலை அறிக்கையைச் சரியாகப் படித்திருந்தால் நன்றாகத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அதிலேயே எந்தெந்த கம்பெனிகள் வருகின்றன, இன்னும் 6 மாத காலத்திற்குள் ரூ.20,000 கோடி முதலீடு வரவிருக்கின்றது என்று தெளிவாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதில் பல கம்பெனிகள் உள்ளன. அதில் நோக்கியாவும், செயின் கோபெய்ன் கம்பெனியைத் தவிர மற்றவை "Fortune" கம்பெனிகள் அல்ல. அதற்காகத்தான் அதனை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

[2012 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் பல கம்பெனிகள் இருக்கின்றன. அதனை நீங்கள் படிக்கவில்லையா? கிட்டத்தட்ட 6 கம்பெனிகள்மூலம் இன்னும் 6 மாத காலத்தில் உற்பத்தித் துறையில் சுமார் 20,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு வரவிருக்கின்றது என்று தெளிவாக நிதிநிலை அறிக்கையில் உள்ளது. அதனை நீங்கள் நன்றாக ஒரு முறை படித்துப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள் என்பதுதான் எங்களது கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நிதிநிலை அறிக்கையினை நன்றாகப் படியுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றாகப் படித்துவிட்டுத்தான் நான் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளேன். வேறு ஒன்றும் இல்லை. “Fortune 500” கம்பெனிகள் வந்தால் வரவேற்கிறோம். “Fortune” கம்பெனி என்று ஒட்டுமொத்தமாக இருக்கிறது; அதனால்தான் கேட்டேன்.

தமிழகத்தில் கடுமையான மின்வெட்டினால் விவசாயிகளின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு) அந்தக் கம்பெனிகள் “Fortune 500” கம்பெனிகளா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நிறைய கம்பெனிகள் உள்ளன. அவை எல்லாம் “Fortune 500” கம்பெனிகள் அல்ல. நோக்கியாவும், செயின்ட் கோபெய்ன் மட்டும்தான் “Fortune 500” கம்பெனிகள். அதற்காகத்தான் அந்த விளக்கத்தினைக் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “Fortune 500” என்றால், உலக அளவில் இருக்கின்ற கம்பெனிகள் தமிழகத்தை நோக்கி வர இருக்கின்றவை என்பதுதான் அர்த்தம். அந்த அடிப்படையிலேதான் இன்னும் ஆறு மாத காலத்திற்குள் 20,000 கோடி ரூபாய்க்கு முதலீடுகள் வர இருக்கின்றன, அதுவும் இந்த ஓராண்டுக் காலத்திற்குள்ளேயே 20,000 கோடி ரூபாய் முதலீடு தமிழகத்திற்கு வருவது மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முயற்சி என்பதை நன்றாகத் தெளிவாக நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.



2012 மார்ச் 30]

முற்பகல் 11–55

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** ஒட்டுமொத்தமாக இருப்பதால்தான் நான் விளக்கம் கேட்டேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாகக் குறிப்பிடவில்லை. பிரித்துப் பிரித்து நாங்கள் சொல்லியிருக்கிறோம். அதாவது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சாதகமான அணுகுமுறையால், மிகப் பெரும் நிறுவனங்களாகக் கருதப்படும் “Fortune 500” நிறுவனங்கள் பல, தமது உற்பத்தித் தளங்களைத் தமிழகத்தில் அமைக்க உத்தேசித்துள்ளன. யமாஹா, எய்ச்சர், டான்பாஸ், என்பீல்டு, சுந்தரம்–கிளேட்டன், டி.ஐ. குழுமம், செயின்ட் கோபெய்ன், சன்மினா–எஸ்.சி.ஐ., பிலிப்ஸ் கார்பன் லிமிடெட், நோக்கியா போன்ற பல்வேறு நிறுவனங்களின் பெரும் முதலீடுகள் மாநில அரசின்—நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள்—ஒப்புதல் பெறுவதற்கான இறுதிக் கட்டத்தில் உள்ளன, நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். அடுத்தகட்டமாக, இத்திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் விரைவில் கையெழுத்திடப்பட உள்ளன. இவை தவிர, மேலும் 11 நிறுவனங்களின் முதலீட்டுத் திட்டங்களை முடிவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. தெளிவாகப் பிரித்துப் பிரித்துச் சொல்லியிருக்கிறோம். அடுத்த ஆறு மாதங்களில், உற்பத்தித் துறையில் சுமார் 20,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்க்க முடியும் என மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு நம்பிக்கை கொண்டுள்ளது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்

[திரு. தங்கம் தென்னரசு] [2012 மார்ச் 30

சொல்கின்றபோது "Fortune 500" கம்பெனிகள் பற்றிச் சொன்னார்கள். அதில் எனக்கு ஒரு விளக்கம் தேவை. சுந்தரம் கிளேட்டன் என்று சொன்னார். அது "Fortune 500" கம்பெனியா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட்டைப் படித்தால் மட்டும் போதாது. அதைப் புரிந்துகொள்ளவும் தெரியவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே என்ன சொல்லியிருக்கிறோம்? தமிழ்நாட்டில் " Fortune 500" நிறுவனங்கள்கூட முதலீட்டைக் கொண்டுவர உள்ளன; உத்தேசித்துள்ளன என்று சொல்லியுள்ளோம். அவ்வளவுதான் சொல்லியிருக்கிறோம். பின்வரும் கம்பெனிகள் எல்லாம் " Fortune 500" கம்பெனிகள் என்று இந்த பட்ஜெட்டில் சொல்லவில்லையே? (மேசையைத் தட்டும் ஒலி) என்ன படிக்கின்றீர்களோ, அதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் 35 ஆவது பக்கத்தில் 55 ஆவது பத்தியில் என்ன இருக்கிறது என்றால், "இந்த அரசின் சாதகமான அணுகுமுறையால், மிகப் பெரும் நிறுவனங்களாகக் கருதப்படும் "Fortune 500" நிறுவனங்கள் பல தமது உற்பத்தித் தளங்களைத் தமிழகத்தில் அமைக்க உத்தேசித்துள்ளன" என்று சொல்லி, அந்த sentence அத்தோடு முடிகிறது. நீங்கள் ஏன் அதை carry over பண்ணி, அடுத்த sentence–க்குக் கொண்டு போகிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு என்னென்ன நிறுவனங்கள் முதலீடு செய்யத் தயார் நிலையில் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டிருக்கிறோம். அதில் "யமாஹா, எய்ச்சர், டான்பாஸ், என்பீல்டு, சுந்தரம்–கிளேட்டன், டி.ஐ. குழுமம், செயின்ட் கோபெய்ன்" என்று பல நிறுவனங்களைக் குறிப்பிட்டிருக்கிறோம். இந்த நிறுவனங்கள் எல்லாம் "Fortune 500" நிறுவனங்கள் என்று எங்கே சொல்லப்பட்டிருக்கிறது? சொல்லவில்லை.



2012 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுக்குத் தெளிவாகப் புரியவேண்டும் என்பதற்காக பட்ஜெட்டில், அந்தப் பக்கத்தில், நான் குறிப்பிட்ட பத்தியில், "Fortune 500" நிறுவனங்கள் இங்கே முதலீடு மேற்கொள்ள, முதலீடு செய்ய உத்தேசித்துள்ளன என்று சொல்லி, அங்கே முற்றுப்புள்ளி வைத்திருக்கிறோம். அதைக்கூட இவர்கள் பார்க்கவில்லை போலும்! (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த sentence முடிவில் correct–ஆக full stop வரும். சரியாகப் பாருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

நண்பகல் 12–00

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடுமையான மின்வெட்டினால் விவசாயிகளின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாக உள்ளது. ஏடுகளிலும், புள்ளிவிவரங்களிலும் மின்வெட்டு நேரம் சொல்லப்படுகிறதே தவிர, எந்த நேரத்தில் மின்சாரம் வருகிறது; எப்போது போகிறது என்று பள்ளி, கல்லூரி இறுதித் தேர்வு எழுதும் மாணவ, மாணவிகளுக்கும், விவசாயிகளுக்கும், சிறு குறு தொழிற்சாலைகளுக்கும் தெரியவில்லை. மாறாக, வாரத்தில் ஒருநாள் மின் விடுமுறை, தினமும் 4 மணி நேரம் மின் வெட்டு என ஒரு வாரத்தில் 128 மணி நேரத்தில் 68 மணி நேரம் மின்சாரம் கிடைப்பதில்லை. இந்நிலையிலேதான், தமிழ்நாட்டில் ஏழு இலட்சம் பதிவு செய்யப்பட்ட சிறு, குறு தொழிற்சாலைகள் உள்ளதாக 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 36 ஆம் பக்கம் 57 ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏறத்தாழ, அந்தத் தொழிற்சாலைகளில், 50 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதாகத் தெரிவித்துள்ளீர்கள். ஆனால், உண்மை நிலை என்ன? பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் சிறு, குறு தொழிற்சாலைகளில் மின்வெட்டால் தொழில் செய்ய முடியவில்லை,

[திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்] [2012 மார்ச் 30

தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கமுடியவில்லை. எனவே, இயந்திரங்களைப் பழைய இரும்புச் சாமான் கடைக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில் முனைவராக மாற்ற 2012–2013 ஆம் ஆண்டின் புதிய திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. ஏற்கெனவே, 2011–2012 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் பக்கம் 36 பத்தி 57–இல் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு வசதியாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 15 சதவீதம் மானியத்தோடு 3 சதவீதம் வட்டித் தள்ளுபடியோடு கடன் வழங்கப்படும் எனவும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு, குறு தொழில்களுக்கு ஜெனரேட்டர் வைத்துக்கொள்ள இந்த அரசு 5 இலட்சம் ரூபாய் வரை மானியம் கொடுக்கிறது. இப்போது மின் நிலைமையைப் பற்றி, மின்வெட்டு பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். நேற்றுதான் இந்த அவையில் நீண்ட நேரம் விலாவாரியாக மின் நிலைமையைப் பற்றி இங்கே விளக்கம் அளிக்கப்பட்டது. நானும் விளக்கம் அளித்தேன், சம்பந்தப்பட்ட துறை அமைச்சரும் விளக்கம் அளித்தார். அப்போது மாண்புமிகு உறுப்பினரும் இந்த அவையில் இருந்தார் என்றுதான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கையில் மின்சார உற்பத்தியைப் பற்றி, புதிய திட்டங்களைப் பற்றி எந்த அறிவிப்பும் இல்லையென்று ஒரு குற்றச்சாட்டு இங்கே சொல்லப்பட்டதால், ஒரு விமர்சனம் சொல்லப்பட்டதால், நேற்று விதி 110–இன்கீழ் ஒரு நீண்ட அறிக்கையை இந்த அவையில் வாசித்தேன். அதில் என்னென்ன புதிய மின் உற்பத்தித் திட்டங்களை இந்த அரசு கொண்டு வரப்போகிறது; மேலும், நடைமுறையில் உள்ள திட்டங்களைத் துரிதமாகச் செயல்பாட்டுக்குக் கொண்டுவர என்னென்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து முடுக்கிவிட்டுள்ளது என்பதையெல்லாம் விளக்கமாகச் சொல்லி, வருகின்ற ஜூன் மாதம் முதல் படிப்படியாக மின்வெட்டு குறையும்



2012 மார்ச் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

என்பதையெல்லாம் விளக்கிச் சொன்ன பிறகு, மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே எழுதிவைத்த உரையை இங்கே வாசித்துக்கொண்டிருக்கிறார் என்று சொன்னால், இதைத்தான் சொல்லத் தோன்றுகிறது. உண்மையாகத் தூங்குகிறவர்களை எழுப்ப முடியும்; தூங்குவதைப் போல் நடிப்பவர்களை எப்படி எழுப்ப முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய பேப்பர் படித்திருந்தால், செய்தி பார்த்திருந்தால் தெரியும். அதைப் பார்த்துதான் சொன்னேன். ஊடகங்களில் வந்த செய்திதான் இது. ஆகையினால் எதிர்க்கட்சி என்ற முறையிலே தமிழக முதல்வருக்கும், அமைச்சர்களுக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்றுமதி வாய்ப்புள்ள சணல் மற்றும் கயிறு தொழில்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த மின் நிலைமையைப் பற்றி நான் இந்த அவையில் வாசித்த விதி 110–இன்கீழ் உள்ள அறிக்கையின் நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அதைப் படிக்கவில்லைபோல் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றே உங்களுக்கு அனுப்பி வைத்துவிட்டோம். படித்தீர்களா, இல்லையா?

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** படித்துவிட்டேன். இது வேறு சப்ஜெக்ட். ஏற்றுமதி வாய்ப்புள்ள சணல் மற்றும் கயிறு தொழில்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 மார்ச் 30

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியில் உள்ளவர்களுக்குக் குற்றச்சாட்டு சொல்வதே வழக்கம். ஆனால் அதற்கு பதில் சொல்லும்போது சபையில் இருப்பதில்லை. 'தானே' புயலைப்பற்றிச் சொன்னார்கள். அம்மா அவர்கள் அன்றைக்கு 'தானே' புயலைப்பற்றிப் பேசும்போதே சொன்னார்கள். "என்னுடைய பதிலுரை அன்றைக்கு நீங்கள் சபையில் இருங்கள், நான் இந்த மக்களே வியக்கின்ற அளவிற்கு 'தானே' புயலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிவிப்பு வெளியிடுவேன்" என்று சொன்னார்கள். ஆனால், அம்மா அவர்கள் அன்றைக்கு அறிவிப்பு வெளியிடுகின்றபோது, அந்த அறிவிப்பு தமிழக மக்களை மகிழ்விக்கும் என்று தெரிந்தே சட்டமன்றத்திற்கு வராமல் இன்றைக்கு இந்த அவையில் வந்து குற்றச்சாட்டுகளைச் சொல்லுகின்றார்கள். பத்திரிக்கையைப் படித்தேன் என்று சொல்கின்றார்கள். அன்றைக்கு அம்மா அவர்கள் அறிவித்த அறிவிப்பு, 'தானே' புயலால் பாதிக்கப்பட்டவுடனே மத்திய அரசாங்கத்தினுடைய உதவி இல்லாமல் 850 கோடி ரூபாய் உடனடியாகக் கொடுத்தார்கள். மின்சாரப் பாதிப்புக்கு 300 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. முந்திரி, பலா பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எந்த உதவியும் கொடுக்கப்படவில்லையென்று சொன்னார்கள். அந்த அறிவிப்பிலே கிட்டத்தட்ட 900 கோடி ரூபாய் அளவுக்கு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். பாதிக்கப்பட்ட நிலங்களைச் சீர்செய்து மீண்டும் பயிரிட்டு, தொடர்ச்சியாக அந்த விவசாயிகளுக்கான அத்தனை உதவிகளையும் அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே பாதிக்கப்பட்ட விவசாயிகளின் ஒரு இலட்சம் வீடுகளுக்கு 1,000 கோடி ரூபாய் நிதியொதுக்கி, கிட்டத்தட்ட 'தானே' புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 3,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதையெல்லாம் மறந்துவிட்டு இன்றைக்குக் குற்றச்சாட்டை சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.



2012 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தானே' புயல் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களைப் பெரிய அளவுக்குப் பாதிப்புக்குள்ளாக்கியது. அதனால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, பொது மக்களுக்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவான முறையில் நிவாரணங்களை வழங்கினார்கள். இதுவரை எந்த அரசும் இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்பட்ட இழப்பீடுகளுக்கு இந்த அளவுக்கு நிவாரணம் வழங்கவில்லை என்று பொதுமக்கள் பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு நிவாரணம் வழங்குவது மட்டும்தான் கடந்த காலத்திலே இருந்த அரசினுடைய செயல்பாடாக இருந்து வந்திருக்கிறது. இதனால் கடந்த காலங்களில் சில குறைபாடுகள் இருந்திருக்கலாம். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், இப்போது ஒவ்வொரு விஷயத்தையும் மிகவும் கவனமாக, ஆழமாகப் பார்த்து, ஆழ்ந்து சிந்தித்து, தாயுள்ளத்தோடு, கருணையோடு பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகள்—அந்தப் பயிர்கள் சேதமடைந்த நிலையில், அந்தப் பயிர்களை நடவு செய்து, வீரிய ஒட்டு விதைகளைத் தந்து, நாற்றுகளைத் தந்து, அதனுடைய பலன் 6 வருடங்கள் கழித்து வருகின்ற அளவுக்கு, அதனுடைய நிவாரணம் தொடரும் என்று அறிவித்து, அதற்குரிய நிதியும் வழங்கியிருக்கின்றார்கள். இதிலே, இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால், ஏற்கெனவே 'தானே' புயலால் பாதிக்கப்பட்டு, முழுவதுமாகச் சேதமடைந்த முந்திரி பயிர்களுடைய மோட்டு வேர் இருக்குமல்லவா, அதைப் பறித்து எடுக்கக்கூட மாண்புமிகு அம்மா அவர்கள் நிவாரணம் வழங்கியிருக்கின்றார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி என்ற முறையிலே நாங்கள் குற்றம் சொல்லவில்லை. நீங்கள் கொடுத்தது போதவில்லை என்று சொல்கிறோம். நீங்கள் போட்டது சாப்பாடு. கடுமையான வயிற்றுப் பசி, இன்னும் கொஞ்சம் போடுங்கள் என்று கேட்கிறார்கள். அதைக்கூட சுட்டிக்காட்டக் கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல குறைபாடுகள் இருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே சுட்டிக்காட்டினார். நான் அதனால்தான் இந்தப் பதிலை சொல்கின்றேன். பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குவதுதான் இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்பட்ட இழப்பீடுகளாக இதற்கு முன்னால் இருந்த அரசுகள் வழங்கியதாக இருக்கும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், பாதிக்கப்பட்ட முந்திரிப் பயிர்களுக்கு நாற்று நடுவதற்கு, அவைகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு, உரமிடுவதற்கு 100 சதவிதம் மானியம், 6 வருடங்களுக்கு அதைப் பராமரிக்கக்கூடிய செலவு உட்பட நிவாரணத் தொகை வழங்கியிருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'தானே' புயலில் அம்மாவினுடைய அரசு எடுத்த நடவடிக்கை போதுமானதாக இல்லை என்று சொல்கிறார். அவருடைய தலைவர் 'தானே' புயல் பாதிக்கப்பட்ட இடத்தைப் பார்க்க சென்றபோது அங்கே 6 பேருக்கு வேட்டியும், 6 பேருக்கு சேலையும், 6 பேருக்கு உதையும் கொடுத்துவிட்டு வந்தார். அடியும் கொடுத்துவிட்டு வந்தார். (குறுக்கீடுகள்) 'தானே' புயலைப் பற்றிச் சொல்வதற்கு உங்களுக்கு தார்மீக ரீதியில் தகுதியே இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரகுமார், உட்காருங்கள். Please sit down. தயவுசெய்து அமருங்கள். உங்களுடைய உறுப்பினர் பேசுகிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கு அவர் பதில் சொல்லட்டும். வேறு கட்சியிலே யாராவது உங்கள் கட்சித் தலைவர்பற்றி சொல்லியிருந்தால் நீங்கள் சொல்லலாம். உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசினார். (குறுக்கீடுகள்) அவர்களைச் சொல்ல விடுங்கள். (குறுக்கீடுகள்) வேறு யாராவது பேசினால் பரவாயில்லை. பேசுகிறவர் திரு அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர். திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், பேசுங்கள். மாண்புமிகு அமைச்சர் சொன்னதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சிக்குதான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசட்டும். (குறுக்கீடுகள்)





**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தானே' புயலுக்கு முதன்முதலாக ஓடிச்சென்று தன் சொந்தச் செலவிலே உதவி செய்த தலைவன் எங்களுடைய தலைவன். 6 பேருக்கு அல்ல, 600 பேருக்குக் கொடுத்தார்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** உதையும் சேர்த்து கொடுத்துவிட்டு வந்தார் உங்கள் தலைவர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள் பேசட்டும்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றச்சாட்டாக எதையும் சொல்லவில்லை. குறிப்பிட்டுச் சொன்னதற்கு இவ்வாறு குறுக்கிட்டால் என்ன செய்வது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** நான் தற்போது பேசும் சப்ஜெக்ட் என்னவென்றால் ஏற்றுமதி வாய்ப்புள்ள சணல் மற்றும் கயிறு தொழில்களுக்கு 100 கோடி ரூபாய் முதலீட்டில் கடன் உதவியும், தொழில்நுட்ப உதவிகளும் செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. இதுகூட ஏன் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால், சேலம் மாவட்டத்தில் உள்ள இரும்பாலையைச் சுற்றி சுமார் 10,000 பேர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை இத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. 2012–2013 ஆம் ஆண்டில் 25 சதவிகித மானியத்தோடு 3 சதவிகித வட்டி தள்ளுபடியோடு 1,000 தொழில் முனைவோர்களை உருவாக்குவதாகவும், அதில் 50 சதவிகிதம் பெண்கள் பயன்பெறவும், 100 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்த சணல் மற்றும் கயிறு தொழில்களுக்குக் கடன் உதவியும், தொழில்நுட்ப உதவியும் கிடைக்குமா என்பதைத் தமிழக அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்கிறேன். நீங்கள் சொல்லியபடி செய்கிறீர்களா என்றுதான் கேட்கிறேன்.

பிற்பகல் 12–10

தமிழகத்தில் மொத்தமுள்ள சுமார் 560 பொறியியல் கல்லூரிகளில் இருந்து வருடந்தோறும் சுமார் மூன்றரை இலட்சம் பொறியாளர்கள் படித்து வெளிவருகின்றனர். அதுமட்டுமல்லாமல், பாலிடெக்னிக், ஐ.டி.ஐ. போன்ற தொழிற் கல்வி நிறுவனங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்கள் வருகின்றனர். ஆகவே, இந்த 1,000 பேர் என்பது கடலில் கரைத்த பெருங்காயம்போல் ஆகிவிடும். தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு ஆண்டுதோறும் இரண்டு செட் சீருடையும், ஒரு செட் காலணியும் இலவசமாக 4.6 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் சென்ற ஆண்டு முழுமையாகச் செயல்படுத்தப்படாத இத்திட்டம், இந்த ஆண்டு 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு இந்த ஆண்டு உடனடியாகச் செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாட்டின் முதுகெலும்பாக இருக்கின்ற விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் வேடிக்கையாகவும், வேதனையாகவும் உள்ளது. எந்த ஒரு பொருள் தயாரிக்கப்பட்டாலும் அது உணவுப் பொருளாக மாறினாலும், விஞ்ஞானப் பொருளாக மாறினாலும், மருத்துவப் பொருளாக மாறினாலும் உற்பத்தி செய்பவர்களே அதற்குரிய அதிகபட்ச விலையை நிர்ணயித்துவிடுவார்கள். ஆனால் அனைவரும் வாழ உணவை உற்பத்தி செய்து கொடுக்கும் உழவர்கள் அவர்களுடைய உற்பத்திக்கு விலை நிர்ணயம், அவர்களால் செய்யமுடியவில்லை.

நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூபாய் 1,800 எனவும், கரும்பு டன்னுக்கு ரூ.2,500 எனவும் விலை நிர்ணயம் செய்ய இந்த பட்ஜெட்டில் குறிப்பிடப்படவில்லை. சென்ற ஆண்டு 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 42 ஆம் பக்கம் 67 ஆம் பத்தியில் நம் மாநிலத்தின் தற்போதைய மின் உற்பத்தித் திறன்— ஏற்கெனவே தமிழக முதலமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி— இதெல்லாம் இருக்கிறது. இவ்வளவு இலக்கு இருந்தும் இந்த 2012–2013 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் பக்கம் 44–இல் பத்தி 70–இல் நமது தேவையில் சொந்த உற்பத்தித் திறன் வெறும் 30 சதவிகிதம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நிதிநிலை அறிக்கையில் 42, 43 ஆம் பக்கங்களில் 68 ஆம் பத்தியில்





2011–2012 ஆம் ஆண்டின் புதிய திட்டத்தால் மின் உற்பத்தித் திறன் 3,250 மெகாவாட் எனவும், அதுமட்டுமல்லாமல் அடுத்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் மூலமாக 5,100 மெகாவாட் மற்றும் ரூ.22,800 கோடி முதலீட்டில் 3,800 மெகாவாட் மின்சார உற்பத்தி கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு மின் உற்பத்தி செய்யும் இலக்கு இருந்தும் இன்றைய தமிழகத்தின் நிலை இருண்ட தமிழகம். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, காற்றாலை மின்சக்தி, கடலோர காற்று எரிசக்தி எனப் பல்வேறு அறிவிப்புகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பசுமை வீடுகள் திட்டத்தில் கட்டப்படும் 60,000 வீடுகளுக்கும், ஆண்டுக்கு 20,000 தெரு விளக்குகள், சூரிய சக்தியில் எரியும் எனவும், 5 ஆண்டுகளில் 1,000 கிராமங்களில் ஒரு இலட்சம் தெரு விளக்குகள் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் நடைமுறையில் சிறு மற்றும் குறு தொழிற்சாலைகள் தினமும் அமல்படுத்தப்படும் நான்கு மணி நேர மின்வெட்டை ஒரு நாள் முழுவதுமாக அமல்படுத்திவிட்டு மீதி நாட்களில் தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டுமென சிறு, குறு தொழில் சங்கத்தினர் அரசுக்குக் கோரிக்கை வைத்தார்கள். ஆனால், தமிழக அரசு ஒரு நாள் மின் விடுமுறையை அறிவித்து தினமும் நான்கு மணி நேரம் மின்வெட்டையும், கூடுதல் பரிசாக அறிவித்தது. சிறு மற்றும் குறு தொழிற்சாலைகளுக்கு முதுகுவலி போய், திருகுவலி வந்த கதை ஆகிவிட்டது. அதுமட்டுமல்லாமல், விடுமுறை நாட்களில் 10 சதவிகிதத்திற்குமேல் எந்தத் தொழில் நிறுவனமாவது மின்சாரத்தைப் பயன்படுத்தினால் அவர்களுக்கு முதல் முறை அபராதமாக மூன்று மடங்கு மின் கட்டணமும், இரண்டாவது முறை அபராதமாக நான்கு மடங்கு மற்றும் 48 மணி நேர மின் துண்டிப்பும், மூன்றாவது முறை அபராதமாக ஐந்து மடங்கும், 48 மணி நேர மின் துண்டிப்பும் என நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இதற்குப் பலமுறை தெளிவாக வகுப்பிலே class எடுப்பதுபோல விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகும் உறுப்பினர் திரும்பத் திரும்ப இதையே பேசிக் கொண்டிருக்கிறார். இவை எல்லாம்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2012 மார்ச் 30

தற்காலிகமான ஏற்பாடு. கடந்த தி.மு.க. ஆட்சியினால் தமிழகத்தில் ஏற்பட்டுவிட்ட இந்த மின்வெட்டு தற்காலிகமான ஒன்றுதான். வருகிற ஜூன் மாதம் முதல் அவையெல்லாம் படிப்படியாக நிவர்த்தி செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். பலமுறை சொல்லியிருக்கிறோம். இது ஒரு தற்காலிகமான ஏற்பாடுதான். மின்வெட்டுப் பிரச்சினையால், இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் மிக விரைவிலே நீக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கும்போது, சிறு, குறு விவசாயிகளுக்கு இந்தத் தண்டனை தேவையா என்பதுதான் என்னுடைய கேள்வி.

உயர் அழுத்த மின்சாரத்தை உபயோகிக்கும் தொழில் நிறுவனங்கள் தனியாரிடமிருந்து மின்சாரத்தை வாங்கி உபயோகிக்கக் கூடாது என அறிவித்ததால், மேற்படி தொழில் நிறுவனத்தினர் சென்னை உயர் நீதிமன்றத்திலே இடைக்காலத் தடை உத்தரவு பெற்று தொழிற்சாலை நடத்தி வருகின்றார்கள். அந்த உயர் நீதிமன்ற வழக்கில்கூட பதில் தாக்கல் செய்ய மின் வாரியம் தொடர்ந்து கால அவகாசம் கேட்டுக்கொண்டே இருக்கின்றது. மின்சாரமும் கொடுக்கப்படவில்லை; அவர்களாகவே மின்சாரத்திற்கு ஏற்பாடு செய்தால் அதற்கும் தடை விதிக்க வேண்டிய அவசியம் என்ன? தமிழகத்தை இந்தியாவிலேயே சிறந்த தொழில் துறை மாநிலமாக எப்படி மாற்ற முடியும்? ஆகவே, மேற்கண்ட பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு கண்டு தொழிற்சாலைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** 2011–2012 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் பக்கம் 54, பத்தி 7–இல் அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு



2012 மார்ச் 30] [திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்]

உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் 9.12 இலட்சம் பேருக்கு மடிக் கணினி வழங்குவதாகவும், இத்திட்டத்திற்காக 912 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. இந்த நிதிநிலை அறிக்கையிலே 1,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், சேலம் மாவட்டத்தில் உள்ள +2 மாணவர்களில் மட்டும் சுமார் 25,000 பேரில் 74 பேருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதை ஏன் குறிப்பிட்டு சொல்கிறேன் என்று சொன்னால், இந்த ஆண்டு இன்னும் சில நாட்களில், +2 மற்றும் பட்டப் படிப்புத் தேர்வு எழுதி இறுதிப் படிப்பை முடித்துச் செல்லும் மாணவ, மாணவியருக்கு மடிக் கணினி கிடைக்குமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள். (குறுக்கீடு) நிறைய பேசி இருக்கின்றீர்கள். Please sit down.

***திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தலைவர்களின் ஒப்பற்ற தலைவராக இருக்கின்ற அம்மா அவர்களின் தலைமையில் செயல்படும் அரசின் 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள். சீக்கிரம் நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மொத்தத்தில் 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை திடீரென்று விண்ணிலே தோன்றி மறைகின்ற அழகிய வர்ணங்களைக் கொண்ட வானவில் போல் அல்லாமல், தமிழக மக்களுக்காக அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களும் தொய்வின்றிச் செயல்படுத்தப்பட்டு,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தலைவர்களின் ஒப்பற்ற தலைவராக

*[திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி]* [2012 மார்ச் 30

இருக்கின்ற அம்மா அவர்களின் தலைமையில் செயல்படும் அரசின் *2012—2013* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், நான் பேசுவதற்கான வாய்ப்பை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், அரசியலில் தன்னுடைய தனித் தன்மையால், சிறப்புவாய்ந்த முதலமைச்சராகத் தமிழகத்தை வழிநடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அம்மா அவர்கள், தன்னை நம்பியவர்களை எப்போதும் கைவிட்டதில்லை. அம்மா அவர்களை நம்பாமல் கெட்டவர்கள் உண்டு. அம்மா அவர்களின் சிந்தனை, செயல் அனைத்தும் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கென்றுதான் இருக்கும்.

இலங்கைத் தமிழர்களைக் காக்க, உலகம் போற்றும் உத்தமத் தலைவியாகவும், உலகத்திலுள்ள தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் விளங்கி வருகின்றார்கள். அம்மா அவர்கள் பல மொழிகள் கற்ற பண்பாளர். இந்திய தேசமே உற்று நோக்கக்கூடிய அறிவாற்றல் மிக்கவராக இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கி வருகிறார்கள்.

கடந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், தீய சக்தியைத் தூக்கியெறிந்து, மாண்புமிகு அம்மா அவர்களை மூன்றாவது முறையாகப் பெருவாரியான இடங்களில் வெற்றிபெற வைத்து, அம்மா அவர்களை ஆட்சியில் அமர்த்தினார்கள் தமிழக மக்கள். அதேபோல், தற்போது சங்கரன்கோவில் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் போட்டியிட்ட அனைவரையும் டெபாசிட் தொகையை இழக்கச் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்குத் தமிழக மக்கள் அம்மா அவர்களின் தலைமையின்மீது நம்பிக்கை கொண்டு, மிகப் பெரிய வெற்றியை அளித்துள்ளார்கள்.

*2012—2013* ஆம் ஆண்டிற்கான இந்த நிதிநிலை அறிக்கையில், ஏராளமான திட்டங்களும், கருத்துக் கருவூலங்களும், தமிழகத்தை முன்னெடுத்துச் செல்லும் வழிவகைகளும் நிறைந்து காணப்படுகின்றன. இருந்தாலும், காலத்தின் அருமை கருதி சிலவற்றை மட்டும் எடுத்துக் கூற அனுமதி வேண்டுகிறேன்.

தேசிய பேரிடர்கள் நிகழும்போது, ஆற்றலோடு செயல்படும் தேசிய பேரிடர் மீட்புப் படை போன்று செயல்பட மாநில



2012 மார்ச் 30] *[திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி]*

பேரிடர் மீட்புப் படை ஏற்படுத்துவது, அதாவது தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமி மற்றும் அண்மையில் ஏற்பட்ட “தானே” புயல் போன்ற பேரிடர்களில் நிலைமையை சமாளிக்க மாநில பேரிடர் மீட்புப் படை அமைப்பது மிகச் சிறப்பான நடவடிக்கையாகும்.

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் *2023* என்பது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனை ஓட்டத்தில் உதித்த ஒரு தொலைநோக்குத் திட்டமாகும். அடுத்த *10* ஆண்டுகளில் மாநிலத்தில், தனிநபர் வருமானத்தை *6* மடங்காக உயர்த்தவும், தமிழகத்தை வறுமையற்ற மாநிலமாக மாற்றவும், இன்னமும் பல வகைகளிலும், தமிழகத்தை இந்தியாவில் உள்ள மாநிலங்களில் முன்னோடி மாநிலமாக மாற்றிடச் செய்யும் அம்மாவின் இலட்சியத் திட்டம்தான் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் *2023*. தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களைத் தலைவராகக் கொண்டு, தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தினை அமைத்திட சட்டம் இயற்றுதல், தமிழகத்தின் விரைவான வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

பிற்பகல் *12—20*

இந்திய தொழிலகக் கூட்டமைப்பின் தேசிய கவுன்சில் கூட்டத்தினை கடந்த ஜூலை மாதம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தொடங்கி வைத்து, “தமிழகத்தில் வறுமையும், வேலைவாய்ப்பின்மையும் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே என்னுடைய கனவு; இந்தியாவின் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றுவதற்கான அனைத்து இலக்குகளையும் நிர்ணயித்துச் செயல்பட்டு வருகிறோம்; எனவே, வறுமை ஒழிப்பு என்ற இந்த இலட்சியத்தை இந்த அரசு அடையும்” என்று மாண்புமிகு அம்மா அவர்கள் நம்பிக்கை தெரிவித்து உரையாற்றினார்கள். அம்மா அவர்களின் அந்த நம்பிக்கையை நிறைவேற்றத்தான் இந்த நிதிநிலை அறிக்கையில் திட்டங்கள் தீட்டப்பட்டு, தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்க செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

*2012—2013* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, தமிழ்நாட்டை ஒரு வளம் செழிக்கும் பூமியாக, ஏன் சொர்க்க பூமியாகவே மாற்றுவதற்கான, மலர்வதற்கான முனைப்புகள், முயற்சிகள், செயல்பாடுகள் நிறைந்த ஒளிவிடும் பெட்டகமாக விளங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது. உலக வங்கி உதவி பெற்ற புதுவாழ்வுத்

[திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி] [2012 மார்ச் 30

திட்டம், 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும். மக்களின் நலவாழ்வு தொடர, புது வாழ்வுத் திட்டம் மேலும் 10 மாவட்டங்களுக்கு விரிவாக்கப்படுவதன்மூலம் பல்லாயிரம் குடும்பங்கள் பயனடைய வழிபிறக்கும். புதுவாழ்வு போன்ற கிராமப்புற வறுமை ஒழிப்புத் திட்டங்களில் முக்கிய அம்சங்களின் அடிப்படையில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் என்ற புதிய திட்டம் தொடங்கவிருப்பதன்மூலம் நகர்ப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்கு வலுவூட்டும்.

அம்மாவின் அரசு, சமூக விரோதிகளை ஒடுக்கிட உறுதி கொண்டு செயல்பட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தமிழகத்தில் அமைதியையும், சட்டம்–ஒழுங்கையும் நிலைநிறுத்திடச் செய்துள்ளன. தேர்தல் வாக்குறுதியாக அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுவரும் நில அபகரிப்பு மீட்புத் திட்டத்தின்மூலம் இழந்த சொத்துக்கள் நில அபகரிப்பாளரிடமிருந்து மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருவது, நிலத்தை இழந்து அவதிப்பட்ட, பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகப் பெரிய மகிழ்ச்சியை அளித்துள்ளது. அவர்களது வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் முதுகெலும்பான வேளாண் துறை மேம்படவும், விவசாயப் பெருமக்கள் வளம் பெருகிடவும், இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வழிகோலிடும் வகையில் பலதரப்பட்ட செயல்பாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு மேற்கொண்டுள்ளது என்பது நல்லோர் நெஞ்சங்களைக் குளிர்விப்பதாகும். விவசாயத் துறைக்கு எப்போதும் இல்லாத அளவிற்கு 3,804.96 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இந்த அரசு விவசாயப் பெருமக்கள்மீது எந்த அளவிற்கு நம்பிக்கை கொண்டுள்ளது என்பது புலனாகிறது. இதுமட்டுமல்லாமல், பயிர்க் கடனாக இதுவரை இல்லாத அளவாக 4,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, முறையாகக் கடனைத் திருப்பிச் செலுத்தும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வட்டியில்லாத கடனாக இந்த அரசு வழங்குகிறது. இதுமட்டுமல்லாது, நீர்வள மேலாண்மைப் பணிகளுக்கு என இதுவரை இல்லாத ஓர் ஒதுக்கீடாக 3,624.73 கோடி ரூபாய்க்கு வகை செய்யப்பட்டிருப்பதும், விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றும் உன்னதமான திட்டமாகும்.



2012 மார்ச் 30] [திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி]

விவசாயத் தொழிலும், கைத்தறி நெசவுத் தொழிலும் தமிழகத்தின் பாரம்பரியம் மிக்க தொழில்களாகும். விவசாயத் தொழிலுக்கு அடுத்து, நெசவுத் தொழிலின்மூலம் இலட்சக்கணக்கானவர்கள் வேலைவாய்ப்பு பெற்று வருகிறார்கள். நெசவாளர்களின் நலன் காக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் பல்வேறு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது நெசவாளர்கள் நலன் காக்க மாண்புமிகு அம்மா அவர்கள் எந்த அளவுக்கு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்று இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். நானும் சில உதாரணங்களை இங்கே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகிறார்கள் என்பதை நாடு நன்கு அறியும்.

பிற்பகல் 12–25

துறைதோறும் பல புதிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்காக குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்டகாலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் துறை வாரியான ஆய்வுகளை மேற்கொண்டு அந்தந்த துறைகளில் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் மற்றும் செயல்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகளைப் பற்றியும் தங்களது ஆய்வுகளில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். அந்தவகையில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை பற்றி சென்ற ஆண்டு, அதாவது 2011 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வின்போது, மக்கள் கைத்தறித் துணிகளை விரும்பி வாங்கும் வகையில் புதுப்புது வடிவமைப்புகள் அறிமுகம் செய்யப்பட வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதன்படி கோ–ஆப்டெக்ஸ் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 மார்ச் 30

அதேபோன்று இந்த ஆண்டும் 11–3–2012 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனையை அதிகரிக்கும் வகையில், 'இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்' என்ற புதிய விற்பனை உத்தியை மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்த ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் 17–3–2012 முதல் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டம் 2–4–2012 வரை அமலில் இருக்கும். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி இந்தப் புதிய விற்பனை உத்தி செயல்படுத்தப்பட்ட காரணத்தால் 2011–2012 ஆம் நிதியாண்டில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் இதுவரை அதன் 77 ஆண்டுக் கால வரலாற்றிலேயே மிகப்பெரும் சாதனையாக 207 கோடி ரூபாய் அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) சில்லறை விற்பனை செய்து ஒரு புதிய வரலாறு படைத்துள்ளது. மார்ச் மாதம் 17 ஆம் தேதி முதல் கோ–ஆப்டெக்ஸ்–இல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தப் புதிய உத்தியின் பயனாக மார்ச் 28 ஆம் தேதி முடிய கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் 25 கோடி ரூபாய் அளவுக்கு சில்லறை விற்பனை செய்துள்ளது. இதே காலக்கட்டத்தில் கடந்த 2010–2011 ஆம் ஆண்டு சில்லறை விற்பனையின் அளவு வெறும் 7 கோடி ரூபாய்தான் இருந்தது. மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனைகள், உத்தரவுகளின்படி கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது விற்பனையை அதிகரித்து, செம்மையாகச் செயல்பட்டு வருவதால், இந்த ஆண்டு முதல் முறையாக மொத்த விற்பனை 1,000 கோடி ரூபாயைத் தாண்டி புதிய வரலாறு படைக்க உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது பேசுகின்ற நேரத்தில் கேட்கலாம் என்று இருந்தேன். கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனையை அதிகரிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களைக் கேட்கலாம் என்று எண்ணியிருந்தேன். அதற்கு முன்பே, கேட்பதற்கு முன்பே செய்யக்கூடிய ஓர் அரசு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துக்காட்டுகின்ற வகையில் அம்மா அவர்களின் அரசு இந்த அறிவிப்பினை அறிவித்திருக்கிறது. அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2012 மார்ச் 30] [திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி]

தமிழ்நாட்டில் 15 ஆண்டுகளில் திறன் மிக்க பணியாளர்கள் 2 கோடி பேர் தேவைப்படுவர் எனக் கணக்கெடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தமிழகத்திலுள்ள படித்த இளைஞர்களுக்குத் திறன் உருவாக்கும் பயிற்சியும், திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அவசியம் என்பதை உணர்ந்து, அரசு பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்க வரவு–செலவுத் திட்டத்தில் 75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. தனியார்த் துறைகளில் வேலைவாய்ப்பை உருவாக்கித் தர 32 மாவட்டங்களில் 37 மாவட்ட அளவிலான உதவி மையங்களை ஏற்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது, வேலைவாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருக்கும் இளைஞர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியை உண்டாக்கும் நடவடிக்கை எனலாம்.

பிற்பகல் 12–30

நில ஆவணங்களைப் பராமரிக்கும் முறையை ஒழுங்குபடுத்தவும், சேவைகளைத் துரிதமாக வழங்கவும், மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு பல நடவடிக்கைகளை எடுத்த காரணத்தினால், கடந்த 6 மாதங்களில் 14 இலட்சம் பட்டா மாறுதல் கோரும் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கின்றது.

அதுபோல், நடப்பாண்டில் ஒரு இலட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என்ற அறிவிப்பு, ஏழை மக்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், சென்ற நிதிநிலை அறிக்கையில் பஸ் பயனாளிகள் வசதிக்காக 3,000 புதிய பேருந்துகள் வாங்க ஆணை வழங்கினார்கள். போக்குவரத்துக் கழகங்களுக்குக் கடன் சுமை இருந்தாலும், பொதுமக்களின் நலனுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு மேலும் 3,000 புதிய பேருந்துகள் வாங்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, எந்த அளவிற்குத் தமிழக மக்கள்மீது நம்பிக்கை வைத்துள்ளது என்பது இதிலிருந்து புலனாகிறது.

*[திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி]* [2012 மார்ச் 30

*நமது மாநிலத்தின் மின் தேவையைக் கருத்தில்கொண்டு, 4 ஆண்டுகளாகத் தொடங்கப்படாத நிலையிலிருந்த 1,600 மெகா வாட் உடன்குடி உயரழுத்த மின் நிலையத் திட்டம் மாநிலத் திட்டமாக 8,000 கோடி ரூபாயில் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்து, அதற்காக நிதிநிலை அறிக்கையில் 2012—2013 ஆம் ஆண்டு 1,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதற்கு, தமிழக மக்கள் அனைவரும் அம்மா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டவர்களாவர்.*

*மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த விரிவாக்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்படி காப்பீட்டுத் தொகை ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 4 ஆண்டுகளுக்கு 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், கூடுதல் நோய்கள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், நோய்களைக் கண்டுபிடிப்பதற்கான செலவும் இதில் சேர்க்கப்படுவதால், ஏழையெளிய மக்கள் பயன்பெறும் புரட்சிகரமான திட்டம்தான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் விரிவாக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டம் என்றால் அது மிகையாகாது.*

*அறிந்தவர், தெரிந்தவர், வல்லோர், நல்லோர் என எல்லோரும் தெளிவுறப் பாராட்டும் நிதிநிலை அறிக்கையினை* ‘The Hindu’ *ஆங்கில நாளிதழ், தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை, தமிழகத்தின் வளர்ச்சியை மையமாகக் கொண்டது என்று சுட்டிக்காட்டியுள்ளது. அதுபோல் இன்று* ‘Times of India’ *நாளிதழ், தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கின்றது என்று பாராட்டியுள்ளது. இவ்வாறு ஆங்கில நாளேடுகள் நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகின்றன. இந்தியாவுக்கான பிரிட்டன் தூதரக அதிகாரி திரு. ஜேம்ஸ் பீவன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களைச் சந்தித்து, அனைத்துத் துறைகளிலும் தமிழகம் முதன்மை மாநிலமாக உயர் வளர்ச்சியை எட்டவும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்குப் பாராட்டு தெரிவித்தும், தமிழகத்தின் வளர்ச்சியில் இணைந்து பணியாற்ற விருப்பமும் தெரிவித்துள்ளார்கள். மேலும், இந்தியாவுக்கான ஆஸ்திரேலியா நாட்டுத் தூதர் திரு. பீட்டர் வர்கீஸ் அவர்களும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் மிக முக்கிய பங்கு வகிப்பதாகவும், மேம்பாட்டு வளர்ச்சியில் மற்ற*



2012 மார்ச் 30] *[திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி]*

*மாநிலங்களைவிடத் தமிழகம் முன்னோக்கி இருப்பதாகவும், பாராட்டு தெரிவித்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அண்மையில் வெளியிட்ட தொலைநோக்குத் திட்டத்திற்கும் அவர்கள் வாழ்த்தையும், பாராட்டையும் தெரிவித்துள்ளார்கள். திறன் மேம்பாட்டுப் பயிற்சி, சூரிய எரிசக்தி, ஆழ்கடல் மீன்பிடிப்பு மற்றும் குறைந்த செலவிலான வீடுகள் கட்டும் திட்டம் மற்றும் கலாச்சார பாரம்பரிய திட்டங்களில் ஆஸ்திரேலியா பங்கேற்க இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.*

*அமெரிக்காவின் அந்நாட்டு அதிபருக்கு அடுத்தபடியாக உயர் அதிகாரமிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் திருமதி ஹிலாரி ரோதம் கிளிண்டன் அவர்கள் கடந்த ஜூலைத் திங்கள் அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். பின்னர், அவர், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களைப் பெருமைமிக்க மகத்தான தலைவர் என்றும், அம்மா அவர்கள் அரசின் சார்பில் செய்துவரும் பல்வேறு சாதனைகளையும் பாராட்டியதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களை, அமெரிக்க நாட்டுக்கு வருகை தருமாறும் அழைப்பு விடுத்திருக்கிறார்கள். இதுபோன்ற நிகழ்வுகள் அம்மா அவர்களின் திறமைக்கும், புத்திக் கூர்மைக்கும் சான்றாக அமைந்துள்ளது மட்டுமல்ல; மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சிக்குச் சாட்சியங்களுமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12—35*

*தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் மீண்டும் தமிழகம் பொற்கால வரலாற்றை எழுதிக் கொண்டிருக்கின்றது. தொடர்ந்து நிகழும் சாதனைகள், செயல்பாடுகள், தொலைநோக்குப் பார்வை ஆகியவை, தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க அம்மா அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள், வெற்றிகளைக் குவிக்கும் என்பதில் ஐயமில்லை என்று கூறிக்கொள்கின்றேன்.*

*மேலும், மகளிர், குழந்தைகளின் நலனுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகள், நல்ல திட்டங்களையெல்லாம் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவற்றை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

[திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி] [2012 மார்ச் 30

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், முதன்முதலாகத் 'தொட்டில் குழந்தை' திட்டத்தினைக் கொண்டுவந்தார்கள். இப்போது அந்தத் 'தொட்டில் குழந்தை' திட்டத்தினால் தமிழ்நாட்டில் பல்வேறு பெண் குழந்தைகளின் உயிர்கள் காப்பாற்றப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பெண் சிசுக் கொலை என்னும் கொடிய செயல் இராஜாராம் மோகன்ராய் போன்ற சீர்திருத்தவாதிகளின் செயல்களால் இந்தியாவில் தடை செய்யப்பட்டு, கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது. எனினும், இதுபோன்ற செயல்கள் முழுமையாகத் தடுக்கப்படாமல், சமீப காலம்வரையில் தமிழ்நாட்டில் சில பகுதிகளில் நடந்துகொண்டுதான் இருந்தன. சீர்திருத்தவாதிகளின் சிந்தனைகளுக்கும் மேற்சென்று சிசுக் கொலை என்பதனை முற்றிலும் ஒழிப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டமே 'தொட்டில் குழந்தை' திட்டம். எனவேதான், மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்த 'தொட்டில் குழந்தை' திட்டம் உலகளவில் பாராட்டப்பட்டது. பெண் குழந்தைகளின்மேல் உள்ள அன்பின் மிகுதியாலும், அக்கறையாலும் பெண் குழந்தைகளின் வளர்ச்சியில் அக்கறை கொண்டும், மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்த சிறப்பான திட்டம் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம். இந்தத் திட்டத்திற்கென இந்த நிதியாண்டில், ரூபாய் 105 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அனைவரும் பாராட்டக்கூடியது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் நான் வைத்துக்கொள்கின்றேன். என்னுடைய தொகுதியில், சங்ககிரி பகுதியில் இதுவரை எந்த அரசுக் கலைக் கல்லூரியும் இல்லை. கருணை உள்ளத்தோடு ஒரு அரசுக் கலைக் கல்லூரியை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் அம்மா அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், சுதந்திரப் போராட்டத்திற்காகப் போராடிய 'தீரன் சின்னமலை' அவர்களைத் தூக்கிலிட்ட இடம் என்னுடைய சங்ககிரி தொகுதியாகும். அந்த தூக்கிலிட்ட இடத்தில் நினைவுச் சின்னம் அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.



2012 மார்ச் 30] [திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி]

மேலும், எழுதப் படிக்கத் தெரிந்த அனைவருக்கும் வாகனம் ஓட்டத் தெரிந்தால், அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்க ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சங்ககிரி பகுதியில், எள், பருத்தி போன்ற பயிர்கள் அதிகமாக விளைவதால், விற்பனைக்காக, பக்கத்தில் உள்ள திருச்செங்கோட்டுக்குச் செல்ல வேண்டியுள்ளது. விவசாய மக்களுக்குப் பயன்படும் வகையில், ஒருங்கிணைந்த கூட்டுறவு வேளாண் விற்பனைக் கூடம் ஒன்றை அங்கே அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

என்னுடைய தொகுதியில், சங்ககிரியில் அரசு மருத்துவமனை உள்ளது. (மணியடிக்கப்பெற்றது) அந்த மருத்துவமனையில், குளிரூட்டப்பட்ட உடல் பகுப்பாய்வுக் கூடம் உட்பட நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். இதுகுறித்து, ஏற்கெனவே நான் அம்மா அவர்களிடம் மனு கொடுத்திருக்கின்றேன்.

சங்ககிரி பகுதியில் ஆட்டோ நகர் ஒன்றும், சங்ககிரியில் கனரக ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி ஒன்றும் அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–40

மேலும், என்னுடைய தொகுதிக்குட்பட்ட சங்ககிரி–திருச்செங்கோட்டுக்கு இடையே இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று பொது மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் கொண்டு வரப்பட்ட 2012–2013 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

[2012 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

***திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன் வாழ்வும், வளமும் மங்கா தமிழுக்கு; அங்கங்கள் வெட்டி அணு அணுவாக்கினும் சங்கத் தமிழ் காக்கத் தயங்கா தலைவர், 78 ஆண்டு பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக ஓய்வறியாமல் உழைத்துக் கொண்டிருக்கும் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை தோட்டத் தொழிலாளியின் மகனாகிய என்னை, சட்டப் பேரவை உறுப்பினராக்கி, நிதிநிலை அறிக்கையில் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்புத் தந்த மாண்புமிகு கெண்டக்கி கர்னல் தளபதி அவர்களுக்கும், எனக்கு வழிகாட்டியாக இருக்கும். . . (குறுக்கீடு) இது அமெரிக்கா கொடுத்த விருது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவிலேயே உள்ள பெரும்பாலான மக்கள் இந்த கெண்டக்கி கர்னலைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** இது அமெரிக்காவின் உயரிய விருது. எனக்கு வழிகாட்டியாக இருக்கும் எங்கள் மாவட்டக் கழகச் செயலாளரும், குன்னூர் சட்டப் பேரவை உறுப்பினர் அண்ணன் ராமச்சந்திரன் அவர்களையும், என்னை ஈன்றெடுத்த தாய் தந்தையரையும் வணங்குகிறேன். சாதி, இனம், மதம், மொழி கடந்து தமிழ், மலையாளம், கன்னடம் என்று மக்கள், கலைஞர் கண்ட இயற்கை சமத்துவபுரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற, இந்திய ஒருமைப்பாட்டிற்கு இலக்கணமாகத் திகழ்கின்ற, என்னைத் தங்கள் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த என் தொகுதி மக்களுக்கு நன்றி கூறிக்கொண்டு என் கன்னிப் பேச்சை இந்த அவையில் பதிவு செய்கின்றேன்.



2012 மார்ச் 30] *[திரு. மு. திராவிடமணி]*

முன்னதாக என் தொகுதிப் பிரச்சினையை வைக்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் தற்பொழுது பட்டா வழங்குவதற்குத் தடையாணை இருக்கிறது. அதை இரத்து செய்ய இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தனியார் வனப் பாதுகாப்புச் சட்டம், 1949–இன்படியும், 1991 ஆம் ஆண்டும் அதன் பின் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்ட Notifications–ஐ இரத்து செய்து, 46,000 ஏக்கரில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தையும் 21,000 குடும்பங்களையும் காக்க இந்த அரசை வேண்டிக்கொள்கின்றேன்.

1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜமீன் ஒழிப்புச் சட்டம் மற்றும் ரயத்துவாரிச் சட்டப் பிரிவு 17–இன்கீழ் தற்பொழுது 80,088 ஏக்கர் செட்டில்மென்ட் செய்யும்பொழுது அனைத்து இனங்களையும் ஒரே நேரத்தில் வகைப்படுத்தி செட்டில்மென்ட் செய்ய வேண்டும்.

வனமாக அறிவிக்கப்பட்ட 17,000 ஏக்கர் பூமியை இனம் காண குழு அமைக்க வேண்டும். உபரியாக இருக்கின்ற பூமியிலிருந்து தலா இரண்டு ஏக்கர் வீதம் ஏழை தோட்டத் தொழிலாளர்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாகப் பணிபுரிபவர்கள் பெரும்பாலும் தாயகம் திரும்பிய தமிழர்களாகவும், சமவெளியிலிருந்து வந்த தமிழர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் பணி ஓய்வு பெற்றபின் வீடற்ற அநாதைகளாகத் தெருவில் இருக்கிறார்கள். இவர்களின் இந்நிலையைப் போக்க இலவசமாக பூமியும், மனையும் வழங்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளிக்கு தினக் கூலியாக 250 ரூபாய் நிர்ணயம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கைக்கு வருவதற்கு முன் நான் பதிவு செய்யும் கருத்து இந்த அவைக்கு ஒன்று இருக்கிறது.

> "ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
> தேர்ந்துசெய் வஃதே முறை"

என்று குறள். . .

[2012 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ‘சேர்ந்துசெய் வஃதே’ என்று அல்ல, குறளைத் தவறாகச் சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

“ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை” (குறுக்கீடு)

‘சேர்ந்துசெய் வஃதே’ என்பது அல்ல ‘தேர்ந்துசெய் வஃதே’ என்று வரவேண்டும்.

**திரு. மு. திராவிடமணி:** ‘தேர்ந்துசெய் வஃதே’ என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களாலே எனக்கே குழப்பமாகிவிட்டது. பேசுங்கள்.

**திரு. மு. திராவிடமணி:** இந்த அவையிலே மட்டுமல்லாமல், ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பொறிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் இந்த நாட்டில் நியாயம் கிடைக்கும். அதைப் பார்த்த பிறகாவது நியாயம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *12–45*

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல, ‘மாற்றான் தோட்டத்தில் பூத்திருக்கும் மல்லிகைக்கும் மணம் உண்டு’ இரசிக்கத்தான் செய்வோம், அதேபோல் எதிர்வரிசையில் இருக்கின்ற எங்கள் கருத்துகளாலும் இந்த அரசின் செயல்பாடு சிறக்கும், இதை ஏற்கும் பக்குவம் இந்த அவைக்கு உண்டு என்று கருதுகின்றேன்.

பேரறிஞர் அண்ணாவோடு, டாக்டர் கலைஞர் அவர்கள் இணைந்து அரும்பாடுபட்டு, பட்டிதொட்டியெல்லாம் சென்று, உண்ணாமல், உறங்காமல் தன் சொல்லாற்றலாலும், எழுத்தாற்றலாலும், நாடகம், திரைப்படம், வசனம் இவைகளின் வாயிலாக மூட நம்பிக்கையிலும், வறுமையிலும், ஆரியப் பிடியில் சிக்கி அல்லலுற்றத் தமிழனைத் தட்டி எழுப்பி, முற்போக்குச் சிந்தனையைத் தூண்டி, பிற்போக்கு எண்ணத்தை மாற்றி, விளைந்த அறுவடையைப் பெற்று, இன்று அவரை வசைபாடும் மனிதர்களைக் கண்டால், ‘நெஞ்சு பொறுக்கவில்லையே, இந்த



2012 மார்ச் 30] *[திரு. மு. திராவிடமணி]*

நிலைகெட்ட மனிதரை நெஞ்சில் நினைக்கையிலே’ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில் இருந்து இறங்கியபோது *2011–2012* ஆம் ஆண்டின் மொத்த வருவாய் வரவு *79,431* கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டது. அந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் வருவாய் வரவுகள் மட்டும் எந்தவிதமான புது வரிகளையும் விதிக்காமல் *40,700* கோடி ரூபாய் என்றிருந்தது. எனவே, வரிகள் புதிதாக இருக்கவில்லையே தவிர, வருவாய் உயராமல் இல்லை. வரிகளை உயர்த்தித்தான் வருவாயைப் பெருக்கவேண்டும் என்றில்லை. இருக்கின்ற வரியைச் சரியாக வசூல் செய்தாலே இதற்குச் சாத்தியம் உண்டு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், “கடந்த *2011–2012* ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டின்படி, தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாய் *59,932.31* கோடியும், *2012–2013* ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு மதிப்பீட்டின்படி இது ரூபாய் *71,460.55* கோடியாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது *19.24* சதவிகித வளர்ச்சியாகும்” எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், கழக ஆட்சியில் நிலை என்ன? *2010–2011* ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த வரி வருவாய் *49,125* கோடி. *2011–2012* ஆம் ஆண்டு வரவு–செலவு மதிப்பீட்டின்படி ரூபாய் *53,783* கோடி என்று மதிப்பிடப்பட்டது. திருத்திய மதிப்பீட்டின்படி இது ரூபாய் *59,932* கோடியாக உயர்ந்தது. இது *21.99* சதவிகிதம் வளர்ச்சியாகும். எனவே, கழக ஆட்சியிலும், வரி வருவாய் அதிகமாகவே வந்துள்ளது என்று அறியலாம்.

*2012–2013* ஆம் ஆண்டிற்கான மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் மாநில அரசின் சொந்த வரி வருவாய் விகிதம் *10.35* ஆக இருக்கும் என்று நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. *5–2–2011* அன்று பேராசிரியர் அவர்கள் தாக்கல் செய்த *2011–2012* ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் *2010–2011* ஆம் ஆண்டிற்கான மொத்த உற்பத்தி மதிப்பில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் விகிதம் *9.47* சதவீதமாக இருக்கும் என்று படித்தபோதிலும்,

[திரு. மு. திராவிடமணி] [2012 மார்ச் 30

இன்றைய நிதியமைச்சர் அவர்கள் 4–8–2011 அன்று படித்த திருத்திய நிதிநிலை அறிக்கையில், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் விகிதம் 9.21 சதவீதமாக இருக்கும் என்று முன் கணக்குகளின்படி தெரிவித்தார்கள். அதுபோலவே, இந்த நிதிநிலை அறிக்கையிலே மொத்த உற்பத்தி மதிப்பில் மாநில அரசின் சொந்த வரி வருவாய் விகிதம் 10.35 சதவீதமாக இருக்குமென்று இப்போது படித்தாலும், முன் கணக்குகளையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது இந்த விகிதாச்சாரம் குறையலாம்.

2012–2013–இல் வணிக வரியின்மூலம் பெறப்படும் வரவுகள் ரூபாய் 46,678.10 கோடியாக இருக்கும். இது கடந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டைவிட 17.4 சதவீதம் வளர்ச்சி கொண்டதாக இருக்கும் என்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடந்த 2011–2012–இல் திருத்திய வரவு–செலவுத் திட்டத்தின்படி வணிக வரி வரவு ரூபாய் 37,196 கோடி. அது 2010–2011 ஆம் ஆண்டு முன் கணக்குகளைவிட 20.5 சதவிகிதம் வளர்ச்சி கொண்டது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அவையில் படித்தார்கள். இதிலிருந்து கழக ஆட்சியில் வணிக வரி முறையாக வசூலிக்கப்பட்டது என்பதை அறியலாம்.

பிற்பகல் 12–50

2012–2013 ஆம் ஆண்டின் வரி வருவாய் உபரி ரூ.2,376.07 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டாலும், 2012–2013 ஆம் ஆண்டுக்கான நிதி பற்றாக்குறை ரூ.19,832.13 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டது. இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.87 சதவிகிதமாகும். தி.மு.க. ஆட்சியில் இதைவிடக் குறைவான நிதிப் பற்றாக்குறை குறிப்பிடப்பட்டது. பற்றாக்குறை பட்ஜெட் போட்டதனாலே நிதி நிலைமை மோசம் என்று சொல்லலாமா? அதை இந்த அரசு ஏற்குமா? இதே காரணத்திற்காக தி.மு.க. அரசின் மிக மோசமான நிதி நிருவாகம் என்று குற்றஞ்சாட்ட முடியுமா? தி.மு.க.–வைக் குறை கூற வேண்டுமென்ற நோக்கத்தில், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பத்தி 138–இல் மோசமான நிதிநிலை அறிக்கை, நிருவாகப் பொறுப்பற்ற செலவினம், மாநிலத்தின் நிதி நிலையில் பெரும் சீரழிவு, கடும் சுமை என்றெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நிதிநிலை நிர்வாகத்தில் எந்தச் சீர்கேடும் நடைபெறவில்லை என்பதற்கு ஆதாரம் தற்போது உங்களிடத்திலே உள்ளது. தற்போது யார் நிதித் துறைச் செயலாளராக இருக்கிறாரோ, அவர்தான் அப்போதும் நிதி நிருவாகத்தைக் கவனித்தார். அப்படி இருக்கையில், அவரை வைத்து நிதி நிருவாகத்தைக் கவனிக்க முடிந்ததிலிருந்து எப்படி தி.மு.க. தலைவர்மீது பழி போட்டு மக்கள் கவனத்தைத் திருப்ப முடியும் என்று இந்த அரசு கருதுகிறது? ஆகவே அப்படி உண்மையிலேயே தவறுகள் நடந்திருந்தால், அந்த நிதித் துறைச் செயலாளரை மாற்றியிருப்பீர்கள். அவரை என்ன செய்திருப்பீர்கள் என்றால், ஒரு ஸ்டோர் கீப்பராகத்தான் போட்டிருப்பீர்கள். அந்த அளவிற்கு ** நிலையில் இருக்கின்றது. ஆகவே, இது மட்டுமல்லாமல் (குறுக்கீடு)



2012 மார்ச் 30] [திரு. மு. திராவிடமணி]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்களின் பேச்சு கன்னிப் பேச்சு என்பதனால், யாரும் குறுக்கிடக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், ஜனநாயகப் பெருந்தன்மையோடு அமைச்சர்களுக்கு ஒரு அறிவுரை கொடுத்தார்கள். அதையே ஒரு advantage–ஆக எடுத்துக்கொண்டு நீங்கள் பேசுவது முறையல்ல. கன்னிப் பேச்சு என்பதால் எதையும் பேசிவிடக் கூடாது. எனவே, நீங்கள் சொன்ன ** என்ற சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. மு. திராவிடமணி:** அது மட்டுமல்லாமல் பத்தி 37–இல் 13–ஆவது நிதிக் குழு நிர்ணயித்த நிதிக் குறியீட்டுக்கு உட்பட்டே நமது வரவு–செலவுத் திட்ட நிதிநிலைக் குறியீடுகள் உள்ளன என்பதை நான் பெருமிதத்துடன் தெரிவிக்க விரும்புகிறேன். இதில் வரையறுக்கப்பட்டபடியே மாநில அரசு வருவாய் உபரி தொடர்வதுடன் நிதிப் பற்றாக்குறை, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவிகிதம் அளவிற்குக் குறைவாகவே இருக்கும். எனினும், இது 13–ஆவது நிதிக் குழு அனுமதித்துள்ள அளவான மாநில உற்பத்தி மதிப்பில், கடனின் விகிதாச்சார அளவு 24.8 சதவிகிதம் என்பதைவிட, குறைவாக 19.6 சதவிகிதம் அளவில் இருக்கும் என்று குறிப்பிடப்பட்டதிலிருந்து தி.மு.க. ஆட்சியில் நிதிக் குறியீட்டில் எந்தத் தவறும் இழைக்கப்படவில்லை என்று அறியலாம்.

மாநில திட்டக் குழு வெளியிட்ட அறிக்கையில் 2009–2010 ஆம் ஆண்டுகளில் ஏழ்மை நிலை 29.4 சதவிகிதத்திலிருந்து 17.1 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. இதிலிருந்து திராவிட முன்னேற்றக் கழக அரசு வறுமை ஒழிப்பிற்கு எந்த அளவிற்கு நிதியைச் செலவிட்டுள்ளது என்பதை அறியலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

*2006 ஆம் ஆண்டு ரூ.50,000 கோடிக்கு மேல் கடனை வாங்கியும், தற்போது ரூ.12,873.81 கோடிக்குக் கடனை வாங்குவதாகவும், மேலும் ரூ.18,383.47 கோடி வாங்கப் போவதாகக் கூறிவிட்டு, திராவிட முன்னேற்றக் கழக அரசு கடனை வாங்கி சுமத்திவிட்டது, அதைக் கட்டுகிறேன் என்று கூறுவதில் எந்த நியாயமும் இல்லை.*

*அதேபோல, பத்தி 139–க்கு மாறாக பத்தி 95–இல் சொந்தக் காலில் நிற்கின்றோம் என்று கூறப்பட்டிருக்கிறது.* ** land grabbing *(குறுக்கீடுகள்)* ** *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் இப்போது கடைசியாக கூறிய வாக்கியங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.*

**திரு. மு. திராவிடமணி:** *சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது என்பதற்கு ஒரே ஒரு ஆதாரத்தை மட்டும் முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்கிறேன்.* ** *ஆகவே, சட்டத்தின் ஆட்சி நடைபெறவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, இருங்கள். நீங்கள் காலையிலே என்னுடைய அறைக்கு வந்தீர்கள். (குறுக்கீடு) நீங்கள் அது சம்பந்தமான ஆதாரத்தை என்னிடம் கொடுத்திருக்க வேண்டும். (குறுக்கீடு)*

****மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குற்றச்சாட்டு சொல்வதற்கு முன்னால், அதற்குரிய ஆதாரத்தைத் தந்து, அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை உறுதி செய்த பின்பு பேசியிருக்க வேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, நீங்கள் காலையிலே என்னுடைய அறைக்கு வந்து என்னைப் பார்த்தீர்கள் அல்லவா? (குறுக்கீடு) திரு. மு. திராவிடமணி, நீங்கள் காலையிலே வந்து என்னைப் பார்த்தீர்கள். 'இதுபோன்று நான் பேசப் போகிறேன்' என்று சொல்லி ஆதாரம்*

---

*******மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது***.**





*எதையும் நீங்கள் என்னிடம் கொடுக்கவில்லை. ஆகவே, ஆதாரத்தைக் கொடுக்காததால், நீங்கள் பேசிய அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தாழ்மையான வேண்டுகோள். கன்னிப் பேச்சு என்பதற்காக, பேசுகின்ற கருத்துகளிலேயெல்லாம் விஷம் கலந்து பேசினால், அதைக் கன்னிப் பேச்சாக ஏற்றுக் கொள்ளமுடியாது. அங்கே வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது; விசாரணை நடைபெற்றிருக்கிறது. அதனடிப்படையிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் அதற்குள் போக வேண்டாம். நான் அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கி விட்டேன். *(குறுக்கீடு)* உறுப்பினர் நீங்கள் உரையை முடியுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனது கன்னிப் பேச்சை ஆற்றிக் கொண்டிருக்கிறார் என்பதற்காக, இடையில் பல அமைச்சர்கள் பதில் சொல்ல எழுந்தபோதுகூட, 'வேண்டாம்; விட்டு விடுங்கள்' என்று அவர்களை அமரச் சொன்னேன். ஆனால், பல விஷமத்தனமான கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழ்நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடைபெறவில்லை என்றும், நில அபகரிப்பு வழக்குகள் போட்டு தி.மு.க. தலைவர்களையும், முன்னாள் அமைச்சர்களையும் இந்த அரசு பழிவாங்கிக் கொண்டிருக்கிறது என்றும் இங்கே கருத்து தெரிவித்தார். இதைப்போல ஒரு உண்மைக்குப் புறம்பான கருத்து வேறு எதுவும் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டத்தின் ஆட்சி, 5 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த நில அபகரிப்பு வழக்குகளையெல்லாம் அரசு போடவில்லை. பொது மக்கள், காவல் துறையினரை அணுகி கொடுக்கின்ற புகார்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதில் அரசியல் தலையீடு என்பது அடியோடு இல்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[2012 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள். (குறுக்கீடு) பேசிவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னிப் பேச்சாக இருந்தாலும், நான் விஷமத்தனமாக எதையும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. மு. திராவிடமணி:** இதுவரையில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.

*__திரு. கே.பி. நாகராஜன்:__ வணங்குதலுக்கும், போற்றுதலுக்கும் உரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் அன்னை, நடமாடும் மனித தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி என் கனிவான வணக்கத்தையும், என் நெஞ்சார்ந்த நன்றியையும் அவர்களின் மலர்ப் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். மூன்றாவது முறையாகத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று, மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியை மீண்டும் மலரச் செய்துள்ள எங்களின் இதய தெய்வம், என் குடும்ப விளக்கு, நான் வணங்கும் அன்னை, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! நான் வசிப்பதும், சுவாசிப்பதும், விசுவாசிப்பதும் தாங்களே என்று சொல்லி, என்னுடைய நன்றியை மீண்டும் ஒருமுறை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

நான் கழகத்திற்கு வந்ததிலிருந்து 10 ஆண்டுக் காலம் கிளைக் கழகச் செயலாளராகவும், 5 ஆண்டுக் காலம் ஒன்றிய மாணவர் அணிச் செயலாளராகவும், 5 ஆண்டுக் காலம் ஒன்றிய அம்மா பேரவையினுடைய இணைச் செயலாளராகவும் இருந்த என்னை, இப்போது ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராக என்னை அறிவித்து என்னைப் பணியாற்ற வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு



2012 மார்ச் 30] *[திரு. கே.பி. நாகராஜன்]*

மீண்டும் ஒருமுறை கோடானு கோடி நன்றியினை அவரது மலர்ப் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மைலம் சட்டப் பேரவைத் தொகுதியிலே என்னை வேட்பாளராக அறிவித்து, அங்கு 21 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்திலே என்னை வெற்றி பெறச் செய்து, இந்த 14–ஆவது சட்டமன்றப் பேரவையிலே முதன்முறையாக நான் உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் ஒரு முறை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு என் வணக்கத்தையும், என் நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

> “இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
> அதனை அவன்கண் விடல்”

என்னும் திருவள்ளுவரின் வாக்கிற்கேற்ப, மக்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் அறுதிப் பெரும்பான்மையோடு இந்நல்லாட்சி மலர்ந்திடவும், மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிடவும் கோடானு கோடி மக்கள் அளித்திட்ட ஓட்டுக்களே சாட்சியாகும்.

பிற்பகல் 1–00

கடந்த ஆட்சியில் மக்கள் பட்ட துயரங்கள் ஒவ்வொன்றாகக் களையப்பட்டு, தமிழகத்தில் கடைக்கோடியில் வாழும் மக்கள் வரை மகிழ்ச்சியான வாழ்க்கையைத் தொடர்ந்து பெற்றிட வழிவகை செய்திருக்கிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இயற்கை வண்ணங்கள் ஏழு, ஸ்வரங்கள் ஏழு, அதிசயங்கள் ஏழு. மாண்புமிகு அம்மாவின் உள்ளத்தில் உடனடியாகத் தோன்றி உதித்திட்ட எண்ணங்களும் ஏழு.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் ஏழை எளிய மக்களின் எண்ணங்களை ஆழ்ந்து புரிந்து கொண்டமையால், முதலிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழு ஆணைகளைக் கையெழுத்துப் போட்டுப் பிறப்பித்தார்கள்.

ஏழை எளிய மக்களுக்கு விலையில்லா அரிசி, ஏழை எளிய மக்களுக்கு பசுமை வீடுகள், (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும்

தங்குதடையின்றி ஒளிமயமான வீடுகள், தாய்மார்கள் கஷ்டப்படாமல் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, தெளிவான சிந்தனையோடு, தொலைநோக்குப் பார்வையோடு, மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி போன்ற வீட்டு உபயோகப் பொருட்களை அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்குவதற்கு ஆணை பிறப்பித்தார்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இதற்கு முன்பு, தமிழகத்தை ஆண்ட மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, கருணாநிதியின் ஆட்சியிலே இலவசங்கள் என்று நாட்டைச் சுரண்டி, கொள்ளையடித்துச் சென்றார்கள். அவர்கள், தொலைக்காட்சிப் பெட்டி தருகிறோம் என்று சொல்லி, மக்களை ஏமாற்றி, வாக்குகளைப் பெற்று, மக்கள் எவருக்கும் வழங்காமல் யார் யாருக்கோ கொடுத்தார்கள். அவர்களுடைய கட்சிக்காரர்கள் அனுபவிக்க வேண்டுமென்பதற்காகவே கொடுக்கப்பட்டதுதான் அந்த இலவசத் தொலைக்காட்சிப் பெட்டி. திடீரென்று வண்டியிலே ஏற்றி வருவார்கள்; தொலைக்காட்சிப் பெட்டியைக் கொடுத்துவிட்டு, திடீரென்று இருக்கும் இடம் தெரியாமல் சென்றுவிடுவார்கள் அன்றைய சட்டமன்ற உறுப்பினர்களும், அன்றைய ஒன்றியப் பெருந்தலைவர்களாக இருந்தவர்களும். ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அறிவித்த மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி போன்ற மூன்று பொருட்களும், எந்தச் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், எந்த ஒன்றியப் பெருந்தலைவர்களாக இருந்தாலும், மேடை போட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கொள்கைகளைத் தெளிவாகச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் அனைவருக்கும், ஒரு குடும்பத்திற்கு விட்டுப்போயிருந்தாலும், சம்பந்தட்ட வட்டாட்சியர் அவர்களிடம் சொல்லி அதை வாங்கிக் கொடுக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அனைவரும் தெளிவாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதுபோன்று, முந்தைய காலங்களில் ஒரு ஊரின், நாட்டின் வளர்ச்சியை வளமான கால்நடைகளைக் கொண்டுதான், அந்நாடு, செழிப்பாக, மக்கள் பசிப் பிணி இன்றி, தொழில்கள் மற்றும் இதர செல்வங்களுடன் வளமாக உள்ளது எனக்





கணக்கிடப்பட்டது. இது வலிமையான பாரதத்திற்கு, செழிப்பான தமிழ்நாடு விரைவில் மெருகூட்டும் என்பதை இந்நேரத்தில் பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு; சம்சாரி வாழ்விற்கு ஒரு பசு மாடு’ என்பதை உணர்ந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) பொன்னையே தந்தாலும் அதற்கு ஈடாகாது என்பதை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு பசு மாட்டினை அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு புகழ் பெற்ற அரசாக தமிழகத்திலே நடந்து கொண்டிருக்கிறது.

மேலும், சட்டம்–ஒழுங்கு சீர்படுத்தப்பட்டுள்ளது. விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து இரண்டாம் பசுமைப் புரட்சியும், விவசாயிகளின் தனி நபர் வருமானம் உயரும் வகையிலும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

> “கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
> மாடல்ல மற்றறை யவை”

என்பது திருவள்ளுவர் வாக்கு.

தேர்தல் வாக்குறுதியில் கூறப்பட்டவாறு, பள்ளி மாணவ மாணவியருக்கு நான்கு சீருடைகள், ஆறாம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு அரைக்கால் சட்டைக்குப் பதில் முழுக்கால் சட்டையும், பெண்களுக்கு சல்வார் கமீசும், ஒன்றாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை படிக்கும் அனைத்துப் பள்ளி குழந்தைகளுக்கும் விலையில்லாக் காலணிகள், ஒன்றாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியருக்குப் புத்தகப் பைகளும், ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியருக்கு ஜியாமெட்ரிக் பெட்டிகளும், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியருக்கு வண்ணப் பென்சில்களும், ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியருக்கு உலக வரைபடப் புத்தகமும், ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியருக்கு விலையில்லா நோட்டுப் புத்தகங்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்குகிறார்கள்.

*[திரு. கே.பி. நாகராஜன்]* [2012 மார்ச் 30

இதனால் அத்தனை மாணவ மாணவிகளும் புகழ் பெற்று விளங்குகின்றனர். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒரு பள்ளியில் நான் கேட்டேன், யார் இந்த நோட்டுப் புத்தகங்களையும், விலையில்லாத மிதிவண்டியையும் கொடுத்தது என்று. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பெயரைத் தான் சொல்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினராக இருக்கட்டும், மாண்புமிகு அமைச்சராகட்டும், யார் கொடுத்தாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரை, சின்ன குழந்தைகள்கூட அம்மாவின் பெயரைச் சொல்கிறார்கள்.

*பிற்பகல் 1–05*

எனது மைலம் சட்டமன்றத் தொகுதியில் விலையில்லாத பசுமை வீடுகளைக் கொடுத்தேன். எனது கிராமத்திலும் கொடுத்து விட்டு, காலையில் சென்று யார் இந்த வீட்டைக் கொடுத்தது என்று கேட்டபோது, அந்த குழந்தைக்கு கிட்டதட்ட 4 முதல் 6 வயதுதான் இருக்கும், அவனிடம் இந்த வீட்டை யார் கொடுத்தார்கள் என்று கேட்டேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெயரைத்தான் அந்தச் சிறிய நான்கு வயது குழந்தை சொல்கிறான்.*(மேசையைத் தட்டும் ஒலி)* அவனுக்கே அந்த அளவுக்குப் புரியக்கூடிய ஆட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அன்றைக்குக் கொடுத்தார்கள். ஆண்டுக் கொண்டிருந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய, கருணாநிதி அரசிலேயும் கொடுத்தார்கள். அத்தனை குடும்பங்களும் இன்றைக்கு நடுத் தெருவில் நின்று கொண்டிருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், 70,000 ரூபாய்க்கு அந்த வீட்டைக் கொடுத்தார்கள். அவர்களால் அந்த ரூபாய்க்குள் வீட்டைக் கட்டி முடிக்க இயலவில்லை. அவர்களுடைய மனைவியின் காதில் போட்டிருக்கும் கம்மல், மூக்கில் போட்டிருக்கும் மூக்குத்தி ஆகியவற்றை அடகு வைத்துதான் அந்த வீட்டை கட்டி விட்டு *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்கு அதற்கு வட்டியைக்கூட கட்ட முடியாமல், அந்த வீடுகளைக் கட்டிய அத்தனைக் குடும்பங்களும், *(மேசையைத் தட்டும் ஒலி)*— இதை நான் அரசியலுக்காகச் சொல்லவில்லை; உண்மை நிலைமை; அத்தனை



2012 மார்ச் 30] *[திரு. கே.பி. நாகராஜன்]*

பேர்களும் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலே வீட்டினை வாங்க முடியாமல், கட்டிய தொகையையும் வாங்க முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; இதற்கு முன் ஆண்ட மைனாரிட்டி தி.மு.க. அரசிலே செயல்படுத்தப்பட்டு வந்த திட்டங்களால். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பசுமை வீடு என்று அத்தனை பேர்களுக்கும் கொடுத்து அவர்கள் செல்வாக்கோடு இருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்போது, அவர்கள் அந்த ரூ.70,000/–ஐ ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்தும் அந்த வீட்டை வாங்குவதற்கு மறுக்கிறார்கள். ஏனென்று சொன்னால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ள ரூ.1,80,000/– வீடுதான் எங்களுக்கு வேண்டும் என்று கேட்கிறார்களே தவிர, அந்த ஒரு இலட்சம் ரூபாய் வீடு தேவையில்லை *(மேசையைத் தட்டும் ஒலி)* என்றுதான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள் இன்றைக்கு வாழ்கின்ற கிராம மக்கள் அனைவரும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தெள்ளத் தெளிவோடு, சிந்தனையோடு, தொலைநோக்குப் பார்வையோடு, செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஒரே அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசே என்று சொல்கிறேன்.

மின் சக்தியால் இயங்கக்கூடிய இரு சக்கர வாகனங்களுக்கு 14.5 சதவிகித மதிப்புக் கூட்டு வரி 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. காம்பேக்ட் ப்ளோரசண்ட் குழல் விளக்குகளுக்கு விதிக்கப்படும் 14.5 சதவிகித மதிப்புக் கூட்டு வரி 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டு இருக்கிறது.

பெருகிவரும் சர்க்கரை நோயினைக் கருத்தில்கொண்டு, இன்சுலின் மருந்துகளின் விலையைக் குறைக்கும் பொருட்டு, அதன்மீதான 5 சதவிகித மதிப்புக் கூட்டு வரி முற்றிலும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

நெசவாளர்கள், தொழிலாளர்கள், பத்திரிகையாளர்கள், வணிகர்கள், அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கு பல நல்ல திட்டங்களையும், நலப் பணிகளையும் அளித்து வருவதோடு, திருநங்கையர்களின் நலனில் அக்கறை காட்டி பாதுகாப்பு வழங்கி வரும் ஒரே அரசு மாண்புமிகு

[திரு. கே.பி. நாகராஜன்] [2012 மார்ச் 30

தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களே, உங்கள் பாதங்களைப் பல கோடி முறை தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். என்னை வேட்பாளராக, என் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத சட்டமன்றத்திலே, மேலே உட்கார்ந்து அம்மாவைப் பார்த்தாலே போதும் என்று நினைத்துக் கொண்டிருந்த காலங்கள் போய், இந்தச் சட்டமன்றத்திற்கு என்னை வேட்பாளராக்கி (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தொகுதி சீரமைப்பிலே இந்தத் தொகுதிக்கு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், இன்றைய வணிக வரி, பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் இருந்த திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி சீரமைப்பிலே என்னை, ஏழை எளிய, சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த என்னை, புதிதாக உருவாக்கப்பட்ட மயிலம் சட்டப் பேரவைத் தொகுதி வேட்பாளாராக்கி, 21,000 வாக்கு வித்தியாசத்தில், எனக்கல்ல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணங்களையும், சிந்தனைகளையும் பார்த்து, வாக்களித்த மக்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதியில் 137 கிராமப் பஞ்சாயத்துகள்தான் உள்ளன. எனது தொகுதியில் நகரமோ, பேரூராட்சியோ கிடையாது. எல்லாம் 137 கிராம பஞ்சாயத்துகள்தான். மயிலம் ஒன்றியத்தில் 47 பஞ்சாயத்துகள், வல்லம் ஒன்றியத்தில் 67 பஞ்சாயத்துகள், வலக்கூரிலே 42 பஞ்சாயத்துக்கள்–இந்த 3 ஒன்றியங்களும் சேர்ந்ததுதான் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மயிலம் சட்டப் பேரவைத் தொகுதி. அங்கே தமிழ்க் கடவுள் முருகப் பெருமான் மயிலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார். அந்த மயிலத்தைப் பேரூராட்சியாக மாற்றித் தருமாறு உங்கள் பாதங்களை வணங்கிப் பணிவோடும், அன்போடும் சமர்ப்பித்துக்கொள்கிறேன். அந்தத் தொகுதியிலே அதை உருவாக்கித் தருமாறு உங்களைப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஓர் வேண்டுகோள். இதற்கு முன்பு வல்லம் ஒன்றியத்திலுள்ள 67 பஞ்சாயத்துகளும் செஞ்சி சட்டமன்றத்திலே



2012 மார்ச் 30] [திரு. கே.பி. நாகராஜன்]

இருந்தன. அங்கே இதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் இருந்தார். நான் அங்கு செல்லும்போது, வெள்ளிமேடுபேட்டையிலே 20 கிராமங்களைச் சுற்றி ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாததைக் கண்டேன். எல்லோரும் திண்டிவனத்திற்குத்தான் அங்கிருந்து 25, 30 கிலோ மீட்டர் தாண்டி வர வேண்டும். வாக்கு கேட்பதற்கே வெள்ளிமேடுபேட்டை கிராம மக்கள் என்னை உள்ளே விடவில்லை. நான் அப்போது சொன்னேன்—நான் சொன்னதையும் அவர்கள் மதிக்காமல், இதற்கு முன்பிருந்த சட்டமன்ற உறுப்பினரும் வாக்கு கேட்டுவிட்டு, நான் உடனடியாக அந்தச் சுகாதார நிலையத்தை ஏற்படுத்தித் தருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால், வாக்கு வாங்கியதோடு சரி, அந்தச் சட்டமன்ற உறுப்பினர் எங்கள் பக்கமே திரும்பி வரவில்லை என்று சொன்னார்கள். ஆனால், நான் சொன்னேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மயிலம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. நாகராஜன் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவரது தொகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மயிலத்தை ஒரு பேரூராட்சியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டார். ஒரு புதிய பேரூராட்சியை உருவாக்க வேண்டுமென்றால் அதற்காக மத்திய அரசுக்குக் கடிதம் எழுத வேண்டும். அந்தக் கடிதத்தை உடனடியாக மாநில அரசு அனுப்பும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.பி. நாகராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை என் உயிர் உள்ளவரை மறக்க மாட்டேன். இந்த நேரத்தில் இங்கே நான் கோரிக்கையைச் சொன்னவுடன் செய்து கொடுப்பதாகச் சொன்னதற்கு என் உயிர் உள்ள வரை, (மேசையைத் தட்டும் ஒலி) எந்த ஜென்மத்திலும், கடவுள் எனக்கு எத்தனை ஜென்மங்கள் கொடுத்தாலும், நான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மறக்க மாட்டேன்; எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே.பி. நாகராஜன்] [2012 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, திருச்சி–சென்னை நெடுஞ்சாலையில் ஜி.எம்.ஆர். என்ற நிறுவனம்மூலம் நான்கு வழிச் சாலை அமைக்கப்பட்டது. அங்கிருக்கும் கூட்டேரிப்பட்டு கிராமம், அதுதான் மயிலம் சட்டமன்றத் தொகுதிக்கு முதன்மையான இடம். நான்கு வழிச் சாலை, திருச்சி–சென்னை, பாண்டிச்சேரி–பெங்களூரு, திருவண்ணாமலை செல்லும் நான்கு வழிச் சாலை. அங்கே ஒரு சந்தையும் உள்ளது. விவசாயிகளுடைய சந்தை அங்கே இருக்கிறது. அங்கே நான்கு வழிச் சாலைகள் போடும்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடந்து கொண்டிருந்தது. அங்கே இருந்த வீடுகள் அனைத்தும் ஒதுக்கப்பட்டு, சரி செய்யப்பட்டன. ஆனால், அதற்குப் பிறகு வந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருணாநிதி அரசு, விழுப்புரம் மாவட்டத்திலே ஆண்டு கொண்டிருந்த, அன்றைய உயர் கல்வித் துறை மந்திரியாக இருந்த பொன்முடி அவர்கள், அங்கே மேம்பாலத்தை அமைக்காமல், அதை எடுத்துச் சென்று பக்கத்திலே இருக்கக்கூடிய விக்கிரவாண்டி தொகுதியிலே சிந்தாமணி என்ற கிராமத்திலே அந்த மேம்பாலத்தை அமைத்துவிட்டார். அதுமாத்திரமல்ல; என்ன காரணம் என்றால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டத்தை அன்றைக்குக் கொண்டு வந்தார்கள் என்பதற்காக, இன்றைய வணிக வரித் துறை அமைச்சர் அங்கே சட்டமன்ற உறுப்பினராக இருந்தார் என்ற ஒரே காரணத்திற்காக, பழிவாங்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, தொகுதி மக்களுக்கு நல்லது செய்யக்கூடாது என்ற ஒரே காணத்திற்காக அந்த மேம்பாலம் அங்கிருந்து கொண்டு செல்லப்பட்டது. அதுமட்டுமல்லாமல், அன்று உயர் கல்வித் துறை மந்திரியாக இருந்த பொன்முடி அவர்கள் அங்கே சூர்யா காலேஜ் என்ற ஒன்றை சாளை கிராமத்திலே அமைத்தார். இதற்குப் பதிலாக அந்தக் கல்லூரிக்குள்ளேயே ரோடுகளும், மின் விளக்குகளும் பொருத்தப்பட்டு அந்தச் சாலை அகற்றப்பட்டது. தினந்தோறும் விபத்துகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதையும் நான் உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களிடம் சொல்லி வாங்கித் தருகிறேன் என்று சொன்னேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் மீண்டும் ஒருமுறை என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, என் வாழ்நாள் உள்ளவரை மறக்கமாட்டேன், இதையும் எனக்கு தயவுகூர்ந்து செய்து தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பாதங்கள் தொட்டு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்ததற்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)



2012 மார்ச் 30] [திரு. கே.பி. நாகராஜன்]

*பிற்பகல் 1–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு டி.பி.எம். மைதீன்கான் Please sit down. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள். (குறுக்கீடு) இல்லை. அன்றைக்கு நடந்ததைத்தான் அவர் சொன்னார்.

***திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக பாராட்டப்பட வேண்டிய பல விஷயங்களை இங்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அதுபோல மின் பற்றாக்குறை சம்பந்தமாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் 600 மெகா வாட் மட்டும் நமது மாநில அரசுக்குக் கொடுப்பதாக மத்திய அரசு கூறியிருக்கிறது. இனிவரும் காலங்களில் ஏற்படக்கூடிய மின் பற்றாக்குறையை நாம் போக்கவேண்டும் என்று சொன்னால், கூடங்குளம் அணுமின் திட்டத்தின் முதல் அலகில் வரக்கூடிய 1,000 மெகாவாட் மின்சாரத்தையும் தமிழ்நாட்டுக்கே கொடுக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தவேண்டும்.

அதேபோல, மாநில வளர்ச்சியின் தேவையைக் கருத்தில் கொண்டு, அடுத்தடுத்து இயங்கக்கூடிய அந்த மின் அலகுகளில் கிடைக்கக்கூடிய மின்சாரத்தை தமிழ்நாட்டிற்குக் கொடுக்கக்கூடிய அளவிற்கு மத்திய அரசை வற்புறுத்தவேண்டும். இல்லையென்று சொன்னால், ஏற்கெனவே B.H.E.L.–உடன் தமிழக அரசு போட்ட ஒப்பந்தத்தை நான்கு ஆண்டுகளுக்கு மேலாகக் காலதாமதமாக்கியதன் காரணமாக, அதைத் தமிழக அரசே ஏற்று இப்போது, இந்த மின் திட்டத்தை நடத்த உள்ளது. இந்த உடன்குடி மின் திட்டம் என்பது ஒரு சிறப்பான அம்சமாகும். அவ்வாறு கொடுக்கவில்லை என்று சொன்னால், மீண்டும் மீண்டும் இந்த மாநில அரசை வஞ்சிக்கக்கூடிய அளவிலே மத்திய அரசு இருக்கும்.

காரணம் என்னவென்று சொன்னால், தொலைநோக்குத் திட்டம், 2023 என்பதன்கீழ் கூடுமான அளவிற்கு மின் திட்டங்களைத் தமிழக அரசு தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே அறிவித்துள்ளது. அப்படி அறிவிக்கும்பட்சத்தில் 15 இலட்சம் கோடி ரூபாய், அனைத்துவிதமான திட்டங்களுக்கு என்றாலும்கூட, இப்போது 3,000 மெகா வாட் மின்சாரம் என்பது பற்றாக்குறையாக உள்ளது. 3,000 மெகா வாட் மின்சாரத்தைப் பெறுவதற்கு 2015 ஆம் ஆண்டுவரை போடக்கூடிய திட்டங்கள் வரும்போது consumption இன்னும் அதிகமாகும். அப்போது 3,000 மெகா வாட்டை இன்னும் கூடுதலாக அதிகரிக்கக்கூடிய சூழ்நிலை வரும். மத்திய அரசின் திட்டக் குழு என்பது—முன்பு மத்திய அரசின் நிதிக் குழு, மாநில அரசுகள் தங்களுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் கூடுதலாக நிதி ஒதுக்க உதவி செய்யும். ஆனால், 1951–க்குப் பிறகு உருவாக்கப்பட்டுள்ள திட்டக் குழு, நிதிக் குழுவின் உரிமைகளைப் பறித்துக்கொண்டு, மாநில சர்க்காருக்குத் தேவையான நிதிகளைத் தராமல்—காங்கிரஸ் அரசு தொடர்ந்து தர மறுத்து வருகிறது. எனவேதான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட மாநில அரசின் உரிமைகளைப் பறிக்கக்கூடிய பல்வேறு விஷயங்களுக்காக சமீபத்தில் கடிதம் எழுதியுள்ளார்கள். அதாவது, என்.சி.டி.சி. போன்ற பிரச்சினைகளில் நேரடியாக மத்திய அரசு மாநில அரசின் அதிகாரங்களைப் பறித்துக்கொள்கிறது. எனவே, மாநில அரசின் அதிகாரங்களை நாம் பெறவேண்டும் என்று சொன்னால்—ஏற்கெனவே 1983 ஆம் ஆண்டு மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் கர்நாடகா, ஆந்திரா, பாண்டிச்சேரி முதல்வர்களை உள்ளடக்கி மாநில அரசுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வேண்டும் என்று நான்கு முதல்வர்களையும் உள்ளடக்கி ஒரு மிகப் பெரிய மாநாட்டை நடத்தினார்கள். அப்போது மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அதைப் புரிந்துகொண்டு இரவோடு இரவாக சர்க்காரியா கமிஷனை அமைத்துவிட்டார்கள். சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகளில் இன்றுவரை மத்திய அரசு ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை.

மாநில அரசுகள் மிகப் பெரிய திட்டங்களைத் தீட்டும்போது, வளர்ச்சியை நோக்கிச் செல்லும்போது, அதற்குத் தடையாக பல அதிகாரங்களை மத்திய அரசு தன்னகத்தே வைத்துக்கொள்கிறது. எனவே, மத்திய அரசை கண்டித்து நாம் ஒரு தீர்மானத்தை இந்த அவையில் நிறைவேற்ற வேண்டிய தேவை இருக்கிறது. இந்த





நெருக்கடி இருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால். ஏற்கெனவே அரசியல் சட்டப் பிரிவு 268 முதல் 293 வரை இருக்கக்கூடிய மாநில அரசுக்கான அதிகாரங்களை வரையறுக்கும்போது எஞ்சிய அதிகாரங்களை மாநில அரசே ஏற்றுக்கொள்ளும். நமது சட்டமன்ற, பாராளுமன்ற நடைமுறைகள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தை உள்ளடக்கித் தழுவியதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அங்கேயே எஞ்சிய அதிகாரங்கள் மாநில அரசுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் இங்கே எஞ்சிய அதிகாரங்களை மத்திய அரசு தனதாக்கிக்கொள்கிறது. இப்போது நாம் கடன் வாங்கவேண்டும் என்றால்கூட, அதற்காக நாம் மத்திய அரசை நாட வேண்டியிருக்கிறது; அதன் அனுமதியை பெறவேண்டியிருக்கிறது. ஆனால், மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுக்கவேண்டிய நலத் திட்டங்களை நிறைவேற்றுவது, அல்லது எதிர்காலத் திட்டங்களை நிறைவேற்றுவது, தொழில் துறையை முன்னேற்றுவது போன்ற பல்வேறு திட்டங்களுக்குப் பல ஆயிரம் கோடி ரூபாயைப் பெறவேண்டும் என்று சொன்னால், மத்திய அரசிடம் நாம் கையேந்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதுவும் காங்கிரஸ் ஆளக்கூடிய சர்க்காராக இருந்தால் கூடுதலாக நிதி ஒதுக்குவது, அப்படியில்லையென்றால் அதை வஞ்சிப்பது என்றுள்ள மத்திய சர்க்காரை எதிர்த்து ஏற்கெனவே இந்த அவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மீண்டும் ஒரு தீர்மானத்தைக் காலத்தின் கட்டாயம் கருதி நிறைவேற்றவேண்டுமாய் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

அதேபோல, நம்முடைய பட்ஜெட்டில், 2,376.78 கோடி ரூபாய் அளவு உபரியாக இருக்கும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நல்லது, அது வரவேற்கக்கூடியது. சமீபத்தில் உயர்த்திய பால் விலை, பஸ் கட்டண உயர்வுக்கு மானியம் கொடுத்தால் ஓரளவுக்குப் பால் விலை குறையும்; போக்குவரத்துக் கட்டணமும் குறையும் என்பதை இந்த நேரத்திலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, 2004 ஆம் ஆண்டு தமிழகக் கடற்கரையில் ஏற்பட்ட சுனாமி என்பது அனைவரும் அறிந்தது. சுனாமி ஏற்படும்போது

ஏராளமான டைட்டானியம் நம்முடைய கடற்கரையிலே வந்திருக்கிறது. இந்த டைட்டானியம் உலகத்திலே 285 மில்லியன் டன்தான் இருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழக அரசு இதற்குக் கூடுதலாக மூலதனச் செலவு செய்தால் பல இலட்சம் கோடி பெறுமானம் உள்ள அந்த டைட்டானியத்தை ஏற்றுமதி செய்ய முடியும். அதாவது, அந்த உலோக மண்ணை, உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால் அது அரிப்பு ஏற்படுத்தாது. விமானத்திற்கும், விண்வெளித் துறைக்கும் பயன்படுத்தக்கூடியது. மோட்டார் வாகனத் துறைக்குப் பயன்படுத்தக்கூடியது. செல்போன், கம்ப்யூட்டருக்கும் பயன்படுத்த முடியும். அந்த உலோகம் ஸ்டீலைவிட வலுவானது. 45 சதவீதம் லேசானது. எனவே, அப்பேற்பட்ட டைட்டானியத்தை ஏற்றுமதி செய்வதன்மூலமாக பல இலட்சம் கோடி ரூபாய் தமிழக அரசுக்கு வருமானம் கிடைக்கும்; நிதி நிலையை உயர்த்தக்கூடியது. ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது 18 சதவீதம் வரைதான் நாம் கடன் வாங்கியிருக்கிறோம். ஆனால், மத்திய அரசு 20 சதவீதம் அனுமதித்துள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, மீதியிருக்கக்கூடிய 2 சதவீதத்தை கடனாகப் பெற்று, டைட்டானியம் மணலை ஏற்றுமதி செய்வதற்கு தொழிற்சாலைகளை அனுமதிப்பதன்மூலமாக, பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு மாநில அரசுக்கு வருவாய் வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

அதேபோல, புவியியல் மற்றும் கனிம வளத் துறையில் கொடுத்துள்ள புள்ளிவிவரத்தில் தமிழ்நாட்டில் லிக்னைட் கனிம வளம் நிறைந்திருக்கிறது என்பதைக் குறிப்பதற்காகத்தான்—3 கோடியே 2 இலட்சத்து 76 ஆயிரம் கோடி டன் லிக்னைட் இருக்கிறது. அதேமாதிரி, வெர்மிலைட் 20 இலட்சம் டன் இருக்கிறது. ஜெர்கான் 8 இலட்சம் டன் இருக்கிறது. இது மாதிரி ஏராளமான கனிமங்கள் இருக்கின்றன. இதை நாம் பயன்படுத்தும்போது அநேகமாக கனிம வளத்தில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனவு காணக்கூடிய மாநிலமாக மாற்றுவதற்கு, இதைத் தவிர நமக்கு வருவாய் வரக்கூடிய வேறு வாய்ப்பு கிடையாது. அந்த அளவிற்குக் கூடுதலாக நமக்குக் கனிம வளங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.





நிதிநிலை அறிக்கையில் 50 ஆவது பக்கத்தில் ஆலய நிலங்களில் குடியிருப்போர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கோயில் சொத்துக்களை மீட்பதற்கான முயற்சிகள் அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, கோயில் நிலங்களில் குடியிருப்போர்கள், அதாவது ஏழை, நடுத்தர வர்க்கம், அதற்கு மேலானவர்கள் என்று இருக்கிறார்கள். அந்த மக்களுக்கான, அதுவும் ஏழைகளுக்கு, நடுத்தர மக்களுக்குக் குறைந்த விலையில், கமர்சியல் பிளேஸ் ஆக இருந்தால் அரசு நிர்ணயிக்கக்கூடிய விலையில் அதை விற்பனை செய்து, அதிலிருந்து வரக்கூடிய பணத்தை அறநிலையங்களுக்குக் கொண்டு செல்லலாம். அவர்களை உடனடியாக வெளியேற்றுவதால் பல இலட்சம் குடும்பங்கள், தமிழ்நாட்டில் அநேகமாக சாலை ஓரங்களில் குடியிருக்கக்கூடிய கட்டாயம் ஏற்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட தன்னுடைய ஸ்ரீரங்கம் தொகுதியில், அப்பேற்பட்ட மக்களுக்கு தனியாக 2 ஸ்பெஷல் தாசில்தார்கள், கிட்டத்தட்ட 14 ஆர்.ஐ.–களை நியமித்து அக்ரகாரத்தில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க முடியுமா என்று ஒரு குழுவையே நியமித்திருக்கிறார்கள். அதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மற்ற பகுதிகளில் இருக்கக்கூடிய கோயில் நிலங்களில் குடியிருக்கக்கூடிய மக்களுக்கும் வாழ்வாதாரத்தை அளிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அரசு ஊழியர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் வரக்கூடிய ஜூன் மாதம் முடிவடைகிறது. ஜூன் மாதத்தில் முடிவடையக்கூடிய அந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை—தற்போது ஸ்டார் நிறுவனத்திலிருந்து—L.I.C., G.I.C., பொதுத் துறை நிறுவனங்களுக்குக் கொடுப்பதன் மூலமாக அல்லது அரசே ஏற்று நடத்துவதன்மூலமாக அதில் நாம் ஒரு நல்ல முன்னேற்றத்தைக் காண முடியும்; பொதுத் துறை நிறுவனங்களையும் பாதுகாக்க முடியும்.

பிற்பகல் 1–25

அதேபோல, ஆசியாவிலேயே ஒரு கனவுத் திட்டமாக 1994 ஆம் ஆண்டு 400 ஏக்கர் பரப்பளவில் நம்முடைய முதல்வர் அவர்கள் அன்று அயப்பாக்கத்தில் அறிவித்தார்கள். ஒரு சிறப்பான திட்டம் அது. Housing Board திட்டமான அதில், அடிப்படை

[திரு. க. பீம்ராவ்] [2012 மார்ச் 30

வசதிகள் இன்னமும் இல்லை. அதாவது, drianage system, drinking water system, எதுவுமே கிடையாது. மழைக் காலம் வந்தால் அங்கே உள்ளேயே போக முடியாது. தொகுதிப் பக்கம் போய்ப் பார்த்தீர்கள் என்றால் மிகப்பெரிய பிரச்சினை. சமீபத்தில், Housing Board Chairman–ஐயும் நேரடியாகப் பார்த்து அது சம்பந்தமாகச் சொல்லப்பட்டது. பல நூற்றுக் கணக்கான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள அந்த நிலங்களை விற்பனை செய்யும்போது கூடுதலாக அரசுக்கு நிதி வருவாயும் வரும். Basic amenities–ஐச் சரியாகச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள், அதனை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உயர் கல்வித் துறையின்மூலம் போடியில் எஞ்ஜினியரிங் கல்லூரி துவக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலே அது பாராட்டப்படக்கூடிய விஷயம். நூற்றுக்கணக்கான எஞ்ஜினியரிங் கல்லூரிகள், தனியார் நிறுவனங்கள் இருந்தாலும்கூட, மருத்துவக் கல்லூரி சம்பந்தமாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் அநேகமாக எதுவும் குறிப்பிடவில்லை. எனவே, கூடுதலாக எஞ்ஜினியரிங் கல்லூரியும், மருத்துவக் கல்லூரியும் தொடங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்று சொன்னால், சாதாரண ஏழை, நடுத்தர மக்களுக்கு எம்.பி.பி.எஸ். படிப்பு என்பது, ஒரு மிகப் பெரிய கனவு. எனவே, கல்லூரிகளை தனியார் நடத்துவதற்கும், அரசே நடத்துவதற்கும் உள்ள வேறுபாடு அனைவருக்கும் தெரியும். ஏழையெளிய மக்கள்மீது அக்கறை கொண்ட இந்த அரசு, தன்னுடைய நிதிநிலை அறிக்கை பதிலுரையில் மருத்துவக் கல்லூரி சம்பந்தமாகவும் குறிப்பிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வன உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 2006 இதுவரை தமிழகத்தில் அமல்படுத்தப்படவில்லை. வழக்குகள் இருந்தால், அந்த வழக்குகளை விரைந்து முடித்து, மலைவாழ் மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவுக்கு அரசு கவனிக்கவேண்டும்

அதேபோல, ஆதி திராவிடர் நலத் துறைக்கு 21.82 சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது பாராட்டக்கூடியது. அதேநேரத்தில், ஒதுக்கிய நிதியை ஆதி திராவிடர் நலத் துறைக்கே பயன்படுத்தவேண்டும். அதிலே, என்ன ஆகிறது என்றால், கடந்த ஆண்டு அது வேறு துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே, அப்படி இல்லாமல் மாண்புமிகு முதல்வர் அவர்கள். .



2012 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொத்தாம் பொதுவாகச் சொல்லக்கூடாது. நீங்கள் குறிப்பாக எந்தத் துறைக்கு மாற்றப்பட்டது, எவ்வளவு தொகை என்ற விவரம் இருந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால் சொல்ல வேண்டாம். எந்த ஆட்சியில்? அதைச் சொல்லுங்கள்.

**திரு க. பீம்ராவ்:** கடந்த ஆட்சியிலும் இருந்தது. இந்த ஆட்சியில் அதுபோல் இருந்தால் அந்தத் தகவல்களை மாண்புமிகு சபாநாயகரிடம் நான் அளிக்கிறேன். அதேபோல மாற்றுத் திறனாளிகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆதி திராவிடப் பெருமக்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த நிதி எந்த ஆட்சியில் வேறு துறைக்கு மாற்றப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் தெளிவாகச் சொல்லுங்கள்.

**திரு. க. பீம்ராவ்:** கடந்த ஆட்சியில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதியை வேறு துறைக்கு மாற்றியது கடந்த தி.மு.க. ஆட்சி என்று சொல்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் ஏன் தயங்குகிறார் என்று புரியவில்லை.

**திரு. க. பீம்ராவ்:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில், தி.மு.க. ஆட்சியில், நேரிடையாகவே சொல்கிறேன். தி.மு.க. ஆட்சியில் மூன்றாயிரம் கோடி ரூபாய்க்குமேல் ஆதி திராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறு துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. எனவே, அதுபோல் நடைபெறாமல், நமது ஆட்சியில் என்று சொன்னால் மாண்புமிகு அனைத்திந்திய

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்தத் துறைக்கே அதைச் செலவழிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அயப்பாக்கம் மேல்நிலைப் பள்ளியில் 1,600 மாணவர்கள் படிக்கிறார்கள். 800 மாணவிகள் அதிலே படிக்கிறார்கள். மாணவிகள் அதிகமாகப் படிப்பதனால் அதைத் தனியாக மாணவிகளுக்கென்று பிரித்துக் கொடுக்குமாறு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட போரூர் மேம்பாலத்திற்காக 34 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, நில ஆர்ஜிதம் எல்லாம் நடைபெற்று, சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு அனைத்தும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், போரூர் பாலப் பணி தொடங்கப்படவில்லை. எனவே, அதை விரைந்து முடிக்கவேண்டும். மாண்புமிகு முதல்வர் கையாலே அதைத் திறக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள். உட்காருங்கள் திரு. க. பீம்ராவ்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தப் பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. அங்கே இருக்கின்ற நில உரிமையாளர்கள் நிலத்தைக் கையகப்படுத்துகின்றபோது நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடர்ந்ததன் காரணத்தினாலே காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது வழக்குகள் எல்லாம் முடிவுற்றுவிட்டன. அந்தச் சாலையின் கீழே பதிக்கப்பட்ட குழாய்களை எல்லாம் மாற்றி அமைக்கக்கூடிய பணி இப்பொழுது நடைபெற்று வருகிறது. அது முடிந்தவுடன் பணிகள் துவக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

பிற்பகல் 1–30

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதைப்போன்று தற்பொழுது மாற்றுத் திறனாளிகளுக்காக,





அதாவது 60 சதவிகித அளவிற்கு மனவளர்ச்சிக் குன்றிய குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை தற்பொழுது 45 சதவிகித அளவிற்குத் தகுதியுள்ளதாகக் குறைத்து, அவர்களும் பயன்பெற வழி செய்யப்பட்டுள்ளது. இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று அந்த மாற்றுத் திறனாளிகளுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. க. பீம்ராவ்:** நன்றியைச் சொல்லி முடித்துவிடுகிறேன். மாற்றுத் திறனாளிகளும் உண்மையிலேயே இதுபோன்ற சலுகைகளைப் பெற சமூகத்திலே அவர்கள்மீது தனியாக அக்கறை எடுத்து கவனிக்க வேண்டுமென்பதற்காகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களே, தன்னுடைய துறையின்கீழ் அதை வைத்துள்ளார்கள். மாற்றுத் திறனாளிகளுக்கும் மொத்தமாக 60 சதவீதம்—அதைக் குறைந்தபட்சம் ஆந்திரா, கர்நாடகா போன்று மூளை வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல்—ஊனமுற்ற அனைவருக்கும் இச்சலுகையை வழங்குவதன்மூலமாக அந்த மக்கள் பயன்பெறுவர் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு சபாநாயகருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

**திரு. வி.சி. ஆறுக்குட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்திலே மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி, கருத்துகளின் கலைப் பூங்காவாக, எண்ணங்களின் வண்ணச் சோலையாக, குடும்பப் பாசங்களின் உறைவிடமாக, அன்பும், பண்பும், பண்பட்ட உறுதியும் ஒருங்கே பெற்று அன்னை தமிழகத்தை வழிநடத்தும் வான்புகழ் கொண்ட வரலாற்று அன்னையின் வழி நடப்பேன் என உறுதி சொல்லி, தங்களின் பொற்பாதங்களை மீண்டும் ஒரு முறை வணங்கி, என் கன்னிப் பேச்சினை ஒரு பாடலுடன் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

[திரு. வி.சி. ஆறுக்குட்டி] [2012 மார்ச் 30

எங்க ஊரு கோவை ஜில்லா தில்லாலே லேலோ
.... ஓய் தில்லாலே லேலோ
அது அ.தி.மு.க. கோட்டையம்மா தில்லாலே லேலோ
(மேசையைத் தட்டும் ஒலி)
எங்க தலைவி புரட்சித் தலைவி தில்லாலே லேலோ
.... ஓய் தில்லாலே லேலோ
அவர் தமிழகத்தின் முதல்வர் அம்மா தில்லாலே லேலோ
சின்ன முகம், சிரிச்ச முகம் தில்லாலே லேலோ
.... ஓய் தில்லாலே லேலோ
அவர் குழந்தை உள்ளம், குணத்தில் தங்கம் தில்லாலே லேலோ (மேசையைத் தட்டும் ஒலி)
மாற்றம் தந்த மக்களுக்கு தில்லாலே லேலோ
.... ஓய் தில்லாலே லேலோ
அவர் ஏற்றம் தரும் அன்னையம்மா தில்லாலே லேலோ
ஆடு, மாடு திட்டம் தந்த தில்லாலே லேலோ
.... ஓய் தில்லாலே லேலோ
அவர் ஆற்றல்மிகு அன்னையம்மா தில்லாலே லேலோ
பசுமைவீடு திட்டம் தந்த தில்லாலே லேலோ
.... ஓய் தில்லாலே லேலோ
அவர் பாசமிகு அன்னையம்மா தில்லாலே லேலோ
(மேசையைத் தட்டும் ஒலி)
தங்கத் தலைவி, தானைத் தலைவி தில்லாலே லேலோ
.... ஓய் தில்லாலே லேலோ
அவர் தாலிக்குத்தான் தங்கம் தந்தார் தில்லாலே லேலோ
(மேசையைத் தட்டும் ஒலி)
தொட்டில் குழந்தை திட்டம் தந்தார் தில்லாலே லேலோ
.... ஓய் தில்லாலே லேலோ

அவர் தொட்டதெல்லாம் பொன்னாகும் தில்லாலே லேலோ. (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா! புரட்சித் தலைவர் என்னும் பெருங்கடலில் புறப்பட்ட மழை மேகம் நீங்கள். மழை மேகத்திற்குள் இடியும், மின்னலும் இருப்பதை எதிரிகள் இப்போதுதுதான் காண்கின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) சங்கரன்கோவில் என்னும் சத்தியப் போர்க்களத்தில் வாள் வீசுவதாக நினைத்துக்கொண்டு, வாய்



2012 மார்ச் 30] [திரு. வி.சி. ஆறுக்குட்டி]

பேசியவர்களுக்கு வைப்புத் தொகை கிடைக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சங்கரன்கோவில் சத்தியக் கோவிலாக சாதனை படைத்துள்ளது. இந்த வரலாறு என்றும் மாறுவதில்லை. புரட்சித் தலைவர் வழி நடத்தும்போது கழகம், காவியப் பூரிப்பு கண்டது. அம்மா வழி நடத்தும்போது பூரிப்புடன் பெருமிதமும் காண்கின்றோம். பத்துப் புத்தகங்களைப் படித்து, காப்பியடித்து ஒரு புத்தகத்தை எழுதி முத்தமிழறிஞர் என்று தாங்கள் தம்பட்டம் அடிப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) குயிலுக்கு வகுப்பு எடுக்கும் குரலிலே பத்து மொழி பேசும் தாங்கள் பட்டம் சூட்டிக்கொள்ள விரும்பவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையிலே இலங்கைத் தமிழர்களுக்காக நீதி கிடைக்க மத்திய அரசை வலியுறுத்தி வாக்களிக்க வைத்த பாரதத் தாயே நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் இடத்தில் வேறொருவர் இருந்திருந்தால் வெள்ளைத் தாளிலே விளையாட்டுப் புலி வரைந்து கொண்டிருப்பார்கள். குடும்ப ஆட்சியை வீட்டிற்கு அனுப்பி தமிழகமே என் குடும்பம் என வாரி அணைக்கும் வரலாறே, (மேசையைத் தட்டும் ஒலி) இருபது மணி நேரம் உழைத்தாலும் களைத்துப் போகாத காவியமே, உங்களுக்கோர் நன்றி. எங்களைப் பிணிக்கும், தமிழகத்தைப் பிணிக்கும் எல்லாத் தடைகளையும் நொறுக்கும் ஓசையே, தங்களுக்கோர் நன்றி. என்னிலிருந்தும், நானிலிருந்தும் விடுபட்டு உங்கள் தாய்மைப் பெருவழியில் என்றும் இருப்போம் என உறுதி கூறி எனது உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—35

நடந்து முடிந்த தமிழகத்தின் 14—ஆவது சட்டமன்றத் தேர்தலில் அமைதிப் புரட்சி மூலமாக இமாலய வெற்றியை வாக்காளப் பெருமக்கள் அம்மா அவர்களுக்கு வழங்கியுள்ளார்கள். ஆயிரம், ஆயிரம் இன்னல்கள், இடையூறுகள் வந்தபோதும் இமியளவும் கலங்காமல் நம் கழகத்தையும், என்போன்ற இலட்சோப இலட்சம் தொண்டர்களையும் காத்து, துன்பங்களையும், துயரங்களையும் தாங்கி, எதிர்கால தமிழகத்தை ஏற்ற வரும் நாள் எப்போது வரும் என்று காத்திருந்து, காலம் கனிந்து வந்த பிறகு பொன்மனச் செம்மலின் ஆட்சியை அம்மா அவர்களின் கரங்களில் மக்கள் அளித்துள்ளார்கள்.

பேரறிஞர் அண்ணாவும், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் அமர்ந்து ஆட்சி செய்த இந்த சபையில், அம்மா

[திரு. வி.சி. ஆறுக்குட்டி] [2012 மார்ச் 30

அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பீடத்தில் தனிப் பெரும்பான்மையுடன் அமர்ந்துள்ளீர்கள். நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக தினசரி செய்தித் தாள்களிலும், தொலைக்காட்சியிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் கவுண்டம்பாளையம் தொகுதியில்தான் போட்டியிடுவார்கள் என்று செய்திகள் வந்தபோது மிகப் பெரிய மகிழ்ச்சியோடு தாய்க்கு சேவை செய்ய காத்திருந்தோம். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் கோவை மாவட்டம், எசத்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட விளாங்குறிச்சி என்னும் குக்கிராமத்தில் சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, கிளைக் கழகச் செயலாளராகவும், பொதுக் குழு உறுப்பினராகவும், ஒன்றிய எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளராகவும், மூன்று முறை ஒன்றியக் கழகச் செயலாளராகவும், மூன்று முறை ஊராட்சி மன்றத் தலைவராகவும் தங்கள் நல்லாசியோடு பணியாற்றிய என்னை கோவை மாவட்டத்தின் புதிய தொகுதியான கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக அறிவித்து, எனக்காகக் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பிரச்சாரம் செய்து சுமார் 69,760 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கோடானு கோடி நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்காக வாக்களித்து வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காகப் பாடுபட்ட அனைத்துத் தொண்டர்களுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். தங்கள் ஆசியால் கவுண்டம்பாளையம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகி, இன்று 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த தேர்தல் வாக்குறுதிகள், கடந்த 10 மாத காலத்திற்குள்ளாக மிகவும் வேகமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலே எனது தொகுதிக்குட்பட்ட அத்திப்பாளையம், அசோகவனம் ஆகிய ஊராட்சிகளிலே சுமார் 200 பயனாளிகளுக்கு



2012 மார்ச் 30] [திரு. வி.சி. ஆறுக்குட்டி]

விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆடுகள் இன்று தலா 2, 3 குட்டிகள் வீதம் ஈன்றுள்ளன. ஆய்வுக்காகச் சென்றபோது அந்தக் குட்டிகளைக் காண்பித்து இத்திட்டத்தில் எங்களுடைய பொருளாதாரம் உயரும் என்றும், இதற்கு முதல்வர் அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறோம் என்றும் மகிழ்ச்சி பொங்கக் கூறினார்கள். இத்திட்டத்திற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் 244 கோடி ரூபாய் ஒதுக்கியது ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஒரு புதிய மைல் கல்லாக அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், எனது தொகுதிக்குட்பட்ட ஐந்து ஊராட்சிகளிலே 5,840 பயனாளிகளுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி வழங்கப்பட்டுள்ளன. இப்பொருட்களை இறுதிவரை நின்று பயனாளிகளுக்கு வழங்கியபோது, பயனாளிகள் மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள். இத்திட்டத்திற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் 2,000 கோடி ரூபாய் வழங்கியுள்ள அம்மா அவர்களுக்கு நன்றி.

திருமண உதவித் திட்டத்தின்கீழ் 75 பெண் பயனாளிகளுக்குத் திருமண உதவித் தொகையுடன் தாலிக்குத் தங்கம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தாலிக்குத் தங்கம் பெற்ற ஏழைப் பெண் ஒருவர் தங்கத்தை இன்றுதான் என் கையால் தொடுகிறேன் என்று கண்ணீர் மல்க அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மங்களகரமான மாங்கல்யத் திட்டத்திற்கு இந்த பட்ஜெட்டில் ரூ.750 கோடி ஒதுக்கி ஏழைப் பெண்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளீர்கள் அம்மா.

தொழில் துறையைச் சார்ந்தவர்கள் எல்லோரும் இந்த பட்ஜெட்டில் என்ன வருமோ ஏது வருமோ என்று காத்திருந்தபோது, முதல் தலைமுறை தொழில் முனைவோரை ஊக்குவிக்க புதிய திட்டம் அறிவிக்கப்பட்டு, சிறு, குறு தொழில் வளர்ச்சிக்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கி, தொழில்கள் வளர புதிய தொழில் கொள்கை வெளியிடப்படும் என அறிவித்து தமிழ்நாட்டில், குறிப்பாக கோவையில் தொழில் முனைவோரிடம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளீர்கள் அம்மா.

[திரு. வி.சி. ஆறுக்குட்டி] [2012 மார்ச் 30

கோவை நதிகளில் தாய் நதியாக விளங்கும் நொய்யலை மேம்படுத்த திட்டம், உரங்களுக்கு VAT வரி விலக்குதல், பசுமைப் புரட்சி, விவசாயத்திற்கு முன்னுரிமை, இதற்காக 3,805 கோடி ரூபாய் ஒதுக்கீடு, சொட்டு நீர்ப் பாசனத்திற்கு ரூ.25 கோடி என ஒதுக்கீடு செய்துள்ளீர்கள்.

பிற்பகல் 1—40

ஆறு வயது முதல் 14 வயது வரை உள்ள அனைவரும் கல்வி பயில 15 ஆயிரம் கோடி ரூபாயைப் பரந்த மனத்துடன் அறிவித்து பாரிலே உயர்ந்து நிற்கும் தாயே, "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற வரிகள் தங்களுக்கே பொருந்தும். மொத்தத்தில் சொல்லப் போனால், அனைத்துத் தரப்பு மக்களும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளும் சீரான சிறந்த பட்ஜெட் இதுதான். கோவை மாவட்ட மக்களின் சார்பாக இந்த பட்ஜெட்டிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பட்ஜெட் என்ற பெயரால், பெட்ஷீட்டைப் போட்டு மூடிவிட்டுச் சென்றுவிட்டார்கள். கல்லறை நோக்கிப் போய்க் கொண்டிருந்த மக்களின் வாழ்வை உயிர்தந்து மீட்டெடுத்து, இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்குச் சிறப்பான பட்ஜெட்டை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டுக் கிடந்த மக்களின் மனம் குளிரும் வண்ணமாக, கோதுமைக்கு 2 சதவிகித மதிப்புக் கூட்டு வரியும், ஓட்ஸுக்கு 5 சதவிகித மதிப்புக் கூட்டு வரியும், இன்சுலின் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களுக்கு மதிப்புக் கூட்டு வரியையும் இரத்து செய்து அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களை இந்த நாட்டு மக்களே பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இரு சக்கர வாகனத்தைத் தாறுமாறாகவும், தவறாகவும் ஓட்டி விபத்திற்குள்ளாகும் தங்கமான தமிழ் நெஞ்சங்களைக் காப்பாற்றவும், போக்குவரத்து நெடுஞ்சாலைப் பாதுகாப்பினை மேம்படுத்தவும், எமனுக்கே எரிச்சலூட்டும் வகையில் ஹெல்மெட்டிற்கு விதிக்கப்பட்ட 5 சதவிகித மதிப்புக் கூட்டு வரி விலக்கிக்கொள்ளப்படும் என்ற அறிவிப்பு மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி உள்ளது.



2012 மார்ச் 30] [திரு. வி.சி. ஆறுக்குட்டி]

அநாதையாக கைவிடப்பட்ட அன்பு சிசுக்களைக் காக்கும்வண்ணம், தொட்டில் குழந்தை திட்டம் தந்த தாயே, இன்று பச்சிளங் குழந்தையைப் பாதுகாக்க, அவர்களை அரவணைத்துத் தாலாட்டும் தாயாக தாங்கள் இருப்பதால், அம்மா என்றால் அன்பு, அப்பா என்றால் அறிவு என்று அன்றே பாடிய அன்னையே, அவர்கள் பெறுகின்ற குழந்தைகளுக்குச் சத்துப் பால் கொடுக்கும் புட்டிகளுக்கு 5 சதவிகித மதிப்புக் கூட்டு வரிக்கு விலக்கு அளிப்பதன்மூலம், தமிழ்நாட்டின் தாய்களுக்கெல்லாம் தாய் நீங்கள் என்று நிரூபித்துள்ளீர்கள்.

எனது தொகுதியில் சுமார் 117 பயனாளிகளுக்குப் பசுமை வீடு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும் இந்தத் திட்டத்திற்காக 1,200 கோடி ரூபாயை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி. அம்மா, தங்கள் பேனா முள்ளிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு சொட்டு மையும் ஒரு வரலாற்றைப் படைக்கும் என்பதனை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். 2012—2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருப்பது அனைத்துத் தரப்பிற்கும் ஒரு மைல் கல் என்பதனை நன்றி கலந்த பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலையில்லா மிக்சி, கிரைண்டர், ஃபேன் இந்த மூன்றும் வழங்கும்போது, கிட்டத்தட்ட 5 ஊராட்சிகளிலே நான் சென்று வழங்கியிருக்கிறேன். 5,845 மிக்சி, கிரைண்டரைக் கொடுக்கும்போது நானே இருந்து வழங்கினேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தப் பகுதியில் மக்களோடு மக்களாக இருந்து—ஏனென்றால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தத் தொகுதியில், வருகின்ற தேர்தலிலே நிற்கவேண்டுமென்ற காரணத்தினால், அவரது பொற்பாதங்களைத் தொட்டு வணங்கும் அந்த அடிப்படையிலே நான் வேலைக்காரனாகப் பணி ஆற்றிக்கொண்டிருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, நம்முடைய அன்பு உறுப்பினர் நாகராஜன் அவர்கள் சொன்னார்கள், அம்மா அவர்கள் நிதி கொடுத்திருக்கின்றார்கள் என்று. ஆனைக்கட்டி பகுதியிலே தண்ணீர் வீணாகச் சென்றுகொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 10 முறை அங்கு சென்றிருக்கிறேன். அங்கே வீணாகிக் கொண்டிருக்கும் அந்தத் தண்ணீரை எடுத்து 5 கிராமங்களுக்குக் கொடுத்தால் அங்கே

[திரு. வி.சி. ஆறுக்குட்டி] [2012 மார்ச் 30

குடிதண்ணீர் பிரச்சினை தீரும். அதற்காகத் தொடர்ந்து 10 மாத காலமாக 10 முறை அந்தப் பகுதிக்கு மாவட்ட ஆட்சித் தலைவரோடு சென்று ஆய்வு செய்திருக்கிறேன். நிச்சயமாக நிதியை ஒதுக்கித் தந்து அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்குக் குடிதண்ணீர் தர வேண்டுமென்று கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கோவை மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான இரண்டாவது பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை சுமார் 113 கோடி ரூபாய் ஒதுக்கிச் செயல்படுத்திய மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கோவை மாவட்ட மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தமிழகத்தினுடைய முதல்வர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் பொற்பாதம் தொட்டு வணங்கி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் *1–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

***திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கக்கூடிய இந்த நிதிநிலை அறிக்கையில் நானும் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்திருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்கள் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்து, இரண்டாவது முறையாக இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கக்கூடிய புதுக்கோட்டை தொகுதி மக்கள் அனைவருக்கும் இந்த நல்ல சந்தர்ப்பத்திலே நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தொலைநோக்குப் பார்வையுடன் அமைந்திருக்கக்கூடிய இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கும் திட்டங்கள் அனைத்தும் சிறப்பான முறையிலே உள்ளன. எதிர்காலத்தில் இவை நிறைவேற்றப்படுகின்றபோது, நம்முடைய தமிழகம் இந்தியாவிலேயே



2012 மார்ச் 30] [திரு. எஸ்.பி. முத்துக்குமரன்]

ஒரு முன்மாதிரி மாநிலமாகத் திகழக்கூடிய அளவிற்கான பல்வேறு சிறப்புத் திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே பார்க்கிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய பல்வேறு சிறப்பு அம்சங்கள், தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களுக்கும், இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு பிரிவு மக்களுக்கும் இருக்கக்கூடிய பிரச்சினைகளையும் உணர்ந்து, இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் நாங்கள் பார்க்கிறோம்.

இந்தச் சட்டமன்ற அமைப்பு ஏற்பட்ட பிறகு, என்னைப் போன்று முதன்முறையாக இந்தச் சட்டமன்றத்திற்கு உள்ளே வந்தவர்கள், இந்தச் சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய நல்ல சிறப்பு அம்சங்களை அறிந்துகொள்வதற்கான வாய்ப்புகளைப் பெற்றதைப்போல நாங்கள் பெற்றிருக்கிறோம். இலங்கையிலே, இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இன்னல்களை, பிரச்சினைகளை, தமிழகத்தில் யார் அதனை முன்னிருந்து எடுத்து நடத்துவார்கள் என்ற நிலையிருந்தபோது, முதன்முறையாகத் தமிழக வரலாற்றில் ஒரு சிறப்புமிக்க தீர்மானத்தை சட்டமன்றத்திலே கொண்டு வந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தீர்மானத்தின் வடிவாக ஜெனிவாவிலே நடைபெற்றிருக்கக்கூடிய மனித உரிமை ஆணையம் வரை சென்று, மத்திய அரசாங்கத்தை அங்கு வாக்களிக்க வைத்திருக்கக்கூடிய பெருமை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அதற்கு ஆதரவு கொடுத்திருக்கக்கூடிய கட்சிகளையும்தான் சாரும் என்று சொன்னால் அது மிகையாகாது.

அதோடு, இன்றைக்கு எங்களது கட்சியின் சார்பில் கடந்த மார்ச் மாதம் 6 ஆம் தேதி, ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமை மீறல் குறித்த விவாதத்தில் இலங்கை அரசைப் போர்க் குற்றம் புரிந்த அரசாக அறிவிக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை முன்வைத்து நாங்கள் தமிழகம் முழுமைக்கும் உண்ணாவிரதப் போராட்டத்திலே ஈடுபட்டிருந்தோம். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிருவாகிகளையும் மாவட்டந்தோறும் அனுப்பி, அந்த உண்ணாவிரதப் போராட்டத்தினுடைய கோரிக்கைகளை உலகம் முழுமைக்கும் வெளிப்படுத்துகின்ற

[திரு. எஸ்.பி. முத்துக்குமரன்] [2012 மார்ச் 30

அளவிற்கு ஆதரவு தெரிவித்தமைக்கு நன்றியினை இந்த நல்ல சந்தர்ப்பத்திலே நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு சில வரவேற்கத்தக்க அம்சங்களில் மிக முக்கியமானது வறுமை ஒழிப்புத் திட்டம். இந்த வறுமை ஒழிப்புத் திட்டத்தில் மிக தொலைநோக்குப் பார்வையோடு இதில் இருக்கக்கூடிய கருத்துக்கள் அனைத்தும் நிச்சயமாகத் தமிழகத்திலே அமல்படுத்துகிறபொழுது, வறுமையை ஒழிப்பதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை என்கிற அளவிற்கு இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த வறுமை ஒழிப்புப் பட்டியலைத் தயார் செய்கிறபோது மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கக்கூடிய வறுமை ஒழிப்புப் பட்டியல் வழிகாட்டுதலின்படி தயார் செய்யப்பட்டிருக்கக்கூடிய பட்டியல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மாநிலத் திட்டங்களுக்கு அதைப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது புதிதாக அறிவித்திருக்கக்கூடிய புது வாழ்வுத் திட்டத்தில் தமிழகத்தில் எந்தெந்தப் பகுதிகளில் எத்தனை பேர் உண்மையிலேயே ஏழைகளாக இருக்கிறார்கள் என்கிற ஆய்வினை இப்பொழுது மேற்கொண்டிருக்கிறார்கள். இதுபோன்று ஒரு துல்லியமான கணக்கினை மேற்கொள்கின்றபொழுதுதான் வறுமையை ஒழிப்பதற்குரிய திட்டமாக அது முழு அளவிற்கு, இந்தத் தீர்மானத்தின் வடிவில், இந்த அறிவிப்பின் வடிவிலே வெளிப்படும் என்பதனை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதன்மைத் துறையான வேளாண்மைத் துறைக்குக் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க அம்சம். இன்னும் சொல்லப்போனால், வேளாண்மைத் துறையின் முன்னேற்றத்திற்கு பன்முகத் திட்டத்தினுடைய வரவேற்பும், அறிவிப்பும் இதிலே இடம் பெற்றிருக்கிறது. அதிலே வேளாண்மைத் துறைக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்திருப்பதை இந்த நேரத்திலே வரவேற்கின்றோம்.



2012 மார்ச் 30] [திரு. எஸ்.பி. முத்துக்குமரன்]

பிற்பகல் 1–50

தொலைநோக்குத் திட்டம், 2023 என்கிற அந்தத் தொலைநோக்குத் திட்டத்தில் 10 அம்சங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த 10 அம்சத் திட்டங்களையும் முறையாகச் செயல்படுத்துகிறபொழுது, அது முன்னேற்றப் பாதைக்கு, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இட்டுச் செல்லமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த 10 அம்சத் திட்டத்தினுடைய விளக்கம், ஒவ்வொரு அம்சமும் எதைச் சார்ந்தது என்பதனையும், இதிலே உள்ளடக்கத்தோடு இருக்கிறபொழுது மேலும் இதனை முன்னெடுத்துச் செல்வது சிறப்பாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று, படித்த இளைஞர்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய அளவிலே வேலைவாய்ப்புகளிலே இளைஞர்களின் உரிய முக்கியத்துவத்தை உணர்ந்து, வேலைவாய்ப்பற்றோர் இல்லாத மாநிலமாகத் தமிழகத்தை மாற்றிக் காட்டுவோம் என்கிற அறிவிப்பு, இதிலே இடம் பெற்றிருக்கிறது. அதை நிறைவேற்றுகிறபொழுது நிச்சயமாக இன்றைக்குத் தமிழகத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிந்திருக்கக்கூடிய மாணவ மாணவிகளுக்கு, இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் நம்பிக்கையூட்டக்கூடிய அளவிலே இந்த அறிவிப்பு இருக்கிறது. இதை உறுதிசெய்து, கட்டாயமாகத் தமிழகத்தை வேலைவாய்ப்பற்றோர் இல்லாத மாநிலமாக உருவாக்குவதற்குரிய நடைமுறைகளையும் உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாநிலத்திலே இருக்கக்கூடிய நதிகளை இணைக்கிற திட்டம். இந்தத் திட்டத்தினுடைய அடிப்படையில் சென்ற நிதிநிலை அறிக்கையிலும் சரி, இந்த நிதிநிலை அறிக்கையிலேயும் சரி, காவிரி–குண்டாறை இணைக்கிற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அந்தத் திட்டத்திற்கு 64 கோடி ரூபாய் ஒதுக்குவதாகச் சென்ற நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டு, அதனுடைய தொடர்ச்சியாக மத்திய அரசாங்கத்தினுடைய திட்டமாக இது இணைக்கப்பட்டு, துணை மானியக் கோரிக்கையிலும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது 50 கோடி ரூபாய் மட்டும்தான் இத்திட்டத்திற்காக அறிவிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ச்சியாக இந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்வது குறித்து, எதிர்கால நடவடிக்கையைத் துரிதப்படுத்த வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ்.பி. முத்துக்குமரன்] [2012 மார்ச் 30

அதேபோன்று, ஒரு இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகிற சிறப்பான அறிவிப்பு, வருவாய்த் துறை மூலம் செய்யப்படுவதாக அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்த வீட்டுமனை வழங்கும் திட்டத்திலே இருக்கக்கூடிய பிரச்சினையை மாநில அரசு முழுமையாக உணர்ந்து, அதாவது நீர்ப்பிடிப்புப் புறம்போக்கு நிலங்கள், ஆட்சேபனைக்கு உட்பட்டிருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களிலே இருக்கக்கூடியவர்களுக்கு—இதிலே நீர்ப்பிடிப்பு புறம்போக்கு பகுதிகளில் இருக்கக்கூடியவர்கள் மிகவும் பரிதாபமான நிலையிலே இருக்கிறார்கள்; அவர்களுடைய மனை எங்கு இருக்கிறதென்று தெரியாமல் அவர்கள் அல்லாடிக்கொண்டிருக்கிறார்கள்—அதை உணர்ந்து, அரசுக்குத் தேவையற்ற இடங்களாக இருந்தால், நிச்சயமாக அதை அரசு பரிசீலித்து அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்வழிப் புறம்போக்குகள், ஏரிப் புறம்போக்குகளிலே குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்குவதில் இருக்கிற சிக்கல் என்னவென்றால், இந்தப் பிரச்சினை உச்ச நீதிமன்றம்வரையிலும் சென்று, உச்ச நீதிமன்றத்திலே அதற்குத் தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவேதான் அந்த நீர்வழிப் புறம்போக்கிலேயெல்லாம் பட்டாக்கள் வழங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதையெல்லாம் இந்த அரசு ஆய்வு செய்து, எந்தெந்தப் பகுதிகளிலே நீர்வழிகள் இல்லை என்பதை ஆராய்ந்து, அதற்குப் பிறகு மீண்டும் உச்ச நீதிமன்றத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற தடையை நீக்குவதற்குப் பரிந்துரை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்**: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இன்றைக்கு நம்முடைய தமிழக அரசாங்கத்தின் சார்பில் 3,000 புதிய பேருந்துகள் வாங்குவதாக நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சம். அதேநேரத்தில், போக்குவரத்துத் துறையில், சில விபத்து வழக்குகளிலே insurance தொகைக்குரிய பணத்தைச் செலுத்த



2012 மார்ச் 30] [திரு. எஸ்.பி. முத்துக்குமரன்]

முடியாத நிலையிலே நீதிமன்றங்கள், சாலைகளில் சென்றுகொண்டிருக்கக்கூடிய இடத்திலிருந்தே பேருந்துகளை நிறுத்தி எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். அதை மாற்றி, ஏதேனும் ஒரு insurance திட்டத்தில் தமிழக அரசு அறிவித்து அந்த நிலையைப் போக்குவதற்கு ஒரு முடிவினை எடுக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் விபத்துகளினால் ஏற்பட்ட அந்த இழப்பீடுகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 194 பேருந்துகளை விடுவிப்பதற்கு ஆணையிட்டு, 25 கோடி ரூபாய் நிதியைக் கொடுத்து, அந்த 194 பேருந்துகளையும் விடுவிக்க நடவடிக்கைகளை எடுத்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோல, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 219 பேருந்துகளுக்கு ஒரு முறை சிறப்பு நிதியாக வழங்கப்படும் என்று அறிவித்து, அதற்குண்டான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுக்க உத்தரவிட்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முத்துக்குமரன், இன்னும் ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். ஆளுமை குறித்து நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்க அம்சம். நேர்மையான, வெளிப்படையான நிருவாகம். இதிலே நம்முடைய தமிழகத்தில்—சென்ற கூட்டத் தொடரிலும் நான் வலியுறுத்தியதைப் போன்று லோக் ஆயுக்தா என்கிற அமைப்பினை முன்மாதிரியாக நம்முடைய மாநிலத்திலேயும் கொண்டு வந்தால் சிறப்பானதாக இருக்கும். இதையும் அரசு பரிசீலிக்க வேண்டுமென இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*[திரு. எஸ்.பி. முத்துக்குமரன்]* [2012 மார்ச் 30

பள்ளிக் கல்வித் துறையில் இன்றைக்கு T.R.B.–இலே விண்ணப்பங்கள் எல்லாம் விநியோகம் செய்யப்படுகின்றன. அதில் முன்பு என்ன அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இரண்டு தேர்வுகள் எழுத வேண்டும், 3 தேர்வுகள் எழுதவேண்டும் என்கின்ற அறிவிப்பு பத்திரிகையிலே வெளிவந்தது. எத்தனை தேர்வுகள்தான் எழுத வேண்டும் என்பதனைத் தெளிவுபடுத்தினால் இன்னும் உபயோகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது பள்ளி ஆசிரியர்கள் 2 தேர்வுகள், 3 தேர்வுகள் எழுத வேண்டிய நிலையெல்லாம் இருக்கிறது என்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தமிழகத்திலே ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், 3 விதமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். ஒன்று, இடைநிலை ஆசிரியர்கள். இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள். இந்த ஆசிரியர்கள் நியமனத்தில் ஏற்கெனவே மாவட்ட அளவில் பதிவு மூப்பு அடிப்படையில் அவர்கள் தேர்வு செய்யப்பட்டு வந்துகொண்டிருந்தார்கள். தென் மாவட்டங்களிலே பதிவு செய்துள்ளவர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், வட மாவட்டங்களான சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பதிவு செய்துள்ள ஆசிரியர்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும் அவர்களை பணி நியமனம் செய்கின்றபோது, அவர்களின் பணி நியமனத்தில் புதிதாகப் பதிந்தவர்களுக்கு விரைவிலேயே ஆசிரியர் பணி கிடைத்திருக்கிறது. தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று தென் மாவட்டங்களில் அதிகப்படியாக பதிவுகளைக் கொண்டிருக்கின்ற கன்னியாகுமரி, இராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களில் இருப்பவர்களெல்லாம் அப்போது உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்தார்கள். உயர் நீதிமன்றத்திலே வழக்கின் தீர்ப்பு வருகின்றபோது மாவட்ட அளவிலான பதிவு மூப்பு அடிப்படையிலே அவர்களை நியமிக்க வேண்டுமென்ற தீர்ப்பை வழங்கிவிட்டார்கள். அதன் பிறகு அதே ஆசிரியர்கள் மேல்முறையீட்டுக்குச் சென்று உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இப்போது நிலுவையில் இருக்கிறது. உச்ச நீதிமன்றத்திலே இப்போது Interim Direction கொடுத்திருக்கிறார்கள். அதில், மாவட்ட அளவிலான பதிவு மூப்பு அடிப்படையில் என்று இருப்பதை நிறுத்திவிட்டு, மாநில அளவிலான பதிவு மூப்பு அடிப்படையில் அவர்களுக்குப் பணி நியமனம் வழங்க வேண்டுமென்று ஒரு Interim Direction கொடுத்திருக்கிறார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம், அப்படி நியமிக்கின்றபோது அவர்களுக்கு state seniority கொடுக்க வேண்டுமென்று இப்போது direction கொடுத்திருக்கிறார்கள். அதேநேரத்திலே இப்போது கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் மத்திய அரசு இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் ஆசிரியர் கல்வித் தேர்வை கட்டாயம் எழுத வேண்டுமென்று 2009 ஆம் ஆண்டு, நாடாளுமன்றத்திலே ஒரு சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறார்கள். அதனடிப்படையில், இன்றைக்கு இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றபோது, அவர்கள் கட்டாயம் ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதவேண்டும். அதன்பிறகு state seniority மூலம் அவர்களுக்கு இப்போது பணி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இது இடைநிலை ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தது.



2012 மார்ச் 30] *[திரு. என்.ஆர். சிவபதி]*

அடுத்தது, பட்டதாரி ஆசிரியர்கள். பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் 6 முதல் 8 ஆம் வகுப்புவரை பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள். அவர்களுக்கும் இந்த இடைநிலை ஆசிரியர்களைப்போல தேர்வு T.E.T. – Teachers Eligibility Test கட்டாயமாக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், அவர்களும் இந்தத் தேர்வை எழுத வேண்டும். இதில் இடைப்பட்ட 8 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள் அவர்களும் பட்டதாரி ஆசிரியர்கள். அவர்களுக்கும் இது பொருந்தும். ஆகவே, அவர்கள் இனிமேல் இந்தத் தேர்வு எழுதுகின்றபோது ஆசிரியர் தகுதித் தேர்வு T.E.T. மட்டும் எழுதினால் போதும். மதிப்பெண்கள் அடிப்படையில் அவர்களுக்கு இனச் சுழற்சி முறையில் பணி நியமனம் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேல் பட்டதாரி ஆசிரியர்கள் ஒரே ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதினால் மட்டும் போதும் என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

[திரு. என்.ஆர். சிவபதி] [2012 மார்ச் 30

அடுத்தபடியாக, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள். முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை, 10 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்கள்.

பிற்பகல் 2—00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** இதற்கு முன்பு, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு, state seniority அடிப்படையில் அவர்களுக்குப் பணி நியமனம் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இந்தமுறை இப்பொழுது மாற்றியமைக்கப்பட்டு, அவர்களுக்கு டி.ஆர்.பி. மூலம் போட்டித் தேர்வு நடத்தப்பட்டு, அத்தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையிலும், இனச் சுழற்சியின் அடிப்படையிலும் பணி நியமனம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

ஆகவே, இடைநிலை ஆசிரியர்களுக்கு ஒரே தேர்வு; பட்டதாரி ஆசிரியர்களுக்கு டி.இ.டி. என்ற ஒரே தேர்வு; முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு டி.ஆர்.பி.மூலம் போட்டித் தேர்வு மட்டும் நடத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்தி, ஆசிரியர்கள் அனைவரும் ஒரே தேர்வு எழுதினால் போதும். அவர்களுக்கு நியமனம் நேர்மையான முறையில் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முத்துக்குமரன், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அனைவருக்கும் கல்வி என்ற சட்டத்தின்கீழ் தகுதித் தேர்வு கட்டாயமாக நடத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆனால் பொறியியல், மருத்துவக் கல்லூரி படிப்புகளுக்குக்கூட நுழைவுத் தேர்வை நாங்கள்



2012 மார்ச் 30] [செல்வி கே. பாலபாரதி]

ஏற்றுக்கொள்ளவில்லை என்று நம்முடைய மாநில அரசு உறுதியாகச் சொல்லிவிட்டது. அதேமாதிரி நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் இப்பொழுது ஆசிரியர் தேர்வில் மத்திய அரசு சொல்லியிருக்கக்கூடிய அந்த விதியை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று மறுப்பதற்கு என்ன பிரச்சினை இருக்கிறது? ஏன் நீங்கள் மறுக்கவில்லை என்பது என்னுடைய கேள்வி.

இன்னொன்று, முதுகலைப் படிப்பு முடித்தவர்களுக்குப் போட்டித் தேர்வு நடத்தப்படுகிறது. இந்தப் போட்டித் தேர்வு என்பது—ஆசிரியர் பணி நியமனத்திற்காக அவர்கள் ஏற்கெனவே பல ஆண்டுக் காலமாக பதிவு செய்து காத்திருக்கிறார்கள். வேலைதான் வேண்டுமென்று கேட்கிறார்களே தவிர, வேறு ஏதும் கேட்கவில்லை. இப்பொழுது போட்டித் தேர்வு என்பது மாணவர்களுக்குத்தான் தேவை. மாணவர்களுக்கு வரக்கூடிய ஆசிரியர்களுக்குப் போட்டித் தேர்வு நடத்துவதால் ஒரு மிகப் பெரிய குழப்பம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நாங்களெல்லாம் தொகுதிக்குச் செல்லும்போது எங்களிடம் “அமைச்சர் அவர்களைப் பார்த்து ஏதும் பேசமாட்டீர்களா? ஏன் அப்படியே போய் உட்கார்ந்து கொண்டேயிருக்கிறீர்கள்?” என்று கேட்கிறார்கள். நல்லவேளை இப்போதாவது நீங்கள் பேசினீர்கள். ஆகவே, நீங்கள் கொஞ்சம் தெளிவாக எங்களுக்கும் விளங்க வையுங்கள். படித்தவர்களுக்கும் விளங்க வையுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை, போட்டித் தேர்வு கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. ஏனென்று சொன்னால், இப்பொழுது மாணவர்களெல்லாம் ஆசிரியர்களைப் பார்த்து கேள்வி கேட்கின்ற காலம். ஆசிரியர்கள் திறமையாக இருக்கவேண்டும். மாணவர்களுக்குத் திறமையான முறையிலே பயிற்றுவிக்கவேண்டும். ஆகவே, அதனடிப்படையில்தான் தகுதியான ஆசிரியர்களை நியமிக்கவேண்டுமென்பதற்காக— எதிர்காலம் போட்டி நிறைந்த உலகம். இன்று மாணவர்கள் ஆசிரியர்களிடத்திலே நிறைய கேள்விகளைக் கேட்கிறார்கள். அதற்குத் தகுதியான ஆசிரியர்களை நியமிக்கவேண்டுமென்ற ஒரே

[திரு. என்.ஆர். சிவபதி] [2012 மார்ச் 30

காரணத்திற்காகத்தான் இப்பொழுது போட்டித் தேர்வு நடைபெற்று, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம், மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், எந்த நிதியாண்டிலும் இல்லாத அளவிற்கு பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை, வரலாற்றிலேயே 14,552.82 கோடி ரூபாய் வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் கிராமப்புறப் பகுதிகளிலே இருக்கின்ற ஏழையெளிய மாணவர்களின் நலன் கருதி, மாணவர்களின் படிப்பிற்காக இன்றைக்கு அதி நவீன சிறப்புப் பயிற்சிகள் எல்லாம் மாணவர்களுக்கு வழங்கவேண்டுமென்று புதிய திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இந்த நியமனத்தைப் பொறுத்தவரையில், ஆசிரியர்களும் திறமையாக இருக்கவேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகத்தான் இப்பொழுது இந்தப் போட்டித் தேர்வு நடைபெற இருக்கிறது என்பதை மீண்டும் வலியுறுத்தி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். நம்முடைய கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய மிகவும் ஏழையெளிய மாணவர்களுடைய வாழ்க்கைத் தரம், கல்வித் தரம் உயரவேண்டுமென்ற நோக்கத்தோடு மாணவர்கள் பயன்பெறுகிற வகையிலே, கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய ஏழை மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையில் அவர்களுடைய கல்வி பாதிக்கக்கூடாது என்றும், உயர் கல்வி பெறவேண்டுமென்ற நோக்கத்தோடும்தான் இந்தப் போட்டித் தேர்வை நாம் வைத்திருக்கிறோம். அதை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் டெல்லியில் நடந்த அந்த மாநாட்டில் பேசச் சொன்னார்கள். அங்கே கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கமும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்கிற, பாடங்களை நடத்துகிற, வகுப்பாசிரியர்கள் திறமையோடு இருக்கவேண்டும். ஆகவே, அவர்களுடைய திறமையின் அடிப்படையில் அமைய வேண்டுமென்ற நோக்கத்துடன்தான்



2012 மார்ச் 30] [திரு. பி. பழனியப்பன்]

அவர்களுக்குப் போட்டித் தேர்வு வைத்து, தகுதித் தேர்வை நடத்துவதற்காக இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 2–05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வி கேட்டார்கள். பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலை ஆசிரியர்களுக்கெல்லாம் ஏன் போட்டித் தேர்வு வைத்து தேர்ந்தெடுக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்காக ஒரேயொரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள்—அதில் ஒரு புள்ளிவிவரம். அந்தப் புள்ளிவிவரப்படி அப்போது போட்டித் தேர்வு இல்லை. மாநில அளவில் seniority பிரகாரம் தேர்வு செய்யப்பட்டார்கள். அதன்படி பார்த்தீர்கள் என்றால், 54 சதவிகிதம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் 52 வயதிற்கு மேற்பட்டவர்கள். அவர்கள் வேலையிலே இருக்கப்போவது நான்கு ஆண்டுக் காலமோ அல்லது மூன்றாண்டுக் காலமோதான். இப்படிப்பட்டவர்களை ஆசிரியர்களாக நியமித்தால், தமிழ்நாட்டில் உள்ள மாணவர்களுடைய நிலைமை என்ன ஆகும் என்பதை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் அந்த ஆசிரியர்களைக் குறை சொல்லவில்லை. நாங்கள் எந்தவிதத்திலும் அவர்களைக் குறை சொல்லவில்லை. அவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடாது என்ற நோக்கமும் இல்லை. ஆனால், அவர்களுக்கு வேலை கிடைக்க வேண்டுமென்பதைவிட, இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவர்களுடைய எதிர்காலம் முக்கியம். அதுதான் முக்கியம். அவர்கள் 30 ஆண்டுக் காலத்திற்கு முன்பு படித்தார்கள். அவர்கள் படித்த படிப்பிற்கும், இன்றைக்கு இருக்கிற படிப்பிற்கும் மிகப் பெரிய வேறுபாடு. பத்தாண்டுக் காலத்திற்குமுன் படித்த எனக்கே இப்போது கம்ப்யூட்டர் ஆப்பரேட் செய்யத் தெரியாது. ஆனால், 3–ஆவது படிக்கிற என்னுடைய மகளுக்கு இருக்கிற கம்ப்யூட்டர்

[திரு. சி.வி. சண்முகம்] [2012 மார்ச் 30

அறிவு எனக்கு இல்லை. இதுதான் உண்மை. யதார்த்தமான உண்மை, நிதர்சனமான உண்மை. அவர்கள் 30, 35 ஆண்டுக் காலத்திற்குமுன் படித்தார்கள். ஆனால், இன்றைக்கு இருக்கிற காலக்கட்டத்திலே, நாம் வளர்ந்து வருகின்ற காலக்கட்டத்திலே, மாணவர்கள் உலக சூழ்நிலையைத் தெரிந்துகொள்வதற்கு நல்ல திறமையான ஆசிரியர்கள் அவசியம் தேவை. அதற்காகத்தான் அம்மா அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறார்களோ, மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு போட்டித் தேர்வுகள்மூலம்தான் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று ஒரு விதியை உருவாக்கியிருக்கிறார்கள் என்பது ஒன்று.

இரண்டாவது, ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். அந்தக் கட்டாயக் கல்விச் சட்டத்தை நீங்கள் ஏன் எதிர்க்கக்கூடாது என்று கேட்கிறீர்கள். அதற்குக் காரணம், அந்தச் சட்டத்தை உருவாக்கியது மத்திய அரசாங்கம் மட்டுமல்ல; உச்ச நீதிமன்றத்தினுடைய அறிவுறுத்தலின்படிதான் அந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; இந்தச் சட்டத்தை நீங்கள் ஏன் அமல்படுத்தவில்லை என்று சொல்லி, சென்னை உயர் நீதிமன்றத்தால் நம்முடைய தமிழக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவ்வழக்கு இன்னும் நிலுவையில் இருக்கிறது என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** தி.மு.க. ஆட்சியில், உச்ச நீதிமன்றம் சொன்னதை அவர்கள் அமல்படுத்தவில்லை. அதேமாதிரி, நீங்கள் சொல்லக்கூடிய 52 வயது ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுங்கள். நீங்கள் இப்போது லேப்–டாப் கொடுத்தீர்கள், நான் என்ன கம்ப்யூட்டர் படித்தேனா? பயிற்சியின் மூலமாகத்தான் படித்துக்கொள்ள முடிகிறது. ஆகவே, அந்த 52 வயது உள்ளவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டிய கடமை உங்களிடத்தில்தான் இருக்கிறது. அவர்கள் மீதி வாழ்க்கையையாவது வாழ வேண்டாமா? இவ்வளவு காலம் கஷ்டப்பட்டு படித்துவிட்டு ஒரு வாத்தியாராகப் போய் உட்கார வேண்டாமா? அவர்களுக்குப் பயிற்சி கொடுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



2012 மார்ச் 30] [செல்வி கே. பாலபாரதி]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடம் விவாதமெல்லாம் பண்ணவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுபோய், பழைய முறையைக் கொண்டுவருவதற்கு தயவுசெய்து நீங்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, தி.மு.க. ஆட்சியில் அதை கொண்டுவரவில்லை என்று சொல்வது தவறு. அவர்கள் கொண்டு வருவதற்கான அத்தனை ஏற்பாடுகளும் செய்துவிட்டார்கள். அத்தனை முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டது. தேர்தல் வந்துவிட்ட காரணத்தால் அதை நிறுத்தி வைத்துவிட்டார்கள். அதுதான் உண்மை. (குறுக்கீடு) ஏன் நீங்கள் கொண்டுவரவில்லை என்று சொல்லுங்கள். ஏன் நீங்கள் அதற்கான முயற்சிகள் எதுவுமே எடுக்கவில்லை என்று சொல்லுங்கள். தேதி வாரியாக இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. அனைவருக்கும் கல்விச் சட்டத்தை—மாண்புமிகு உறுப்பினர் என்ன சொன்னார்?—தி.மு.க. ஆட்சியில் இருக்கின்றபோது, அனைவருக்கும் கல்விச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அவர்கள் முயற்சி செய்யவில்லை, நீங்கள் மட்டும் ஏன் அதைக் கொண்டுவருகிறீர்கள் என்று சொல்கின்றார்கள். (குறுக்கீடு) ஆனால், நீங்கள் ஆட்சி செய்தபோது அத்தனை ஏற்பாடுகளும் செய்திருக்கிறீர்கள். தேர்தல் வந்ததால் நிறுத்தி வைக்கப்பட்டது. இதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு அமைச்சர்கள் நிறைய விளக்கம் சொல்லிவிட்டார்கள். இதற்குமேல் என்ன கேட்கப் போகிறீர்கள்?

பிற்பகல் 2–10

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 24,000 பட்டதாரி ஆசிரியர்கள் பணி நியமனம் செய்வதற்கு ஏற்கெனவே முடிவெடுக்கப்பட்டு, ஒரு பகுதியினர் ஏற்கெனவே பணி நியமனம் பெற்றுவிட்டார்கள். அடுத்ததாக, 6,000 பேரும் நம்முடைய அ.தி.மு.க. ஆட்சிப்

பொறுப்பேற்ற பிறகு பணி நியமனம் பெற்றுவிட்டார்கள். எஞ்சியிருப்போர் அதிகபட்சம் 8,000 பேர் மட்டுமே. எனவே, மனிதநேயத்தின் அடிப்படையில் அவர்களுக்கும் கடந்த முறை 17,000 பேருக்கு எப்படி வேலைவாய்ப்பு கொடுத்தோமோ அதேபோல கொடுத்துவிட்டு, அவர்களைப் பணி நியமனம் செய்த பிறகு, ஐந்து ஆண்டுக் காலத்திற்குள்ளாக அவர்களுக்கு D.E.T. என்று அழைக்கக்கூடிய அந்த ஆசிரியர் பயிற்சித் தேர்வை வைத்து அவர்களைத் தேர்வு செய்துகொள்ளலாம் என்ற ஆலோசனையைத் தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்து, அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்பதுதான் வேண்டுகோள். அடுத்தது, இன்னொரு முக்கியமானது. தேர்வு வைக்க விரும்புவது. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகின்றபோது தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், ஆசிரியர் நியமனத்தைப் பொறுத்தவரை, இப்பொழுது பலதரப்பட்ட வழக்குகள் உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் நடந்துகொண்டிருக்கின்றன. உறுப்பினர் 6,000 பேர் என்று பொதுவாகச் சொல்கிறார். எந்த 6,000 பேர் என்பது தெரியவில்லை. எங்களிடத்தில் இருக்கின்ற கணக்குப்படி பட்டதாரி ஆசிரியர்கள் எவ்வளவு பேர், முதுநிலை ஆசிரியர்கள் எவ்வளவு பேர் என்று கேட்டால் முதுநிலை ஆசிரியர்கள் 2,895 பேர்; பட்டதாரி ஆசிரியர்கள் 18,343 பேர்; இடைநிலை ஆசிரியர்கள் 5,451 பேர் நியமிக்கப்பட வேண்டியிருக்கிறது. உறுப்பினர் ஏதோ ஒரு கணக்கைச் சொல்லி, இவர்களை எந்த அடிப்படையில் நியமிக்கப் போகிறீர்கள் என்று கேட்கிறார். ஆகவே, அவர் தெளிவாக எந்த ஆண்டு, எந்தெந்த ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டார்கள்; எதில் மீதமுள்ள ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதே அடிப்படையில் உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கு இருக்கிறது. அந்த வழக்கில் 1,747 பேர் இருக்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே 2010–2011–இல் பதிவு மூப்பு அடிப்படையில் தேர்வு





செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது அவர்களுக்குப் பணி நியமனம் வழங்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதில் என்னவென்று சொன்னால், அவர்களுக்கும் இப்பொழுது பணி நியமனம் வழங்கப்பட்ட பிறகு, ஐந்து ஆண்டுகளில் D.E.T. பரீட்சை எழுதி அவர்கள் தேர்வு பெற வேண்டுமென்ற நிபந்தனையோடு அவர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர், நிறைய விளக்கங்கள் சொல்லிவிட்டார்கள். திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி? மானியக் கோரிக்கை வருகிறது. அப்பொழுது கேளுங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களிடத்தில் நேற்றைய தினம் ஏறக்குறைய 20–க்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர் சங்கங்கள் சார்பாக ஒரு மனு அளிக்கப்பட்டது. அந்த மனுவில் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய தகவல் 24,000 பணியிடங்கள் என்றும், 12,000 பேருக்கு 2010–இல் பணி நியமனம் வழங்கப்பட்டுவிட்டதாகவும் அ.தி.மு.க. பொறுப்பேற்ற பிறகு 7,500 பேருக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுவிட்டதாகவும், மீதி 8,000 பேர் மட்டுமே எஞ்சியிருப்பதாகவும் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தகவலின் அடிப்படையில்தான் சொன்னேன். அது தவறாக இருந்தால், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துக்குமரன், கேள்வி கேட்டு ஏகப்பட்ட விளக்கங்கள் வாங்கிவிட்டீர்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தையெல்லாம் கழித்துவிட்டு எனக்கு நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

[2012 மார்ச் 30

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய நாடு முழுமைக்கும் பாராளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகள் வரையறை செய்யப்பட்டிருக்கின்றன. நம்முடைய தமிழகத்தில், உள்ளாட்சித் துறையிலே சில ஊராட்சிகள், சட்டமன்றத் தொகுதி, நாடாளுமன்றத் தொகுதி அதேமாதிரி மாவட்ட ஊராட்சிப் பகுதி என்று வெவ்வேறு பகுதிகளாகப் பிரிந்திருக்கின்றன. குக்கிராமம் வரைக்கும் சில திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, முடிவெடுத்திருக்கக்கூடிய அரசு, அந்தப் பகுதிகளை ஒரு வரையறை செய்து, திட்டங்கள் நேராக அந்தப் பகுதிக்குச் சென்றடைவதற்குரிய வகையில் அந்தக் கிராமங்களை ஒருங்கிணைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–15

அதேபோன்று, விலையில்லா மடிக் கணினி வழங்குகிற திட்டம். இந்தத் திட்டத்தில் இப்போது பள்ளி இறுதி ஆண்டை முடித்திருப்பவர்களுக்கு வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன். சென்ற நிதிநிலை அறிக்கையிலே இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. சென்ற நிதிநிலையிலே அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்ட காரணத்தால், கடந்த ஆண்டில் இறுதி ஆண்டு முடித்தவர்களுக்கு அத்திட்டத்தின் பயன் போய்ச் சேரவில்லை என்ற குறை வந்துகொண்டிருக்கிறது. அதேபோன்று, இந்த இறுதி ஆண்டில் படித்து முடிக்கவிருக்கும் மாணவர்களுக்கு அது வழங்கப்படுவதற்கான சாத்தியக்கூறு இருக்கின்றதா என்பதைத் தெளிவுபடுத்திட வேண்டும். அந்த மாணவர்களுக்கும் இந்தத் திட்டத்தின் பயன் கிடைப்பதற்கான உறுதியை அரசு செய்து தரவேண்டும் என இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நம்முடைய. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Laptop தருவதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணத்தைத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். தாய்லாந்து நாட்டில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது அனைவருக்கும் தெரியும். கம்யூட்டர்களுக்கான Hard Disk என்ற பொருள் உலகத்திலே அதிகமாக 80 சதவிகிதம் அளவிற்கு தாய்லாந்தில்தான் உற்பத்தியாகிறது. அங்கே வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, அந்த நிறுவனம் நிர்மூலமாக்கப்பட்ட காரணத்தினால், அதன் உற்பத்தியில் காலதாமதம் ஏற்பட்டது. அந்தக் கம்பெனியில் உற்பத்தி துவக்கப்பட்ட காரணத்தால், தற்போது Laptop கொடுக்க ஆரம்பித்துவிட்டோம். இப்போது கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், இன்ஜினியரிங் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மடிக் கணினிகளைக் கொடுக்க ஆரம்பித்துவிட்டோம். அது தொடர்பான செய்திகள் மீடியாக்களில் வந்துகொண்டிருக்கின்றன. மாணவர்கள் Laptop–ஐ எடுத்துக்கொண்டு செல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி Laptop அனைவருக்கும் வழங்கப்படும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதைச் செய்வார்கள்; மாணவர்கள் அதை நம்புகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்குத் தமிழகம் முழுவதும் Laptop பெற்ற மாணவர்கள் அத்தனைபேரும் சந்தோஷமாக சென்று கொண்டிருக்கிறார்கள். நாங்கள் Laptop கொடுக்கும் விழாவில், ஒரு மாணவர் நன்றி சொல்லிப் பேசவேண்டுமென்று சொன்னார். பேசச் சொல்லி அனுமதித்தோம். அவர் சொன்னார், இரண்டு வருடமாக என் அப்பாவிடமும், அம்மாவிடமும் செல்ஃபோன் கேட்டேன்; எனக்கு வாங்கிக் கொடுக்கவில்லை. ஆனால், நாங்கள் கேட்காமலேயே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வெளி மார்க்கெட்டில் 30,000 ரூபாய் பெறுமானமுள்ள Laptop–ஐ எனக்குக் கொடுத்து அனுப்பியிருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நீங்கள் இதய தெய்வம் என்று சொல்கிறீர்கள். அவர் உங்களுக்கு மட்டும் இதய தெய்வம் அல்ல, இந்த நாட்டுக்கே இதய தெய்வம், மாணவ சமுதாயத்துக்கே இதய தெய்வம் என்று சொன்னார். Laptop-ஐப் பற்றி தே.மு.தி.க. உறுப்பினர் பேசும்போது, ப்ளஸ் 2 மாணவர்களுக்கு வழங்கப்படுமா என்று கேட்டார். மாணவர்கள் அத்துணைப் பேருக்கும் கொடுக்கப்படும். அதற்குரிய வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. +2 தேர்வு நடைபெற்றுக்

[திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி] [2012 மார்ச் 30

கொண்டிருக்கிறது. Laptop வந்து இறங்கிக் கொண்டிருக்கின்றது. மாவட்ட வாரியாக அனைத்துக் கல்லூரிகளுக்கும் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டம் முழுமையாக மாணவ சமுதாயத்தின் வளர்ச்சிக்காக, கல்விக்காகக் கொடுக்கப்படும் என்ற கருத்தை இங்கே உறுப்பினருக்கு மாண்புமிகு துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துக்குமரன். சரியான பதிலை அமைச்சரிடமிருந்து வாங்கிவிட்டீர்கள். நீங்கள் நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கக்கூடிய அந்த விளக்கத்தின்படி பார்த்தால், அனைவருக்கும் Laptop நிச்சயமாகக் கிடைக்கும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. அதிலே எங்களுக்கு வேண்டிய விளக்கம் என்னவென்று கேட்டால் கல்லூரியின் இறுதி ஆண்டில் படிக்கும் மாணவர்கள் இன்னும் பெறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துக்குமரன், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு உறுதியாகக் கிடைக்குமா என்றுதான் கேட்டேன். அதை மட்டும் உறுதிப்படுத்தி விட்டால் போதும்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுதியாகக் கிடைக்கும். இதில் எந்த சந்தேகமும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

**திரு. மு. முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

***திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .



2012 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதில் என்ன point of order இருக்கிறது? (குறுக்கீடு)

**திரு. மு. முருகன்:** வீதி வழி போகின்ற சாமானியக் குடும்பத்தில் பிறந்த என்னை, (குறுக்கீடு) நீதி உரைக்கின்ற கோட்டைக் கொத்தளத்தில் கொண்டு வந்து உட்கார வைத்திருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும். . . (குறுக்கீடு)

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முருகன், நீங்கள் உட்காருங்கள், அவர் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்டிருக்கிறார். (குறுக்கீடு)

**திரு. மு. முருகன்:** நான் மட்டும் அல்ல, என் வம்சமே நன்றிக் கடன்பட்டு இருக்கிறோம் தாயே! (குறுக்கீடு) முதுகுளத்தூர் பேரூர் கழகச் செயலாளராக கடந்த 13 ஆண்டுக் காலம் பணியாற்றிய . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முருகன், ஒரு நிமிடம் இருங்கள். திரு. க. பாண்டியராஜன் பேசுங்கள்.

***திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உண்மைக்குப் புறம்பான தகவலைச் சொல்கிறார் என்று சொல்ல விரும்புகிறேன். அந்தத் தாய்லாந்து நிறுவனம் மூடியிருந்தது ஐந்தே நாட்கள்தான். தமிழக அரசு place செய்த ஆர்டர் மூன்றே இலட்சங்கள். பல காரணங்களுக்காக 9 இலட்சத்து 12 ஆயிரம் Laptop இந்த வருடம் ஆர்டர் பண்ண முடியவில்லை என்று ஏற்கெனவே இந்த அவையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆர்டர் கொடுத்தது மூன்று இலட்சம். வந்து இறங்கியதில் இன்னும் ஒரு இலட்சம்கூட கொடுக்கவில்லை. அதனாலே அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2012 மார்ச் 30

நன்றாகத் தெரியும். தாய்லாந்திலே Hard Disc தயாரிக்க முடியவில்லை என்பதும் உங்களுக்குத் தெரியும். அங்கு வெள்ளம் ஏற்பட்டது என்பதும் உங்களுக்குத் தெரியும். அதன் காரணமாக இந்தியா மட்டுமல்ல, உலக நாடுகளிலும் இந்தச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதற்குப் பிறகுதான் இப்போது படிப்படியாக வேகமாக அந்தப் பணிகளை இந்த அரசு ஆற்றிக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகன் அவர்கள்.

**திரு. மு. முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். வீதி வழி போகின்ற சாமானிய குடும்பத்தில் பிறந்த என்னை நீதி உறைக்கின்ற கோட்டைக் கொத்தளத்தில் கொண்டுவந்து உட்கார வைத்திருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நான் மட்டும் அல்ல; என் வம்சமே நன்றிக் கடன்பட்டு இருக்கிறோம் தாயே!

பிற்பகல் 2–20

முதுகுளத்தூர் பேரூர் கழகச் செயலாளராக கடந்த 13 ஆண்டுக் காலம் கழகப் பணியாற்ற வாய்ப்பு தந்த தாயே, இந்த எளிய தொண்டனாகிய என்னைக் கழக வேட்பாளராக அறிவித்து, தேர்தல் பிரச்சாரம் செய்து, கடும் வெயில் என்றும் பாராமல் முதுகுளத்தூர் தொகுதி வாக்காளர்களிடம் வாக்கு சேகரித்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்றென்றும் நான் நன்றிக் கடன் பட்டிருக்கின்றேன். அதேபோல், என்னைத் தேர்ந்தெடுத்த முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

130 கோடி இந்தியனும் எதிர்நோக்கும் ஒப்பில்லாப் பெருந்தலைவியே, தாய்மையின் உறைவிடமே, தமிழினத்தின் வரைபடமே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கலந்துகொண்டு பேசக்கூடிய அளவில்லா பெரு வாய்ப்பை அன்போடு தந்தமைக்கு



2012 மார்ச் 30] [திரு. மு. முருகன்]

கழகத்தோடு எங்களையும் கட்டிக் காக்கும் எங்கள் குல தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு எனது கன்னிப் பேச்சை ** தொடங்க விரும்புகிறேன். ** (குறுக்கீடுகள்). . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மு. முருகன்:** கழகத்தின் காவல் தெய்வத்தால் பெற்ற வெற்றியை . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மு. முருகன்:** ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள், இல்லையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். இல்லையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.

**திரு. மு. முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். சபாநாயகர் நிற்கும்போது எல்லோரும் உட்கார வேண்டும். உட்காரவில்லை என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும், (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களின் மனம் புண்படுகின்ற அளவிற்கு பேசிய வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள் பேசிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் முருகன் நீங்கள் பேசுங்கள்.

**திரு. மு. முருகன்: **** கழகம் ஒரு கோயில். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பது கோடானு கோடி தொண்டர்கள் ஆராதிக்கின்ற ஆலயம். அதனை வழி நடத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களோ தாயுருவ தெய்வம் என்பதும் தெளிவாகியுள்ளது. அவர்கள் யார் என்பதும் புரிந்துபோனது.

பிற்பகல் 2—25

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி ஒன்றுதான் இந்த தேசத்தை ஆட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் சாதி, மதப் பூசல்களுக்கு முடிவுரை எழுதும் என்பதை மனதில் கொண்டுதான் நம் தாய் இந்த நிதிநிலை அறிக்கையில், கலைமகளும் பாராட்டும் வண்ணம் அளவில்லா திட்டங்களையும், நிதியையும் கல்விக்காக வாரி வழங்கியிருக்கிறார்கள். சமுதாயத்தில் ஒருவன் கல்வி கற்றுவிட்டால், அவனது பொருளாதாரக் கூனல் போக்கப்பட்டு விடும். கல்வியும், பொருளாதாரமும் கைக்கு வந்துவிட்டால், சாதி, மதம் என்னும் தீண்டாமை காணாமல் போய்விடுகிறது. ஆகவே, சமூக நீதிக்கு அடிப்படையானது கல்விதான் என்பதை மையமாகக் கொண்டு, நமது காவியத் தாய் நடத்தும் கழக அரசு, கல்விக்காக அள்ளி அள்ளித் தருகிறது.

கல்விக் கட்டணம் முதல், கணினி உபகரணங்கள் வரை, காலணிகள் முதல், மடிக் கணினி வரை, வரலாறு புவியியல் வரைபடங்கள் தொடங்கி, வண்ணப் பென்சில்கள் வரை, புத்தகங்கள் தொடங்கி, புத்தகப் பைகள் வரை, இவை அனைத்தையும் மாணவ சமுதாயத்திற்கு அள்ளித் தரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் அனைத்து மாணவர்களுக்கும் நோட்டுப் புத்தகங்கள் வழங்க ரூ.150 கோடி ஒதுக்கியிருப்பதும்,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 மார்ச் 30] [திரு. மு. முருகன்]

பள்ளிக் கல்வித் துறைக்கு 14,553 கோடி ரூபாயை அள்ளித் தந்திருப்பதன்மூலம் ஒன்று தெளிவாகிறது. பிள்ளைகளைப் பெற்ற பெற்றோரின் பாரத்தை முற்றிலுமாக நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கும் திட்டங்கள் ஏற்றுக் கொண்டதால், மாணவர்கள் முகத்தில் மலர்ச்சியும், பெற்றோர்கள் முகத்தில் பெரும் மகிழ்ச்சியும் காணமுடிகிறது தாயே!

அதுபோல, கூடல் மாநகரமென்றும், கோயில் மாநகரமென்றும், தமிழகத்தில் பழமையான நகரங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் சங்கத் தமிழ் வளர்த்த மதுரையின் வளர்ச்சிக்காக ரூ.250 கோடியை வழங்கியிருப்பதன்மூலம் பாண்டிய நாடே தம் பாசத் தாய்க்கு மனதார நன்றி பாராட்டுகிறது தாயே! மாணவர்களுக்கு மட்டுமன்றி, மதுரைக்கு மட்டுமன்றி, கல்வி மேம்பாட்டிற்காகவும், மகளிர் மேம்பாட்டிற்காகவும் வழங்கப்பட்டிருக்கும் நிதியோ தாராளம்.

குறிப்பாக, 35 இலட்சம் குடும்பங்களுக்கு விலையில்லா மிக்சி, ஃபேன், கிரைண்டர் வழங்குவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இட்டிருக்கும் உத்தரவால், தமிழகத்தில் இருக்கும் தாய்மார்கள், ‘எங்களின் இன்னல்களை உணர்ந்து, எங்களின் குறைகளைப் போக்குவதற்கு அம்மா இருக்கிறார்கள். அம்மி, குழவி கற்களோடு மல்லுக் கட்டிக் கொண்டிருந்த அந்தக் கற்காலத்திலிருந்து, எங்களை நவீன காலத்திற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அழைத்து வந்திருக்கிறார்கள்’ என்று இல்லங்கள்தோறும் நன்றிப் பெருக்கோடு நன்றி கூறுகிறார்கள் தாயே!

அதுபோலவே, பசுமை வீடுகள் கட்டித் தரும் திட்டத்தின்கீழ், 60 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு 1,080 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்ததன்மூலம், ஒழுகுகின்ற கூரைக்குள் கனவு கண்ட ஏழை மக்களுக்கு இந்தத் திட்டம் தரப்போவது அளவில்லா மகிழ்ச்சி அம்மா! இப்படித் தமிழகத்தின் நிதிநிலை அறிக்கையில் கிராமப்புற வளர்ச்சிக்கும், நகர்ப்புற வளர்ச்சிக்கும், மாணவர்களுக்கும், மகளிர்க்கும், விவசாயிகளுக்குமென அனைவருக்கும் கை கொடுக்கிறது நம் தாயின் சமத்துவ அரசு.

சென்ற நிதியாண்டில் முதுகுளத்தூர் சுற்றுவட்டச் சாலையை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்த ரூ.5.25 கோடி ஒதுக்கி, முதுகுளத்தூர் மக்களின் நீண்டநாள் கோரிக்கையை

*[திரு. மு. முருகன்]* [2012 *மார்ச்* 30

*நிறைவேற்றியதற்கு தொகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதோடு, காலம் காலமாய் கடலில் வீணாய்க் கலக்கும் கஞ்சம்பட்டி ஓடை நீரைப் பயன்படுத்தி, என் தொகுதியில் 41 கண்மாய்களுக்கு நீராதாரத்தை ஏற்படுத்த ரூபாய் 18 கோடி வாரி வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் தாயே!*

*இந்த மாநிலமும், மக்களும் பயனுற, தன்னை மெய் வருத்தி உழைக்கின்ற அன்னைத் திருமகளாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் நான் சார்ந்திருக்கும் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்காக, கொத்தான கோரிக்கைகளைக் கொடுப்பதற்குப் பதிலாக, ஒரேயொரு முத்தான கோரிக்கையை முன்வைக்க ஆசைப்படுகிறேன். தாயே! சமீபத்தில் பெய்த கன மழையால் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளில், 3 தொகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. அவற்றில் முதுகுளத்தூர் தொகுதி மட்டும் வறட்சியைக் கண்டது தாயே! காரணம், மழைக் காலங்களில் பயனற்ற நிலையில் ஏறத்தாழ வினாடிக்கு 15,000 கன அடி தண்ணீர் வீதம் 20, 30 தினங்களில் கடலில் வீணாய்ப் போய் கலக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணையோடு, வைகை–பரலை இணைப்புக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால், தற்போது 800 கன அடி தண்ணீர் மட்டுமே பாசனத்திற்குப் பாய்கிற வைகை–பரலை கால்வாயில், 5,000 கன அடி செல்லும் கால்வாயாக ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, தண்ணீர்ப் பெருக்கெடுத்து ஓடுகின்ற பெருங்கால்வாயாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும், சுமார் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு மட்டும் அந்தக் கால்வாயை அகலப்படுத்தி விட்டால், கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் ஆகிய தாலுகாக்கள் விவசாயத்திலேயே மறுமலர்ச்சியை எட்ட முடியும் என்பதால், வாஞ்சையுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு, வைகை–பரலை கால்வாய் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமாயும் தாள்பணிந்து கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*



2012 *மார்ச்* 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

*பிற்பகல் 2–30*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் மீதான விவாதத்திலே காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாகப் பங்கேற்க எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை, எங்களுடைய, மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. ஞானதேசிகன், எம்.பி., அவர்கள் ‘பழையதும், புதியதும் கலந்த ஒரு கலவை’ என்று கூறினார்கள். அதேபோன்று, எவற்றுக்கெல்லாம் வரிகளைக் குறைத்து இருக்கின்றீர்களோ அதற்கு வாழ்த்துக்கள். ஆனால், இல்லத்தரசிகள் உபயோகப்படுத்தக்கூடிய சமையல் எண்ணெயினுடைய வரியை 5 சதவிகிதம் உயர்த்தியிருப்பது வருத்தத்திற்குரியது. எதற்காக இதைச் சொல்கிறோம் என்று கேட்டால், தாவர எண்ணெயினுடைய வரிகளை நீங்கள் 5 சதவிகிதம் உயர்த்தியிருக்கின்றீர்கள். ஏற்கெனவே, சமையல் எண்ணெயினுடைய விலைகள் உயர்ந்து கொண்டிருக்கிறவேளையில், மேலும், இது விலைவாசியை ஏற்றக்கூடிய செயலாகத்தான் தோன்றுகிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து சமையல் எண்ணெய்க்குக் கொடுத்து இருக்கக்கூடிய 5 சதவிகித வரியைக் குறைக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேபோன்று, விவசாயத் துறைக்காக 3,805 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருக்கிறோம் என்று தெரிவித்து இருக்கின்றீர்கள். அதிலே, என்னென்ன திட்டங்களைக் கொண்டுவரப் போகின்றீர்கள் என்பதை விளக்கமாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பின்னால் எங்களுக்கு அறிவிப்பார்கள் என்று நம்புகின்றேன். இருந்தாலும்கூட, தஞ்சை மாவட்டத்திலே, விவசாயக் குடும்பத்திலிருந்து வந்திருக்கக்கூடிய காரணத்தினாலே ஒரு சிலவற்றை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர

விரும்புகின்றேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தஞ்சை மாவட்டப் பகுதியிலே நெல் அறுவடை சாகுபடி என்பது மிக அதிகமாக இருக்கின்றது. ஆனால், நெல் அறுவடை செய்யக்கூடிய இயந்திரங்கள் எங்களுக்கு இல்லை. எனவே, விவசாயப் பொறியியல் துறைமூலமாக நெல் அறுவடை செய்யக்கூடிய இயந்திரங்கள், கரும்பு வெட்டும் இயந்திரங்கள் போன்றவற்றைத் தஞ்சை மாவட்டத்திற்கென்று தனியாக ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, எங்களுக்கு நடவு நடக்கக்கூடிய காலங்களிலே வேலையாட்கள் கிடைப்பது என்பது குதிரைக் கொம்பாக இருக்கின்றது. எனவே, அரசைப் பொறுத்தவரையிலே நல்ல முடிவு எடுத்து, எங்களுடைய, மத்திய அரசினுடைய திட்டமாக இருந்தாலும்கூட 'நூறு நாட்கள் வேலை' திட்டத்தின் காரணமாக ஆட்கள் பற்றாக்குறை மிக மோசமாக இருக்கக்கூடிய காரணத்தினாலே, நடவுகள் நடக்கக்கூடிய காலத்திலே 'நூறு நாட்கள் வேலை' திட்டத்தைத் தள்ளி வைத்து, அந்த நேரத்திலே விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக்கக்கூடிய அளவிற்கு, இந்த அரசு விவசாயிகளுக்கு ஒரு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'நூறு நாட்கள் வேலை' திட்டத்தை விவசாயம் செய்கின்ற காலத்தில் ஒதுக்கி வைத்து, விவசாயத்திற்கு ஆட்களை ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்கிறார்கள். ஆனால், மைய அரசு அதற்கு உடன்படவில்லை. வேலையாட்களுக்கு, நூறு நாட்கள் வேலை தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று மைய அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.





**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** தஞ்சை மாவட்டத்தில், நெற்பயிர் மற்றும் கரும்புக்கு இணையாக இருக்கக்கூடியது தென்னை விவசாயம். இன்றைக்குத் தேங்காயினுடைய விலை ரூ.3/– ஆக இருக்கின்றது என்பது எங்களுடைய மரியாதைக்குரிய, மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அவரும், விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர். இன்றைக்குத் தென்னை விவசாயத்தைப் பொறுத்தவரை, மரியாதைக்குரிய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சத்துணவுடன் இளநீர் கொடுங்கள் என்று கோரிக்கை வைத்திருந்தேன். ஆனால், நெல்லுக்கு ஆதார விலை கொடுக்கப்படுகின்றது; கரும்புக்கு ஆதார விலை கொடுக்கப்படுகின்றது, தென்னையைப் பொறுத்தவரையிலே, மத்திய அரசு கொப்பரையாக்கிக் கொடுத்தால், ரூ.52/–லிருந்து ரூ.55/– வரை அதனுடைய தரத்திற்கு ஏற்ப விலை கொடுக்கின்றார்கள். ஆனால், தேங்காயைக் கொப்பரையாக உற்பத்தி செய்து, திரும்ப விற்க வேண்டுமென்று சொன்னால், விவசாயிகளுக்குப் பல்வேறு கஷ்டங்கள் இருக்கக்கூடிய காரணத்தினாலே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த அரசு தென்னை விவசாயிகளுக்கென்று என்ன செய்யப்போகின்றது; என்ன திட்டங்களை நீங்கள் வைத்திருக்கின்றீர்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

1983 ஆம் ஆண்டிலே விலை ரூ.3/– விற்கப்பட்ட தேங்காய்க்கு இன்றைக்கும் அதே விலைதான். தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியாவிலே ஏறின விலை இறங்கக்கூடிய ஒரே பொருள் தேங்காய்தான். உண்மையைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எங்களைக் காப்பாற்றிக் கொண்டிருப்பது பிள்ளையாரும், திருவண்ணாமலையாரும்தான். ஏனென்று சொன்னால், தேங்காய் உடைக்கிறேன் என்று பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் மாணவர்களும் சரி, சட்டசபைக்குச் செல்லும் எம்.எல்.ஏ.–களும் சரி, தேங்காயை உடைத்துவிட்டுதான் செல்கிறார்கள். நான்கூட இன்றைக்கு ஒன்றரை மணிக்குள் பேசுவதற்கு வாய்ப்பு வர வேண்டுமென்று தேங்காயை உடைக்கிறேன் என்று வேண்டுதல் செய்துவந்த காரணத்தினால்தான் சொல்லுகின்றேன். இதுபோன்று கோயில்களில் அழிமானம் இல்லையென்று சொன்னால் தேங்காயை ரூ.3/–க்குக்கூட வாங்குவதற்கு ஆட்கள் இருக்கமாட்டார்கள். எனவே, தமிழகத்திலே அதிக அளவிலே பயிரிடக்கூடிய, தென்னை விவசாயிகளுக்கு ஆதார விலை

கொடுத்து இந்த அரசு அவர்களைக் காக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் *2–35*

தஞ்சையைப் பொறுத்தவரையில் வடகாடு வாய்க்கால் என்ற ஒரு வாய்க்காலில் நபார்டு திட்டத்தின்மூலமாகப் பல்வேறு பணிகள் அங்கு நடைபெற்று வந்தது கடந்த ஆட்சியிலே. அதிலே வடகாடு வாய்க்காலினுடைய பணிகள் மட்டும் நிறுத்தி வைக்கப்பட்டன. எனவே, வரக்கூடிய ஜூன் மாதத்திற்குள் அந்த வடகாடு வாய்க்காலினைத் தூர் வாரி, நபார்டு உதவியுடன் அதைச் சீர் செய்வதற்குத் தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு விளக்கங்களையெல்லாம் நீங்கள் அளித்து இருக்கின்றீர்கள். என்ன திட்டத்தைக் கொண்டுவரப் போகின்றீர்கள் என்றுதான் நான் கேட்டேன். ஆனால் மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள், *110* அறிக்கையில் அதைப் பற்றிக் கூறி இருக்கின்றார்கள், ஏற்றுக்கொள்கின்றோம். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் காலங்கடந்து இன்றைக்கு வந்தாலும்கூட, கூடங்குளம் அனல் மின் நிலையம் முழுவதுமாக இயங்குவதற்கு அனுமதி அளித்த மரியாதைக்குரிய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், ஒத்துழைப்பு அளித்த மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், இந்தத் திட்டம் நல்ல முறையில் நிறைவேற வேண்டும் என்று ஆதரவு அளித்த அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், மத்திய அரசினுடைய சார்பாக, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இரண்டு அணு உலைகளும், இன்னும் ஆறு மாதக் காலத்திலே உற்பத்தியைத் துவக்கி விட்டன என்று சொன்னால், *46.25* சதவிகிதம் அதாவது *925* மெகா வாட் நமது தமிழகத்திற்குக் கிடைப்பதற்கான வாய்ப்புகள் நிச்சயமாக ஏற்பட்டுவிடும். அதிலே எனக்குக் கிடைத்த செய்தியின்படி, மேலும் *300* மெகா வாட் மின்சாரம் un allocated ஆக யாருக்குக் கொடுப்பது என்று முடிவு செய்யப்படாமல் மத்திய அரசு வைத்திருக்கின்றது. அதைப் பொறுத்தவரையிலே, *300* மெகா வாட்டையும் மத்திய அரசிடம் நாம் கேட்க வேண்டும். நீங்கள் கேளுங்கள், நாங்களும் உங்களோடு



நிற்கிறோம் என்றுதான் சொல்கின்றேன். காங்கிரஸ் பேரியக்கத்தைப் பொறுத்தவரையில், தமிழர்களுடைய நலன், தமிழ்நாட்டினுடைய நலன் என்று சொன்னால், நாங்களும் யாருடன் வேண்டுமானாலும் வந்து துணை நிற்கத் தயாராக இருக்கின்றோம். அந்த *300* மெகா வாட்டையும் கேட்டுப் பெறுவதற்கு நாம் அனைவரும் சேர்ந்து வாதாடிப் பெற வேண்டும், அதற்கு நாங்களும் ஒத்துழைப்போம் என்று நான் இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

** அதைப் பிடித்திருக்கிறோம் என்று விளக்கம் எல்லாம் கொடுத்துள்ளீர்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அதற்கு முன்பாக அதைப் தடுப்பதற்கு அரசு என்ன திட்டங்களை வைத்திருக்கின்றது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற போது, ** என்று ஒரு வார்த்தை அவைக் குறிப்பில் இடம் பெற்றிருக்கிறது. அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் இதைப் பற்றிச் சொல்ல வருகிறேன் என்றால், இதை முன் எச்சரிக்கையாகத் தடுக்க வேண்டிய பொறுப்பு இப்போது நமக்கு இருக்கின்றது.

“திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது” என்று பட்டுக்கோட்டையார் சொன்னார். அதுபோன்று வரக்கூடிய காலங்களிலே, இந்தத் திருட்டுகள் நடைபெறாமல் இருப்பதற்கு அரசு மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. என்.ஆர். ரெங்கராஜன்] [2012 மார்ச் 30

வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக, Highways Patrol என்று சொல்லக்கூடிய நெடுஞ்சாலை ரோந்துப் பணிகள் பல்வேறு பகுதிகளிலே இயங்கி வருகின்றன. பல்வேறு இடங்களிலே அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அதேபோன்று ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் மூன்று வாகனங்களை வைத்து—நெடுஞ்சாலை ரோந்தைப் போன்று—அந்தக் கிராமப் பகுதிகளிலே ரோந்து செய்தோம் என்று சொன்னால், நிச்சயமாக அந்தப் பகுதியிலே காவல் துறையினர் வருவார்கள் என்ற பயம் இருக்கும்; குற்றங்கள் நடைபெறுவதற்கான சதவிகிதம் நிச்சயமாகக் குறைக்கப்படும். எனவே, அதற்கு ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இன்றைக்குப் பல்வேறு திட்டங்களை நீங்கள் அறிவித்திருந்தாலும்கூட, மின்சாரத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் கூறிவிட்டோம். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் நான் ஒன்றேயொன்று மட்டும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இந்த இரண்டு, மூன்று மாதங்களிலே மின்சாரப் பற்றாக்குறை, நீங்கள் ஜூன் மாதத்திலிருந்து படிப்படியாகக் குறைக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால் இந்த மூன்று மாதக் காலங்களிலே விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவார்கள். அவர்களுக்கு முடிந்தால் இந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரப் பற்றாக்குறையை மூன்று மாதத்திற்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்று சொல்கிறார்கள். மூன்று மாதத்திற்கு மத்திய தொகுப்பிலிருந்து, உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, மாநில அரசிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த மின்சாரத்தைப் பெற்றுத் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிவிடட்டும். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2012 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய பத்திரிகையில் பார்த்தேன். மாண்புமிகு பிரதமர் அவர்கள் *அண்டை நாடாக இருக்கின்ற பாகிஸ்தானிற்கு 5,000 மெகா வாட் மின்சாரத்தைக் கொடுக்கவிருக்கிறார்கள். இந்த நாட்டினுடைய ஒரு பகுதியாக இருக்கின்ற தமிழகத்திற்கு மின்சாரத்தை வழங்குவதற்குரிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிவிடட்டும்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெடுஞ்சாலையில் நடைபெறுகின்ற கொலை, கொள்ளைகளைத் தடுப்பதற்குக் கூடுதல் ரோந்துப் படைகளை அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு அம்மா அவர்கள், இப்போது இருக்கின்ற 122 ரோந்துப் படைகளை 260 ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

பிற்பகல் 2–40

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பத்திரிகையினுடைய செய்தியில் நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் பாகிஸ்தானுடைய அதிபரோடு பேச்சுவார்த்தை நடத்தி, 5,000 மெகா வாட் மின்சாரம் பாகிஸ்தானுக்குக் கொடுப்பதாகவும், அதேநேரத்தில் தமிழகத்திற்கு ஒரு யூனிட்கூட மின்சாரம் கொடுக்க மாட்டேன் என்று மத்திய மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஷிண்டே அவர்கள் கூறியிருக்கின்றார்களே, அதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[2012 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் **ஆக இருக்கின்ற பாகிஸ்தான் நாடு என்று குறிப்பிட்டார். எனவே, ** என்பதற்குப் பதிலாக அண்டை நாடாக இருக்கின்ற பாகிஸ்தான் என்று மாற்றிக்கொள்ளலாம்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** இந்தியாவினுடைய இறையாண்மையைப் பொறுத்தவரையில், நாம் சுற்றி இருக்கக்கூடிய நாடுகளோடு ஒரு நட்புறவை உண்டாக்க வேண்டுமென்ற காரணத்தினாலே அதைப்பற்றி யோசித்து இருக்கலாம். இருந்தாலும்கூட தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டிய மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப்பதிலே நாங்களும் உங்களோடு சேர்ந்திருப்போம் என்பதை ஏற்கெனவே நான் தெளிவாகத் தெரிவித்துவிட்டேன். இப்போது எந்த விளக்கமும் கொடுக்க வேண்டியதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போது பேசினாலும் உங்களோடு இருக்கிறோம், உங்களோடு இருக்கிறோம் என்று மட்டும்தான் சொல்கிறாரேயொழிய, ஒருநாளாவது ஒரு மனுவை பிரதமரிடத்திலே கொடுத்தோம் என்று பத்திரிகையிலாவது ஒரு போட்டோ வந்திருக்கிறதா என்று சொன்னால், அதுகூட இல்லை. அவையில் மட்டும் உங்களோடு இருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். அவையில் எங்களோடுதான் இருக்கிறீர்கள், நீங்கள் வெளியிலா இருக்கிறீர்கள்? இப்போது எங்களோடுதான் இருக்கிறீர்கள் அவையில். அவையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் பாரதப் பிரதமரிடத்திலே எடுத்துச் சொல்கின்றபோது, எங்கள் தமிழகத்திற்கு இது தேவை என்ற ஒரு மனுவைக் கொடுத்து, பத்திரிகை வாயிலாகத் தெரிந்து கொள்வதற்குரிய வாய்ப்பை உருவாக்கிக் கொடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 மார்ச் 30]

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** இப்போது கொடுக்கக்கூடிய மின்சாரத்திலே சுமார் இரண்டாயிரம் மெகா வாட் மத்திய அரசாங்கத்தாலேதானே கொடுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், இரண்டாயிரத்து சொச்சம் மெகா வாட் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எதற்கு இதைச் சொல்ல வருகிறேன் என்று சொன்னால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ரெங்கராஜன், Please sit down.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியத் தொகுப்பிலிருந்து நமது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கொடுக்க வேண்டிய மின்சார அளவு 2,950 மெகா வாட். இது மத்திய அரசு கொடுக்கிற யாசகம் அல்ல; நம்முடைய உரிமை. ஏற்கெனவே நமக்கு அனுமதிக்கப்பட்டது, ஒதுக்கப்பட்டது. ஆனால், அதிலேகூட 2,200 மெகா வாட் என்ற அளவிலேதான் இப்போது வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வழங்கிக் கொண்டிருந்ததிலேயும், ஏறத்தாழ 750 மெகா வாட் அளவிற்கு மத்திய அரசு குறைத்து இருக்கிறது. மேற்கொண்டு கொடுக்கவில்லையென்றாலும் பரவாயில்லை. இருக்கிறதையும் குறைத்திருக்கிறார்கள். அதையாவது வாங்கிக் கொடுங்கள் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** கூடங்குளத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் 3 மாதத்திற்கு முன்பே இந்த முடிவை எடுத்திருந்தால் இன்றைக்கு இந்தப் பிரச்சினை இருந்திருக்காது என்பதையும் இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவருடைய நிருவாகத் திறமையின் காரணமாக கூடங்குளம் எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் இப்போது

[திரு. சி.வி. சண்முகம்] [2012 மார்ச் 30

திறக்கப்பட்டிருக்கிறது, அங்கே அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இவர்கள் ஆளுகின்ற மகாராஷ்டிரா மாநிலத்திலே இப்போது நிறுவப்பட இருக்கின்ற அந்த அணு மின் நிலையத்திற்கு இன்றைக்கும் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, அதைத் திறப்பதற்கு இந்தக் காங்கிரஸ் அரசிற்கு எந்தவித வக்கும் இல்லை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** உள்ளூரில் இருக்கக்கூடிய சட்டம்–ஒழுங்கு இவற்றை கணக்கில்கொண்டு நீங்கள் காலம் தாழ்த்தியதைப்போல அங்கும் செய்து கொண்டிருக்கிறார்கள், அவ்வளவுதான். எனவே, இந்தப் பொருளை இத்தோடு முடித்துக்கொள்வோம். அடுத்ததாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரெங்கராஜன், உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** இன்னும் 2 நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். அறநிலையத் துறையைப் பொறுத்தவரையிலே என்னைக் கவர்ந்த ஒரு அறிவிப்பு. இதை காங்கிரஸ் கட்சியினுடைய அறிவிப்பாகச் சொல்லவில்லை. ஆன்மிகவாதி என்ற முறையிலே என்னுடைய கருத்தாக ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சனிக்கிழமைதோறும் பள்ளிப் பிள்ளைகளுக்கெல்லாம் நல்ல நீதிக் கதைகளையெல்லாம் திருக்கோயில்களிலே வைத்துச் சொல்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை, பள்ளிக்கூடங்கள் வரை விரிவுபடுத்த வேண்டும் என்று நான் ஆசைப்படுகின்றேன். நாங்கள் எல்லாம் பள்ளிக்கூடங்களிலே படிக்கின்ற காலத்திலே Moral class என்று சொல்வார்கள். நீதி போதனை வகுப்பு என்று சொல்வார்கள். என்னுடைய வயதை ஒத்தவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அந்தக் காலத்திலே படிக்கும்போது நல்ல கதைகள், நீதி போதனைகள், பீர்பால் கதைகள், தெனாலி ராமன் கதைகள் போன்றவற்றையெல்லாம் சொல்லி, நல்ல நல்ல



2012 மார்ச் 30] [திரு. என்.ஆர். ரெங்கராஜன்]

கருத்துகளையெல்லாம் இளம் சிறார்களுடைய மனதிலே விதைத்திருந்தார்கள். ஆனால், தற்போது கல்வி முறை மாற்றப்பட்டுவிட்ட காரணத்தினாலே, இன்றைக்கு மாணவர்கள் நல்ல ஒழுக்கத்தோடு பாதி பேர் வளர்வதில்லை என்ற வருத்தம் எனக்கிருக்கிறது. கம்ப்யூட்டர் யுகத்திலே நாம் சென்று கொண்டிருக்கக்கூடிய காரணத்தினாலே நமது சமுதாயத்தினுடைய கலாச்சாரங்கள், தமிழகத்தினுடைய பண்பாடுகள் எல்லாம் இன்றைக்குச் சிதைந்து கொண்டிருக்கின்றன என்கிற வருத்தம் எனக்கு இருந்து கொண்டிருக்கிறது. குழந்தைகளைப் பொறுத்தவரையிலே, சாயுங்காலம் படுக்கப் போகிறார்கள் என்றால், கொலை வெறி, கொலை வெறி என்று பாடிக்கொண்டு காலையிலே எழுந்து பள்ளிக்குச் செல்லும்போது கத்தி எடுத்துக்கொண்டு செல்லக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அந்தப் பிள்ளைகள் வளரக்கூடிய காலத்திலே அவர்களைப் பக்குவத்தோடு நாம் கொண்டு வரவில்லை என்று மனதிலே ஒரு குற்றம் இருக்கிறது. அதைப் போக்கக்கூடிய வகையிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவது இப்போது, 'why this kola veri' ஆக இருக்கிறது, எங்களுக்கு. (சிரிப்பு)

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** 'Why this kola veri' என்று நான் கேட்கலாம் என்று நினைத்தேன், 3 மணி அளவில் என்னைப் பேச வைத்துவிட்டீர்களே என்று. (சிரிப்பு)

பிற்பகல் 2–45

பகவத்கீதையைப் பொறுத்தவரையில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால் மனித வாழ்க்கையின் தத்துவங்களான பற்றறுத்தல், பயமின்றி இருத்தல், சினமற்று இருத்தல் என்ற இந்த மூன்றைத்தான் அடிப்படையாகச் சொல்கிறார்கள். எனவே அதுபோன்ற திட்டங்களைக் கொடுப்பதில் மகிழ்ச்சி. அதைப் பள்ளிக்கூடங்களிலும் விரிவுபடுத்த வேண்டும், பள்ளிக்கூடங்களிலும் நீதிபோதனை வகுப்புகள் தொடங்கப்பட வேண்டும் என்று இறுதியாக வலியுறுத்தி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 மார்ச் 30

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசியபோது அவருடைய மாவட்டத்திற்கு நெல் அறுவடை இயந்திரம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த ஆண்டு வழங்கப்பட்டிருக்கிறது. இனி வரும் ஆண்டில் வழங்கப்படும்போது அவர்களது மாவட்டத்திற்கும் வழங்கப்படும். மேலும், வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியை எந்த அளவிற்குச் செலவு செய்ய இருக்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, நாம் இந்த நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கின்றோம். பண்ணை உற்பத்தித் திறன், பண்ணையம், பயிர் சாகுபடி பல்வகைப்படுத்துதல், விவசாயத்தை இயந்திரமயமாக்குதல், சிறந்த நீர் மேலாண்மை, அறுவடைக்குப்பின் கட்டமைப்பு மற்றும் உற்பத்திப் பொருள்களுக்கு மதிப்புக் கூட்டுதல், தானிய உற்பத்தி, வேளாண்மை உற்பத்தி, திருத்திய நெல் சாகுபடி, பயறு வகை உற்பத்தி, பயிர் காப்பீட்டுத் திட்டம், நுண்ணுயிர் பாசனத் திட்டம் இதுபோன்ற திட்டங்களுக்கெல்லாம் இந்த நிதியை செலவு செய்ய இருக்கின்றோம். கொப்பரை விலையை உயர்த்துவது மத்திய அரசினுடைய கையில் இருக்கிறது. அப்படி நீங்கள் உயர்த்திக் கொடுத்தால் தேங்காய் விலை உயரும். நீங்கள் சொன்னதுபோல் இப்போது 3 ரூபாய்க்கு எங்கும் தேங்காய் கிடைக்கவில்லை. 6 ரூபாய்க்கு மேல் எல்லாப் பகுதிகளிலும் விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் குறிப்பிடுவது சில்லறையில் விற்கக்கூடிய விலை. விவசாயிகளிடமிருந்து வியாபாரிகளுக்குப் போவதற்கு முன்னால் கிடைக்கின்ற விலையைத்தான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன்.

**திரு. து. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் தெய்வம், கழகத் தலைவர் டாக்டர் கேப்டன் அவர்களை வணங்கி, 2012—2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை குறித்து எனது கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.



2012 மார்ச் 30] *[திரு. து. முருகேசன்]*

விஷம்போல் விலைவாசி ஏறி வருகின்ற இந்தச் சூழ்நிலையில் மக்களுக்கு மேலும் சுமை ஏற்றுகின்றவிதமாக இந்த நிதிநிலை அறிக்கையில் 1,500 கோடிகளுக்குப் புது வரிகள் போடப்பட்டுள்ளன. இது எவ்வாறு இருக்கிறது என்று சொன்னால், கனமே இல்லாது கருதப்படும் மயில் இறகு ஆனாலும், அதை அளவுக்கு மீறி வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சு உடைந்துபோகும். அதுபோல், அரசானது வரியை உயர்த்திக்கொண்டே போனால் விலையும் உயர்ந்துகொண்டே போகும். இதனால் ஏழை மற்றும் நடுத்தர மக்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகும் நிலை உள்ளது.

கோதுமைக்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விளக்களித்திருப்பதுபோல், கோதுமையினால் சுடப்படும் ரொட்டிக்குத் தேவையான எண்ணெய் விலையை உயர்த்தியது நியாயமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். கோதுமைக்குக் கூட்டு வரியிலிருந்து விளக்கு அளித்து, கோதுமையினால் சுடப்படும் எண்ணெய் விலையை உயர்த்தியது விசித்திரமானதாகும்.

ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்க புதிய இயந்திரப் படகுகள் வாங்க 25 கோடிக்கு திட்டமிட்டிருக்கும் இந்த அரசு, சிங்கள இராணுவத்தால் மீனவர்கள் தாக்கப்படுவதாலும், துப்பாக்கியால் சுடப்படுவதாலும் மீனவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை உள்ளது. மீனவர்களின் உயிர்ப் பாதுகாப்பு குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கோயில் நிலங்களில் பலர் காலங்காலமாகக் குடியிருந்து வாழ்ந்துவரும் நிலையில், அந்த ஏழைகளை இந்த நிதிநிலை அறிக்கையில் அப்புறப்படுத்துவது என்று அரசு எடுத்திருக்கும் முடிவை மறுபரிசீலனை செய்து அங்குக் குடியிருக்கும் ஏழைகள்மீது கருணைகொண்டு ஒரு மாற்றுத் திட்டத்தை அவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

பட்டு நெசவுக்குரிய தங்கம், வெள்ளி சரிகைகளின் விலை, உயர்வு ஆகிவிட்டதால், பட்டு நெசவாளர்கள் தங்களது நெசவுப் பணியில் மிகவும் நலிவடைந்துள்ளனர். தங்கம், வெள்ளி சரிகைகள் விலை உயர்வுக்கு ஆன்லைன் வர்த்தகம்தான் காரணம் ஆகும். இதைத் தமிழக அரசு கருத்தில்கொண்டு கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக தங்கம், வெள்ளி சரிகைகளை நேரடியாகப் பட்டு

நெசவாளர்கள் கொள்முதல் செய்யும் வாய்ப்பை உருவாக்கி, மானிய விலையில் கொடுத்தால், சரிகைகள் விலை குறைந்து, பட்டு நெசவாளர்கள் பசிப் பிணி தீர்ந்து வாழ்க்கையில் புது மலர்ச்சி பெறுவார்கள்.

பிற்பகல் 2–50

விவசாயத் தொழிலிலே ஈடுபடும் விவசாயிகள் தங்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படாதா என ஏங்கித் தவிக்கக்கூடிய சூழல்தான் பல ஆண்டுகளாக உள்ளது. இதையே பெரும்பாலான புள்ளிவிவரங்களும் தெரிவிக்கின்றன. முதன்மைத் துறையான விவசாயத் துறை போதுமான வளர்ச்சி பெறாத நாட்டில், வறுமையையும், ஏழ்மையையும் ஒழிப்பது சாத்தியம் அற்றது என்பது அனைவரும் அறிந்ததே.

விவசாயிகளின் அனைத்து விளைபொருட்களுக்கும் நியாயமான விலை கிடைத்து விவசாயிகளுக்குப் போதிய வருமான உத்தரவாதம் கிடைக்கும்வகையில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட பேராசிரியர் இராதாகிருஷ்ணன் குழுவின் பரிந்துரை விலையை நிர்ணயிக்க நிதியம் ஒன்றை உடனடியாக ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்து அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் ஒன்றாக இணைக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரை இணைக்கப்படாமல் தனித் தனி நிருவாகமே செயல்படுகிறது. இதை உடனடியாக ஒரே நிருவாகத்தின்கீழ் கொண்டு வரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகத்திற்கு ஒரு பெரிய பாரம்பரியமும், மதிப்பும், மரியாதையும் உண்டு. பன்னாட்டு அளவிலே அதற்கு சிறந்த மரியாதை உண்டு. அண்ணா பல்கலைக்கழகத்தை ஒருங்கிணைத்த பெருமை தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பல்கலைக்கழகத்தை ஒருங்கிணைப்பதற்காக ஒரு சட்டத்





திருத்தத்தைக் கொண்டுவந்து நம்முடைய கூடுதல் தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் 8 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கண்காணிப்புக் குழு, அந்தப் பல்கலைக்கழகங்களுடைய சொத்து விவரங்கள், அசையும் சொத்துக்கள், அசையாச் சொத்துக்கள், அங்கு இருக்கக்கூடிய வாகனங்கள், அங்கு பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய பேராசிரியர்கள் எவ்வாறு நியமிக்கப்பட்டார்கள், அதோடு அந்த நிதி நிருவாகம் போன்றவற்றையும் கண்காணித்துப் பணியாற்றிக்கொண்டிருக்கிறது. இன்னும் கூடிய விரைவில் அதனுடைய கருத்துகளை அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கும். அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு தமிழகத்தில் இருக்கக்கூடிய 525 கல்லூரிகளையும் சேர்த்து, முதலாம் ஆண்டு படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஒரே தேர்வாக பாடம் நடத்தியிருக்கிறோம். தேர்வு எழுதி இருக்கிறார்கள். அதற்கான ரிசல்ட்டும் வெளிவந்திருக்கிறது. அதோடு நடைபெறவிருக்கின்ற இரண்டாம் பருவத் தேர்வு, நான்காம் பருவத் தேர்வு, ஆறாம் பருவத் தேர்வு, எட்டாம் பருவத் தேர்வு ஆகிய தேர்வுகளில் கிட்டத்தட்ட ஆறு இலட்சம் மாணவர்கள் ஒரே தேர்வாக எழுதுவதற்கு இந்த ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் இருங்கள். நேற்று வரவு–செலவுத் திட்ட பொது விவாதத்தில் உரையாற்றும்போது, தே.மு.தி.க. உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் மாணவர்களின் கல்வித் தரம் குறித்து வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, சில புள்ளிவிவரங்களைத் தெரிவித்தார்.

இதுகுறித்து, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் புள்ளிவிவரங்களுக்கு என்ன ஆதாரம் இருக்கிறது, இது அரசின் பொருளாதார அறிக்கையில் சொல்லியிருக்கிறார்களா அல்லது கற்பனையாக இந்த விவரங்கள் சொல்லப்படுகின்றனவா என வினவினார். அதற்கு திரு. பாண்டியராஜன் அவர்கள் இவ்விவரங்கள் ‘பிரதம்’ என்ற அமைப்பினால் வெளியிடப்பட்ட ASER என்ற அறிக்கையை அடிப்படையாகக் கொண்டதெனத் தெரிவித்தார்.

*[பேரவைத் தலைவர்]* [2012 மார்ச் 30

மேலும், மாண்புமிகு வணிக வரி மற்றும், பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் இந்த அமைப்பு மத்திய அல்லது மாநில அரசினால் அமைக்கப்பட்டதா அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பா என்று கேட்டு, இதுபோன்ற பல்வேறு அமைப்புகள் தங்களுக்கு வேண்டியவர்களுக்குச் சாதகமான அறிக்கைகளை அளிப்பது வழக்கமாக இருக்கிறது எனத் தெரிவித்தார்.

எனவே, இந்த அறிக்கையினுடைய புள்ளிவிவரங்களை திரு. பாண்டியராஜன் அவர்கள் எனது அறையில் வந்து கொடுக்கவேண்டுமெனவும், அவர் கொடுக்கும் புள்ளிவிவரங்கள் சரியாக இருந்தால் அதை அவைக் குறிப்பில் ஏற்றுவேன், இல்லையென்றால் அது அவைக் குறிப்பில் ஏறாது எனவும் நான் தீர்ப்பளித்தேன்.

திரு. பாண்டியராஜன் அவர்கள், புள்ளிவிவரங்கள் குறித்த தாள்களை எனது அறையில் நேற்று கொடுத்தார். இவ்விவரங்களை அரசின் பள்ளிக் கல்வித் துறை மற்றும் உயர் கல்வித் துறைகளுக்கு அனுப்பி கருத்து கேட்டபோது, 'பிரதம்' என்பது ஒரு அரசு சாரா தன்னார்வ அமைப்பு என்றும், இவ்வமைப்பு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள கல்வி நிலை குறித்து Annual Status of Education Report (ASER) என்ற அறிக்கையினை வெளியிட்டு வருவதாகவும் அத்துறைகள் தெரிவித்துள்ளன. மேலும், இந்த அறிக்கையிலுள்ள விவரங்கள் மத்திய அரசினாலோ மாநில அரசினாலோ அங்கீகரிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையானது பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்பட்ட அரசு சார்பான சரியான புள்ளிவிவரங்களைப் பெற்று, மிகுந்த கவனத்துடன் தயாரித்தளிக்கப்படும் அறிக்கையாகும். இதனை மத்திய, மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்படாத ஒரு தன்னார்வ அமைப்பு சில விவரங்களைப் பெற்று அதுதான் மொத்த கல்வித் துறையில் தமிழ்நாட்டில் உள்ள நிலவரம் என்பதுபோல சித்திரித்து வெளியிட்டுள்ள இந்த அங்கீகரிக்கப்படாத அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு, மிகுந்த ஆய்வுக்குப் பின், உண்மைத் தன்மை வாய்ந்த அரசின் புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையினோடு உறுப்பினர் ஒப்பிட்டுப் பார்த்து பேரவையில் குறைகூறிப் பேசுவது அவை மரபுகளுக்கு ஏற்ற ஒன்றல்ல.



2012 மார்ச் 30] *[பேரவைத் தலைவர்]*

எனவே, உறுப்பினரின் இவ்வுரைப் பகுதி அவைக் குறிப்பில் இடம் பெறுவது அவை மரபுகளுக்கு மாறான ஒன்று எனக் கருதி, நேற்று இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அவர் தெரிவித்த கருத்துகளும், அமைச்சர் பெருமக்கள் தெரிவித்த கருத்துகளும் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன்.

**திரு. து. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைக்கப்படாமல் தனித் தனி நிருவாகமே செயல்படுகிறது. இது உடனடியாக ஒரே நிருவாகத்தின்கீழ் கொண்டுவரவேண்டும்.

*பிற்பகல் 2–55*

புதிய அரசுக் கல்லூரிகள் துவக்குவது குறித்து அறிவிப்புகள் ஏதும் இல்லை. பல்கலைக்கழக ஆசிரியர்கள் போல, அனைத்துக் கல்லூரி ஆசிரியர்களும் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த வேண்டும். தொழில்நுட்பப் பாடங்களுடன் கல்லூரி மாணவர்களுக்குத் தனித் திறன் வளர்ச்சிபெறும் மொழித் திறன் வளர்ச்சி குறித்த திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் கல்வி சார்ந்த கல்லூரி ஒன்று அரசு சார்பில் நிறுவப்படவேண்டும். அதன்மூலம் ஏழையெளிய மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் கல்வி கற்க வாய்ப்பு ஏற்படும்.

சிறு, குறு தொழிற்சாலைகள் மின்வெட்டால் பாதிக்கப்பட்டுள்ளன. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், இந்தத் தொழிற்சாலைகளில் மின்காந்த உலை உடனடியாக அமைக்கவேண்டுமெனச் சொல்கிறது. அவை அமைக்கின்ற வரையிலும் ஏற்கெனவே இருக்கின்ற உலைகளைப் பயன்படுத்தித் தொழிற்சாலைகளை இயக்குவதற்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும். அதற்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து கொடுக்கப்படும் கடும் நெருக்கடியை அரசு தடுத்து நிறுத்தவேண்டும்.

தமிழகத்தில் உள்ள பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான உதிரி பாகங்களை முழுக்க முழுக்க வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றன. அதில் குறைந்தபட்சம் 30 சதவீதம் உதிரி பாகங்களாவது சிறு சிறு தொழிற்சாலைகளிலிருந்து கொள்முதல் செய்யவேண்டும் என அரசு உத்தரவிடவேண்டும்.

கிராமப் பகுதிகளில் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் 15 சதவீதம் இடங்களை சிறு, குறு தொழிற்சாலைப் பகுதியாக வரையறை செய்து அறிவிக்கவேண்டும்.

கிரானைட் மற்றும் நூற்பாலைகள் சிறு, குறு தொழிலாகத்தான் நடைபெற்று வருகின்றன. எனவே, 2008 முதல் வழங்கப்படுகின்ற தொழில் முதலீட்டு மானியத்தை இவற்றிற்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவல் துறைக்குப் பல்வேறு சலுகைகள் அளித்திருக்கின்றார்கள். எனது செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் ஜனவரி மாதத்தில் மட்டும் இரண்டு பேர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். பிப்ரவரி மாதத்தில் மறைமலைநகரில் ஓய்வு பெற்ற சப்–கலெக்டர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். அதேபோல் செங்கல்பட்டு தொகுதியில் ஜனவரி மாதத்தில் மட்டும் 15 சங்கிலி அறுப்புகள் நடைபெற்றுள்ளன. மூன்று மாதக் காலத்தில் என்னுடைய செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகர்ப்பகுதியில் மட்டும் பல சங்கிலி அறுப்புச் சம்பவங்கள் நடந்துள்ளன. கொலை செய்யும் கொலைக்காரர்களை, காவல் துறை நேரடியாக இதுவரை கைது செய்யவில்லை. அவர்கள் நேரடியாக நீதிமன்றம் சென்று சரணடைந்துவிடுகிறார்கள். உண்மைக் கொலையாளிகள் யாரென்று தெரியவில்லை. கொலைகாரர்களைக் காவல் துறை கைது செய்வதற்குமுன் நீதிமன்றத்தில் சரணடையும்வரை துப்புத் துலக்குவதில் ஏன் காலம் தாழ்த்துகிறார்கள் என்பது தெரியவில்லை.

2012 ஆம் ஆண்டில் மக்கள் தொகையின்படி பார்க்கின்றபோது, இலட்சக்கணக்கான போலிக் குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளது தெள்ளத் தெளிவாகின்றது. இதுபோன்ற போலி அட்டைகளால் பயன்படுகின்ற சுயநலவாதிகளைத் தடுத்து, அரசுக்கு உணவு மானிய இழப்பைக் குறைத்திட ஸ்மார்ட் கார்டு





திட்டம் கொண்டுவரப்படும் எனக் கடந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டது. இதுவரையில் அந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வரவில்லை. எப்போது வருமென்பது தெரியவில்லை.

தேசிய நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் நிறைய உணவகங்கள் உள்ளன. அந்த உணவகங்களில் தரமோ, சுகாதாரமோ, சுவையோ, சுத்தமோ இல்லாமல் இருப்பதை தர ஆய்வாளர்கள் கண்டுபிடித்து நடவடிக்கையும் எடுப்பதில்லை. அரசுப் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் திட்டமிட்டு அங்கே நிறுத்தப்படுகின்றன. பேருந்து நின்றவுடன் பயணிகளைக் கீழே இறக்கி உள்ளே அழைத்துச்சென்று கட்டாய செலவு செய்ய வைக்கின்றனர். வெளியில் விற்கின்ற விலைக்கும் மேற்படி உணவகங்களில் விற்கின்ற விலைக்கும் உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவிற்குமான வித்தியாசமாக உள்ளது. எனவே, மேற்படி உணவகங்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அவர்களுக்கு வேண்டிய உணவகங்கள், அவர்களுடைய உணவகங்களில் நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் அரசுப் பேருந்துகள் நிறுத்துவதற்கு உத்தரவிடப்பட்டு, அந்தப் பேருந்துகள் எல்லாம் அங்கு நின்று சென்றன. மூன்றாவது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்று போக்குவரத்துத் துறையை மேம்படுத்தவேண்டும், தேசிய நெடுஞ்சாலையில் இருக்கின்ற உணவகங்களுக்குண்டான கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டுமென்று உத்தரவிட்டு டெண்டர்மூலம் யார், யார் இந்த டெண்டரிலே கலந்துகொள்கிறார்களோ அவர்களுக்கு அந்தப் பேருந்துகள் நிறுத்துவதற்குக் கட்டணங்கள் விதிக்கப்பட்டு ஓராண்டில் மட்டும் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு இதன்மூலம் 5 கோடி ரூபாய் வருமானத்தை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றுத் தருகின்ற உத்தரவை வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. வி. செந்தில் பாலாஜி] [2012 மார்ச் 30

பிற்பகல் 3–00

பாட்டில்களில், அது குடிநீராக இருந்தாலும் சரி அல்லது குளிர் பானங்களாக இருந்தாலும் சரி, என்ன விலை அதில் பொறிக்கப்பட்டிருக்கிறதோ அதற்குண்டான விலைகளுக்கு மட்டுமே விற்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த விடுதிகளில், எந்தெந்த உணவகங்களில் இதுபோன்று அதிகமான விலைக்கு விற்கப்படுகிறதென்று எழுதிக் கொடுப்பார்களானால் அந்த உணவகங்களின்மீது கண்டிப்பாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து, இதுவரை இல்லாத ஒரு வரலாறு, ஒப்பந்தப்புள்ளிகள்மூலம் உணவகங்களுக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டு ஓராண்டில் மட்டும் போக்குவரத்துக் கழகத்திற்கு 5 கோடி ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது சிறு, குறு தொழில் அதிபர்களுக்கு வழங்கியதைப்போல ஸ்பின்னிங் மில்லுக்கும் ஜெனரேட்டர் மானியம் வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். 11–11–2008 வரை யார் ஜெனரேட்டர் வாங்கியிருந்தாலும் 320 கே.வி.ஏ.–க்கு உட்பட்டவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்கு அப்ளிகேஷன் கொடுக்காமல் இருந்தாலும்கூட, இன்னும் மூன்று மாதக் காலம் தொடர்ந்து அனுமதியைக் கொடுத்திருக்கின்றார்கள். அப்படி யாராவது 320 கே.வி.ஏ. ஜெனரேட்டர் வைத்திருப்பார்களேயானால், அவர்கள் உடனடியாக அப்ளிகேஷன் கொடுத்து, அதன்மூலம் பலன் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2012 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது செங்கல்பட்டு மாவட்டத்தில் 2, 3 கொலைகள் நடந்திருக்கின்றன என்று சொன்னார்கள். இதற்கு முன்பிருந்த ஆட்சிக் காலத்திலே நாம் பார்த்திருப்போம். அசையும் சொத்துகளைத்தான் திருடுவது வழக்கம். ஆனால், அசையா சொத்துகளாக இருக்கின்ற சொத்துகளிலே ஏற்படுகிற சண்டைச்சச்சரவின் காரணமாக—100 மடங்கு இன்றைக்கு விலை உயர்ந்த காரணத்தின் அடிப்படையிலேதான்—இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இதைக் கவனமாக ஏற்று, கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் 2–4–2012 (திங்கட்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

12. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தின் நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

14. 2011–2012 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

*15. 2011–2012* ஆம் ஆண்டு "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. *(தமிழ், ஆங்கிலம்)*

*16. 2011–2012* ஆம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை. *(தமிழ், ஆங்கிலம்)*

*17. 2012–2013* ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி. *(தமிழ், ஆங்கிலம்)*

*18. 2012–2013* ஆம் ஆண்டு "உடனடிச் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. *(தமிழ், ஆங்கிலம்)*

****